# வாழைச்சேனையின் வரலாற்று விழுமியங்கள்



நூலாசிரியர்:

**கலாபூசணம் தாழை செல்வநாயகம்.**

(ஆளுநர் விருது, தேசிய சாஹித்திய விருது, கலைஞர் விருதுகள் ஆகியன பெற்றவர்.)

வாழைச்சேனை - இலங்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழைச்சேனையின்

# வரலாற்று விழுமியங்கள்

-நூலாசிரியர்-

**கலாபூஷணம் தாழை செல்வநாயகம்**

(ஆளுநர் விருது, தேசிய சாஹித்திய விருது,
கலைஞர் விருதுகள் ஆகியன பெற்றவர்.)
(இலங்கை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலின் பெயர்: வாழைச்சேனையின் வரலாற்று விழுமியங்கள்.

நூலின் தன்மை : வரலாற்று ஆய்வு.

நூலாசிரியர் : தாழை செல்வநாயகம்.

பக்கங்கள் : X + 122 + 21

முதற்பதிப்பு : 2010 ஆகஸ்ட்

பதிப்புரை : ஆசிரியருக்கு.

அச்சிட்டோர் : ஆதவன் அச்சகம்,
அரசடி, மட்டக்களப்பு.

விலை : 245/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவர்களின் பாதங்களுக்கு



# இந்நூல் சமர்ப்பணம்



## "வாழைச்சேனையின் வரலாற்று விழுமியங்கள்"

என்னும் இந்நூலினை இப்பிரதேசத்தில் நீண்ட பல வருடங்களாக

**"விஷக்கடி வைத்தியராகவும், பாம்பு வைத்தியராகவும், பணிபுரிந்து வந்த பாரம்பரிய வைத்தியரும், சின்னவப்போடி பரிசாரியாரியின் கத்தறையைச் சேர்ந்தவருமாகிய"**

**அமரர். சி. கணபதிப்பிள்ளை வைத்தியருக்கும்**

(சாஸ்திரியர்)

**அமரர்களான பி.சோமநாதன்**

(ஆயுர்வேத வைத்தியர்)

**அமரர்களான திரு.திருமதி. சி.ப. முத்தையா தெய்வானைப்பிள்ளை**

(ஆயுர்வேத வைத்தியர்களுக்கும்)

**பொ.சோமநாதன் கண்ணகை** (ஆ.வைத்)

**பிரபல முறிவுவைத்தியரான**

**அமரர். கே.எஸ்.தாராளசிங்கம்**

அவர்களுக்கும்
சமர்ப்பணம் செய்கிறேன்.


**கலாபூஷணம்**
**தாழைசெல்வநாயகம்**

**கல்குடா வீதி, பேத்தாழை,**
**வாழைச்சேனை,**
**இலங்கை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அணிந்துரை

**"வாழைச்சேனையின் வரலாற்று விழும்பங்கள்"** என்னும் வரலாற்று நூலிற்கு அணிந்துரை வழங்குவதில் உளம் மலர்ந்த இதயபூர்வமான மகிழ்ச்சி அடைபவர்களில் நானும் ஒருவனாயுள்ளேன் என்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

நினைவுகளின் படிவங்கள் சிலவேளைகளில் வடிவங்களாகி அவை சமூகத்தின் விடிவுக்கான வடிகால்கள் ஆகிவிட்டால், அவை மகிழ்ச்சி தரும் மலர்கள் ஆகிவிடும்.

எண்ணங்கள் செயல்களாகி பழக்கமாகி ஏற்றுக் கொள்ளப்படும் பண்புகளாக வரும்போது விதிகளாகவும் மாறிவிடுகின்றன. வரலாற்றின் திரிபுகளும் இதற்கு விதிவிலக்கல்ல.

**திரு.தாழை செல்வநாயகத்தின்** நீண்டநாள் கனவுதான் நனவாகி, மரத்தில் தோன்றும் மலர்போன்று, பட்டையில் கிளை தோன்றி, அதில் முகிழ், அரும்பு (கன்னி, முகை, மொட்டு) என்னும் படிகளின் மேல் மலராகி மணம் வீசும்போது சமூகம் மலர்ச்சி கொள்ளும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

இப்படியான ஒரு நிகழ்வு நடக்காதா? என ஏங்கி நீண்ட நாள் கனவு கண்டவனில் நானும் ஒருவன். இந்நிலையில் கோறளைப்பற்று பிரதேச கலாசாரப் பேரவையின் நீண்டகால வெளியீடுகளில் தொடர்பு பட்டிருந்த கலாசார உத்தியோகத்தர் திரு,கே.எஸ்.சிவகுமார் அவர்களை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோறளைப்பற்று வரலாறு தொடர்பில் சில வருடங்களுக்கு முன் சில குறிப்புக்களைச் சொல்வதற்கு **இளம்பரிதி** சஞ்சிகை வெளியீட்டு விழாவில் எனக்கு சந்தர்ப்பம் கிடைத்தது. அவ்விழாவிலே தாழை செல்வநாயகம் அவர்கள் பங்கு பற்றிய காலம் முதல் இவ்வரலாற்றுத் தொகுதியின் அத்திவாரம் அவர் மனதில் இறுக்கமாகப் பதிந்திருக்க வேண்டும் என நினைக்கிறேன்.

வாழைச்சேனையின் வரலாறு சில நூறு வருடங்கள் என்று மட்டிட முடியாவிட்டாலும், முடிந்த அளவில் பல நூறு வருட காலங்களின் வரலாறுகளை தாழை செல்வநாயகம் இங்கு திரட்டித் தந்திருக்கிறார். இது ஒரு ஆரம்பமே அல்லாது முடிவல்ல. அடியெடுத்துக் கொடுத்திருக்கும் அவர்பணியில் பலருக்கு கூட சந்தர்ப்பம் வாய்த்திருக்கிறது. அவர் பணியைத் தொடர்ந்து எழுதி வருவதற்கு இலக்கிய, வரலாற்று ஆர்வலர்கள் முன்வர வேண்டும்.

கேரளத்துச் சாயல் பூத்திருக்கும் மட்டக்களப்பின் வடகோடியோரம் அந்நாளில் நேரடி வியாபாரம் நடந்ததும், கப்பலும் ஓட்டி கலாசாரம் வளர்த்த பெருமக்கள் செய்யாத வேலையை தாழை செல்வநாயகம் சளைக்காமல் செய்தவர் என்னும் பெருமையினை இந்நூலினை எழுதியதன் மூலம் பெறுகின்றார்.

வாழ்ந்தவர்கள் வீழ்ந்து விட்டாலும், வாழ்பவர்களுக்கு சில மாத்திரைகள் அவர் தருகிறார். எதிர்காலத்தின் வரலாற்று ஆய்வு மாணவர்கள், எழுத்தாளர்கள், பேராளர்கள் யாவருக்கும் இந்த வரலாற்று நூல் முதல்படிக்கல்லாக அமையும் என்பதில் ஐயமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வரலாற்று தொகுதியின் திருத்தங்களும், சேர்க்கைகளும், அவரால் நிச்சயம் வரவேற்கப்படும் என நாம் நம்பலாம். தொடர்ந்து தரமான திருத்தமான வரலாற்றை வெளியீடு செய்யும் பொறுப்பை தரும்போது வாழும் மூத்த பரம்பரையினர் பொறுப்பேற்க வேண்டிய அவசியம் இங்கு சுட்டிக்காட்டப்படுவது அவசியமாகிறது.

வாழைச்சேனை வரலாற்றில் காற்றோடு கலந்து போன அம்சங்கள் மிகப்பல. அவற்றைத் திரட்டிச் சேகரித்து புத்தகம் போடுவது மிகச் சிலரால்தான் முடிகிறது. சவால்கள் நிறைந்த உலகில் வெளியீட்டையும் ஒரு சவாலாகக் கொள்ள வேண்டியிருக்கிறது.

என்னதான் இலத்திரனியல் ஊடகங்களின் வளர்ச்சி ஏற்பட்டிருப்பினும் மனம்தானே வாழ்வின் கதாநாயகன். மனதிலிருந்த பல விடயங்களையும், மற்றையோர் வழங்கிய பல தகவல்களையும் வடிவதாக்கி இங்கு நூலாக தந்திருக்கும் நமது பிரதேசத்தின் எழுத்தாளரும், கலாபூஷணம் விருது, ஆளுநர் விருது, சாஹித்திய விருது, கலைஞர் கௌரவ விருதுகள் பலவற்றிற்கு சொந்தக்காரருமான தாழை செல்வநாயகம் பல படிமானங்களை உடையவர் எனக் கூறி இந்நூலுக்கு அணிந்துரை வழங்குவதில் பெருமையடைகிறேன்.

நன்றி

**மு.தவராசா BSc. (Hons)**
25/10, அரசடிப்பிள்ளையார் கோவில் வீதி,
மட்டக்களப்பு.
2010.06.07.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்னுரை

நான் இப்பிரதேசத்தின் வரலாற்றினை எழுத வேண்டும், என்று ஒருபோதும் நினைக்கவில்லை. ஏனெனில் வரலாற்றினை எழுதியவர்களுக்கு இதுவரையில் கிடைத்துள்ள வசைமாரிகள் பற்றியும் நான் அறியாமல் இல்லை. தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களால் கூட எழுதப்படும் ஒரு பிரதேசத்தின் வரலாறு முற்றுப் பெறுவதில்லை. என்பதுகூட எனக்குத் தெரியும். இதுவரையில் எந்தவொரு வரலாறும் முற்றாக ஆராயப்படவில்லை. நான் எனது இளமைக் காலங்களில் ஒரு கலைப்பித்தனாகவே காணப்பட்டேன். வாழைச்சேனைப் பிரதேசத்தில் "டிராமா" நாடகக்கலையில் பெயர் பெற்ற பல நாடக ஆசிரியர்கள் இருந்துள்ளனர். அவர்களுள் சபாபதியர், பழணித்தம்பி, போன்றவ ၊ களும் அந்த டிராமாக்களில் நடித்தவர்களான, வவுண்கணபதியார், ஆறுமுகம் வாத்தியார் (சாமித்தம்பி வாத்தியார்), திருமதி. தெய்வானை சங்கரப்பிள்ளை, கோணாமலையர் (க.கதிர்காமத்தம்பி) நொண்டியர், கதிர்காமத்தம்பி, பொட்டைக்கண் இராசையா போன்றோர்களையும் எனக்கு இன்றுவரையும் ஞாபகமாயுள்ளது.

தென்னை ஓலைகளால் கொட்டகைகள் அமைக்கப்பட்டு (25) இருபத்தைந்து சத நுழைவுச் சீட்டுக்களுடன் விடிய விடிய இந்த ட்ராமாக்கள் நடைபெறும். தொடர்ந்து கிழமைக் கணக்காகவும், மாதக் கணக்கிலும் நடைபெறும். என்னைப் போன்ற சிறியவர்களுக்கு நுளைவுக் கட்டணம் இல்லை. தந்தை தாய்மார்களுடன் கூடச் செல்லவேண்டும். இதனைப் பயன்படுத்தி நான் நாள் தவறாமல் நாடகங்களைக் கண்டு களித்துள்ளேன். எனது தாய், தந்தையர் வராத நாட்களில், மாமாமார்களினதோ,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கத்து வீட்டுப் பெரியாட்களினதோ கையினைப் பிடித்துக் கொண்டு உள்நுழைந்து அனுபவித்துள்ளேன். அநேகமாக "வள்ளிதிருமணம்" என்ற நாடகமே நடக்கும். இந்நாடகத்தில் முருகனாக நடித்தவர் காலஞ்சென்ற ஆறுமுகம் வாத்தியார். தோகைமயில்மேல் அவர் அமர்ந்திருக்கும் காட்சி அசல் முருகன் போன்றே தோற்றமளிக்கும்.

அதேபோன்று இப்பிரதேசத்தில் பெயர் பெற்ற கூத்துப் பழக்கும் அண்ணாவிமார்களும் இருந்துள்ளனர். அவர்களுள் பேத்தாழைக் கிராமத்தில் வாழ்ந்த வைரமுத்து அண்ணாவியார் ஒருவர் (இவரை எனக்குத் தெரியாது ஏனைய அண்ணாவிமார்கள் வாயிலாக அறிந்துள்ளேன். இவரிடம்தான் இப்பிரதேசத்தின் அண்ணாவிமார்கள் பலர் கூத்துக் கலையினைப் பயின்றுள்ளனர். இவர் தனது மந்திர சக்தியால் கூத்து நடைபெறும் கலரியில், மத்தளத்தையும் உடைக்கும் வல்லமையுடைவராகத் திகழ்ந்தார் என்பதனையும் அறிந்துள்ளேன். அதேபோன்று வாழைச்சேனை கிராமத்தில் வாழ்ந்த அமரர். விநாயகம் அண்ணாவியார் பெயர் பெற்றவராக இருந்தார். இவருக்கு கோபம் வந்துவிட்டால் அவரது கண்களிரண்டும், கொச்சிப்பழங்களின் நிறத்தில் காணப்படும்.

இந்த அண்ணாவியார் சூரசங்காரம் என்னும் கூத்தினை, 1953 களில் வாழைச்சேனை அரசினர் சிரேஸ்ட பாடசாலை (தற்போது இந்துக்கல்லூரி) மாணவர்களைக் கொண்டு பழக்கி, ஆடவைத்து கண்டி நகர் வரையில் சென்று பரிசும் பெற்றும் கொடுத்தவர். இவரது ஞாபகார்த்தமாக இந்துக்கல்லூரி மைதானத்தில் "அண்ணாவியார் அரங்கு" ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. காலவரையில் அது அழிக்கப்பட்டுவிட்டது. அது மீண்டும் அமைக்கப்பட வேண்டும். எனவே நான் அக்காலங்களில் நாடகப் பைத்தியமாகவே இருந்தேன். எனக்கு பத்து வயது என



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைக்கின்றேன். வாழைச்சேனை விபுலாநந்த வீதியில் உள்ள தாமோதிரியரின் வளவில் (அந்த இடம் அக்காலத்தில் "மகுடிவெட்டை" அல்லது "ஊஞ்சல்வெட்டை" என அழைக்கப்பட்டது. அமரர். கு. சாமித்தம்பி ஆசிரியர் (குசாவர்) அவர்களால் "விளையாட்டுக் கல்யாணம்" என்றொரு நாடகத்தைப் பயிற்றுவித்து சித்திரை வருடப்பிறப்பினையடுத்த நாளொன்றில் மேடையேற்றினார். மேடை அவ்வளவு உயரத்தில் போடப்படவில்லை. நிலத்தோடுதான் நாடகம் நடைபெற்றது. அதில் வரும் மாணவனாக நான் நடித்தது இன்று ஞாபகமாயுள்ளது.

நான் இந்துக்கல்லூரியில் மாணவனாயிருந்த காலத்தில் வாழைச்சேனையில் கம்பன் கலா மன்றத்தினை நானே அதற்குப் பெயர்சூட்டி உருவாக்கி என்னுடன் கூடிய சக நண்பர்களுடன் பல நாடகங்களை நடித்துள்ளேன். அப்போது 1960 களில் எனக்குப் பதினான்கு (14) வயது. அதில் பெயர் பெற்ற நாடகம் "மூடியதிரை" அதில் கதாநாயகனாக நானே நடித்துள்ளேன். அந்நாடகத்தின் மேடையேற்றத்தின்போது நான்கு அடி உயரமான பாரிய மேடை அமைக்கப்பட்டது. ஆரையம்பதியிலிருந்து இசைக்கோஷ்டியும், "சுந்தரம்ஸ்" ஒலி ஒளிக் குழுவும் அழைக்கப்பட்டிருந்தது. அந் நாடகத்தின் சண்டைக் காட்சிகளை மேசன் சண்முகம் என்னும் திரு. சண்முகநாதன் (ஆரையம்பதி) பயிற்றுவித்தார். அதன் டைரக்டராக திரு.சுந்தரலிங்கம் (காகித ஆலையில் வேலை செய்தவர், அரையம்பதியைச் சேர்ந்தவர்) பயிற்றுவித்தார். நாடகத்திற்கான சீன்ஸ்கள் (பூந்தோட்டம், அரண்மனை, முன்திரை ஆகியன) பதுளையைச் சேர்ந்த திரு.க.பொன்னையா என்பவரிடமிருந்து ரெயில் வண்டி மூலம் பெறப்பட்டது. அதற்கான வாடகை 30 ரூபாய்கள் எம்மால் வழங்கப்பட்டது. (1963 இல்) இதேபோன்ற இன்னும் பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடகமன்றங்கள் கோறளைப் பற்றுப் பிரதேசத்தில் இயங்கி வந்தன. அவைகள் இந்நூலின் உள்ளே விரிவாக எழுதப்பட்டுள்ளன.

நான் 1967 இல் வன அதிகாரியாக தொழில் பெற்ற பின்னர் நான் தொழில்புரிந்த பிரதேசங்களை மையப்படுத்தி அப்பிரதேசங்களைக் கதைப்புலமாக்கி பல சிறுகதைகளையும், நாடகங்களையும் எழுத ஆரம்பித்தேன். அவற்றில் பல சர்வதேச பரிசுகளையும் மாவட்ட, தேசிய மட்ட பரிசுகளையும் பெற்றன. எனது "தோடம்பழக்காசி" என்ற சிறுகதை 2009 இல் கலாசார தேசிய உரிமைகள் அமைச்சின் தேசிய விருதான சாஹித்திய விருதினைப் பெற்றது. எனது எழுத்துத்துறை மூலம் பிரதேச செயலகம், மாவட்டச் செயலகம், ஆகியவற்றின் மூலம் கலைஞர் விருதுகள் இரண்டு கிடைக்கப்பெற்றன. கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் அமைச்சின் மூலம் 2007 இல் ஆளுநர் விருது, கிடைத்தது. இந்து கலாசார அமைச்சின் கலாபூஷணவிருது 2008 இல் கிடைத்தது.

அத்துடன் பாடசாலை தமிழ்த்தினப் போட்டிகளுக்கான நடுவர்களில் ஒருவராகவும், பாடசாலை, கோட்ட, வலைய, மாவட்ட, மாகாண மட்டங்கள் வரையில் கடமையாற்றியுள்ளேன். பாடசாலைகளால் 2008 இலிருந்து வெளியிடப்படும் கையெழுத்துச் சஞ்சிகைகளுக்கும், நடுவர் குழுவில் ஒருவராக கடமைபுரிந்து வருகிறேன். எமது பிரதேச பாடசாலைகளில் வெளியிடப்படும் பாடசாலை சஞ்சிகைகளுக்கான ஆய்வுரைகளையும் வழங்கியுள்ளேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைத்துறையில் எனது எழுத்துப் பணியை முன்னிட்டு பல்கலைக்கழக மாணவர்கள் பட்டம் பெறும் மாணவர்கள். கல்விக்கல்லூரி மாணவர்கள் பலர் எனது எழுத்தாக்கங்களை ஆய்வு செய்து கட்டுரை வெளியிட்டு பட்டம் பெற்றுள்ளனர்.

எனது கலைச்சேவை எழுத்துப்பணி, ஆகியவற்றை நன்கு அறிந்த, கல்குடா வலயக் கல்விப் பணிப்பாளர் **திருமதி. சுபாஜினி சக்கரவர்த்தி** அவர்களும், தற்போது ஆபிரிக்ககென்யா நைரோபியில் இலங்கைத் தூதுவராகக் (உதவி) உள்ளவரும், முன்னாள் மட்டக்களப்பு மாவட்ட செயலக மேலதிக அரசாங்க அதிபருமாகிய எமது பிரதேசத்தைச் சேர்ந்த **திரு. கணபதிப்பிள்ளை மகேசன்** என்பரும், என்னைக் கேட்டதற்கிணங்க நான் கோறளைப்பற்றுப் பிரதேசத்தின் வரலாற்றினை எழுதத் துணிந்துள்ளேன். என்பதனைக் கூறிக் கொள்ள விரும்பகின்றேன்.

அதன்படி இந்நூல் உருவாகியுள்ளது. வரலாறு பிழையாகவும், குறையாகவும் படிப்பவர்களுக்குத் தென்படலாம். அவ்வேளைகளில் எனக்கு வசைமாரி பொழியாமல், திருத்தங்கள் மேற்கொள்ள ஆலோசனை வழங்கி உதவுமாறு வேண்டுகின்றேன். தங்கள் ஆலோசனைகளும், மேலதிகமான விளக்கங்களும் கிடைக்கப்பெறின், திருத்திய வரலாற்றுப் பதிப்பு வெளிவரும், எனவும் கூறிக் கொள்கிறேன். இவ் வரலாற்று நூலினை எழுதுவதற்கு எனக்கு உதவி புரிந்த அனைவருக்கும் நான் என்றும் கடமைப்பட்டவனாயுள்ளேன். அவர்களது பெயர் விபரங்கள் நூலின் இறுதிப்பக்கங்களில் எழுதப்பட்டுள்ளன. இந்நூலுக்கான உசாத்துணைகளும் சேர்க்கப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூலினை முழுமையான வரலாற்றினைக் கூறும் நூலாக நான் கருதவில்லை. எமது ஊர் வரலாறு திரிபுபடுத்தப்பட்டு எழுதப்பட்டுள்ளதாக பல அறிஞர்களும், பெரியோர்களும் என்னிடம் புகாரிட்டனர். நான் அத்தகையதொரு நூலினை இதுவரையில் கண்ணுற்றது மில்லை **"வரலாறு என்பது எவருக்கும் சொந்தமானதல்ல, அதேபோன்று கூறப்படும் கருத்துக்களும் எவருக்கும் சொந்தமானதும் அல்ல"** எனவும் ஓர் அறிஞன் கூறியதை நான் படித்துள்ளேன்.

காலத்திற்கு காலம் மட்டக்களப்பு வரலாறுகளும், பல வராலாற்று ஆசிரியர்களால் எழுதப்பட்டுள்ளன. மட்டக்களப்பின் வரலாறு அல்லது பூர்வீக சரித்திரம் பற்றிக் கூறுகின்ற நான்கு ஏடுகள் காணப்படுகின்றன. பல கையெழுத்துப் பிரதிகள் உள்ளன. ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமான சம்பவங்களைக் கூறுகின்ற போதிலும், எல்லாவற்றினதும் நோக்கம் வரலாறு திரிபுடாது அமைய வேண்டும் என்பதில் திடமாயிருந்தமையை அறிய முடிகின்றது. அத்துடன் மூலக்கரு ஒன்றாகவுள்ளன.

ஏற்கனவே 1997 இல் இப்பகுதியின் பிரபல்யமான ஆசிரியர், அதிபராக கடமைபுரிந்தவரும் சிறந்த அரசியல், சமயச் சொற்பொழிவாளருமாகிய அமரர். திருமதி.சி.ப. தங்கத்துரை அவர்கள் **"வாழைச்சேனை ஸ்ரீ கயிலாயப்பிள்ளையார் ஆலய வரலாறு"** என்னும் தொகுப்பு நூல் ஒன்றினை வெளியிட்டுள்ளார். என்பது அனைவருக்கும் தெரிந்ததே. ஆனால் இந்நூல் வெறும் ஆலய வரலாறுகள் மாத்திரம் கூறாமல், சகல வரலாற்றுப் பின்னணிகளையும் ஒன்று சேர்த்துப் பிழிந்து எடுத்த சாறாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

இந்நூல் நான் எழுதும் மூன்றாவது நூல். ஏற்கனவே **"ஏதிலிகள்"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் சிறுகதைத் தொகுப்பு நூல் ஒன்றினையும். (மணிமேகலை பிரசுரத்தில் அச்சிடப்பட்டு. கொழும்பு தமிழ்ச் சங்க மண்டபத்தில் வெளியிடப்பட்டது.) 2008 (ETDRC) "**ஈழம் வருகிறான் பாரதி**" என்னும் நாடக நூல் (06 நாடகங்கள்) ஒன்றினையும் (இதுவும் தமிழ் நாட்டில் அச்சிடப்பட்டு பேத்தாழை கலாசார மண்டபத்தின் திறப்பு விழாவின்போது (11.07.2009) கிழக்கு மாகாண முதலமைச்சர் கௌரவ.சி.சந்திரகாந்தன் அவர்களால் வெளியிடப்பட்டது.) வெளியிட்டுள்ளேன். எனது மறு முயற்சியாகவே இந்நூல் அமைந்துள்ளது. என்பதில் பெருமையடைகின்றேன்.

எனது "**நாகமரச்சோலை**" என்னும் வரலாற்று நாவல் ஒன்றும் "**வள்ளியம்மன் நாடகம்**" என்னும் வடமோடிக் கூத்து தொகுப்பு நூல் ஒன்றும், "**நக்கல்சோறு**" என்னும் சிறுகதைத் தொகுப்பு நூலும் விரைவில் வெளிவரவுள்ளன. முக்கியமாக இந்நூலுக்கு அத்திவாரக்கல் நாட்டி அணிந்துரை வழங்கிய திரு.மு.தவராசா - முன்னாள் அதிபர் அவர்களுக்கும், எனது முயற்சிகளுக்கு ஆதரவு வழங்கும் அனைத்துப் பெருமக்களுக்கும், எனது வணக்கமும் வாழ்த்துக்களும் கிடைக்க வேண்டுகிறேன். குறிப்பாக இந் நூலை அழகுற அச்சிட்ட ஆதவன் அச்சக ஊழியர்களுக்கும், கலாநிதி. வை. வீரசிங்கம் அவர்களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகட்டும்.

நன்றி

**அன்புடன்.**
**தாழை செல்வநாயகம்.**
**(2010)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் ஒன்று

## பொது நோக்கு

மட்டக்களப்பு பூர்வீக கால வரலாற்றை ஆராயப் போகுமிடத்து, அதன் வட பிரதேசமான கோறளைப்பற்று பிரதேசத்தின் வரலாறும் அடங்கியுள்ளது. மட்டக்களப்பு மாவட்டத்தின் இன்றைய அரசியல் பரிபாலன பிரிவின்படி பதினான்கு (14) பிரதேச செயலாளர் பிரிவுகள் உள்ளடக்கப்படுகின்றன. அவையாவன

01. போரதீவுப்பற்று
02. மண்முனை தென் மேற்கு
03. மண்முனை தெற்கும் எருவில் பற்று
04. மண்முனை மேற்கு
05. மண்முனைப்பற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06. மண்முனை வடக்கு
07. ஏறாவூர்பற்று
08. காத்தான்குடி
09. ஏறாவூர் நகர்
10. கோறளைப்பற்று மேற்கு
11. கோறளைப்பற்று தெற்கு
12. கோறளைப்பற்று
13. கோறளைப்பற்று வடக்கு
14. கோறளைப்பற்று மத்தி

அவற்றுள் கோறளைப்பற்றுப் பிரதேசம் ஒரு தனி இடத்தினைப் பெறுகின்றது. மட்டக்களப்பு பிரதேசத்தின் பரந்துபட்ட பெரிய நிலப்பரப்பினையுடையதும், அரச முடிக்குரிய வனப் பிரதேசங்களாகப் பிரகடனப் படுத்தப்பட்ட "குடும்பிமலை வன ஒதுக்கல் காட்டுப்பிரதேசம் (Reservation Forest) இது கோறளைதெற்கு பிரதேச செயலாளர் பிரிவில், மேற்குப் பகுதியை அண்டியுள்ளது. இப்பிரதேசம் சிங்களவர்களால் "தொப்பிகல" எனப்படுகின்றது. ஆங்கிலத்தில் இப்பிரதேசம் Baran's Cap (பரன்ஸ் கப்) எனப்படுகின்றது. நில அளவைத் திணைக்களத்தின் ஓரங்குலப் படத்தில் இப்பிரதேசம் Baran's Cap என்றே குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் மட்டக்களப்பில் தேசாதிபதியாக இருந்த "பாரன்ஸ்" என்பவனின் தொப்பி போன்று குடும்பிமலை தோற்றமளித்ததனால் Baran's Cap என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. இதனையே சிங்களவர்கள் "தொப்பிகல" (தொப்பிபோன்ற கல்) எனக் குறிப்பிட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த மலையின் உச்சத்தில் ஒரு பிள்ளையார் கோவில் அமைந்துள்ளது. இக்கோயில் அமைந்த காலம் சரியாக தெரியவில்லையாயினும் எப்படியும் 200 வருட காலப் பழைமை வாய்ந்ததாகும். அப்பிரதேசத்தில் கால்நடை வளர்ப்பிற்காகவும், சேனைப் பயிர்ச்செய்கை, மிருகவேட்டை, நெல் விவசாயம், தேன் எடுத்தல், ஆகியவற்றின் நோக்கங்களுக்காகவும் வந்தாறுமூலை, சித்தாண்டி, முறக்கொட்டான்சேனை, சந்திவெளி, கிரான், கோரகல்லிமடு ஆகிய பிரதேசங்களிலிருந்து குடிபெயர்ந்து சென்றவர்களினாலேயே இக்கோவில் அமைக்கப்பட்டதாக இப்பிரதேசத்தில், இம் மலையடிவாரத்தில் நிலைவாடியில் குடியிருந்த அமரர். முத்துவேலர் அவர்கள் என்னிடம் தெரிவித்தார். இவர் பூசாரி பரம்பரையில் வந்தவர். இவரது மக்களில் ஒருவர் பூசாரியாகவும், ஒருவர் பாம்பு வைத்தியத்தில் கைதேர்ந்தவராயும் இருந்துள்ளதை நான் நன்கு அறிதுள்ளேன்.

குடும்பிமலையைச் சுற்றியுள்ள (500) ஐநூறு ஏக்கர் வரையிலான அடர்ந்த இயற்கை காட்டுப்பிரதேசம், தடைசெய்யப்பட்ட காட்டுப்பிரதேசமாகவும், வன ஜீவராசிகளுக்கு ஒதுக்கப்பட்ட காட்டுப் பிரதேசமாகவும் பிரகடனப்படுத்தப்பட்டது. நான் மட்-வன வேலைத்திட்டப் பகுதியில் வன அதிகாரியாக (B.F.O. Working Plan) கடமையாற்றிய 1975 ஆம் ஆண்டு காலப்பகுதியில், இப்பிரதேசம் என்னால் நில அளவை செய்யப்பட்டு வர்ணக்கட்டைகளால் சுற்றிவர எல்லைப் படுத்தப்பட்டது.

இம்மலையின் உச்சத்தில் நின்று பார்த்தால், கல்குடா, பாசிக்குடாக் கடலும், பனிச்சங்கேணிப் பாலம், கடல் ஆகியன நன்கு தெரியும். இம்மலையின் உச்ச மேற்கு பகுதியில் ஒரு குகை அமைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனுள் சுமார் ஐம்பது பேர்கள் அளவிலாவது பாதுகாப்பாக அமர்ந்திருக்க முடியும். அக்காலத்தில் அக்குகையினுள் "சின்னத்தம்பிச் சாமியார்" என்ற ஒரு முனிவர், சடாமுடி தாடியுடன் அக்குகையினுள் அமர்ந்திருந்தார். அக் குகையினைச் சுற்றிவர அவரின் உபயோகத்திற்காக கஞ்சா மூலிகைச் செடிகளை பயிரிட்டிருந்தார்.

காலவரையில் அக்குகை, ஆயுதக்குழு ஒன்றின் அரணாகவும், மறைவிடமாகவும் செயற்பட்டது. அதன் பின்னர் இலங்கை அரசின் இராணுவம் தொப்பிகலைப் பகுதியினைத் தம்வசப்படுத்திய பின்னர் தற்போது வரையில் அவர்களது தளமாகவுள்ளது. மலையின் உச்சத்தில், இலங்கையின் தேசியக் கொடியும், பறக்கவிடப்பட்டுள்ளது. ஆரம்ப காலத்தில் இம்மலையின் உச்சத்திற்குச் செல்பவர்கள் மலையருகாமையில் நின்று கொண்டிருந்த "வீர" மரமொன்றின் உதவியுடன்தான் ஏறவேண்டியிருந்தது, அதன்பின்பு இரும்பிலான ஏணி பொருத்தப்பட்டுள்ளது. மலையின் கீழ்ப்பகுதியில் ஒரு கற்கிணறும், அம்மன் கோவில் ஒன்றும் அமைந்துள்ளது. இக்கிணற்று நீர் சுண்ணாம்புத் தன்மை நிரம்பியதாயுள்ளது.

கோறளைப்பற்றுப் பிரதேசத்திலிருந்து வடபகுதியான வாகரை, தென்பகுதியான கிரான், கோறளை மத்தி, கோறளை மேற்கு (வாழைச்சேனை, ஓட்டமாவடி) மூஸ்லீம்கள் வாழும் பகுதிகள் ஆகியன பிரிந்து சென்ற பின்னர், கோறளைப்பற்று வாழைச்சேனைப் பிரதேசத்தின் நிலப்பரப்பு குறைவடைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்போது இப்பிரதேசத்தினுள்

01. கல்குடா
02. பேத்தாழை (வடக்கு, தெற்கு)
03. வாழைச்சேனை தமிழ்
04. நாசிவன்தீவு
05. சுங்கான்கேணி
06. கிண்ணையடி
07. மீராவோடை தமிழ்
08. புதுக்குடியிருப்பு.
09. கண்ணகிபுரம்.
10. கும்புறுமூலை
11. கல்மடு
12. கறுவாக்கேணி

ஆகிய 12 கிராம சேவகர்கள் பிரிவுகளை உள்ளடக்கிய நிலப்பரப்பாக உள்ளது. இதன்

| | | |
|---|---|---|
| **விஸ்தீரணம்** | **47.55** | **Km** |
| **மக்கள் தொகை** | **22,385** | **பேர்கள்** |
| **குடும்பங்களின் தொகை** | **6636** | |
| **ஆண்கள்** | **10773** | **பேர்கள்** |
| **பெண்கள்** | **11612** | **பேர்கள்** |
| **இப்பிரதேசத்தினுள் வசிக்கும்** | | |
| **முஸ்லீம்கள்** | **25** | **பேர்கள்** |
| **சிங்களவர்கள்** | **42** | **பேர்கள்** |
| **ஏனையவர்கள்** | **151** | **பேர்கள்** |

*மட்டக்களப்பு பிரதேசமானது, கண்டிக்கு நேர் கிழக்காகவும், இதன்* வடக்குத் தெற்கு 150 மைல் நீளமாகவும், கிழக்கு மேற்காக 60



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைல் நீளமானதாகவும் உள்ளது. மட்டக்களப்பு பிரதேசத்தின் விஸ்தீரணம் 6700 சதுர மைல்கள்.

**மட்டக்களப்பு வரலாற்றில் கோறளைப்பற்றுப் பிரதேசம் வகிக்கும் பங்கு:-**
மட்டக்களப்பு பிரதேசத்தின் முழுமையான வரலாற்றினை 16ம் நூற்றாண்டு காலப்பகுதியிலிருந்தே ஓரளவு அறியக் கூடியதாயுள்ளது. குறிப்பாக அன்னியர்களான போர்த்துக்கீசர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆகியோர்களின் காலடி பதிந்தபின்னரேயே இப்பிரதேசத்தின் வரலாறு, எழுத்து மூலம் எழுதப்பட்ட நிலையினைக் காணமுடிகின்றது.

மட்டக்களப்பினை ஆட்சி புரிந்த மன்னர்களிடமிருந்து போர்த்துக்கீச அதிகாரிகள் 30( அவுண் நெல்லினை திறையாகப் பெற்றதாக ஒரு குறிப்பு உள்ளது. போர்த்துக்கீச நிர்வாக ஆவணங்கள் 1582 - 1599 குறிப்பிடுகின்றது.. இப்பகுதியின் தற்கால வழக்குப்படி ஒரு அவுண் என்பது 30 மரைக்கால் என்பதாகும். ($7^1/_2$ புசல்) அல்லது மூன்று சாக்கு.

"புவனேயவாகு" மன்னனின் மனைவி கர்ப்பம் உண்டாகியபோது "பிரசன்னசித்து மன்னன்" மகிழ்ச்சி கொண்டு அவனுக்கு ஒரு நகரை உண்டாக்கக் கருதி வடக்கில் குமுக்கன் வெட்டுவாய்க்காலும், தெற்கில் மாணிக்க கங்கையும், மேற்கில் கடவத்தை நாடும், கிழக்கில் கடலும் உள்ள கிராமத்தையுண்டாக்கி கவடாமலையில் மாளிகைகட்டி, புவனேய கயவாகுவுக்கு கைலஞ்சமாகக் கொடுத்து, அரசாளச் செய்தான். என்று வரலாற்றுக் குறிப்புகள் கூறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக் குறிப்பில் வரும் பிரதேசம் கோறளைப்பற்றுப் பகுதியினையே குறிப்பதாகவுள்ளது என்பது தெட்டத் தெளிவாக விளங்குகின்றது. இக் குறிப்பில் வரும், குமுக்கன், மாணிக்க கங்கை, கடவத்தை கடல், கவடா மலை என்பன எமது பிரதேசத்தில் அடங்குவதாயுள்ளதனை அறிய முடிகின்றது. (வேறு ஒரு பிரதேசத்தினையும் குறிப்பிடலாம். வரலாற்று ஆய்வாளர்கள் இதனை தெளிவுபடுத்த வேண்டும்) கோறளைப்பற்றுப் பிரதேசத்திலிருந்து பிரிபட்ட கோறளை வடக்கு (வாகரை)ப் பிரிவில் கவடாகல்மலை, படிவெட்டியமலை, (72, கற்களில் வரிசையாக செதுக்கப்பட்ட படிகள் உள்ளன.) நாகம்பூ மலை, காட்டுத்தேங்கா கல்மலை, ஆகிய வனப்பிரதேசங்கள் இலங்கை அரசின் வனபரிபாலனத் திணைக்களத்தினால் 1914 ஆம் ஆண்டு தொடக்கம் 1975 ஆம் ஆண்டு வரை அழிக்கப்பட்டு சேனைப் பயிர் செய்வோர்களுக்கு மானிய அடிப்படையில் தலா ஐந்து (05) ஏக்கர்கள் வீதம் வழங்கப்பட்டு மூன்று (03) வருட ஒப்பந்தத்தில் மீள்வனமாக்கல் (Reforestation) திட்டத்தில் வழங்கப்பட்டு வந்தன.

இவ்வகையில் தேக்கு, மூங்கில், யூக்கலிப்றஸ், சவுக்கு, பக்கீஸ், வேம்பு, புளியமரம், ஆகியன வளர்க்கப்பட்டு சுமார் (15) பதினையாயிரம் ஏக்கருக்குமேல் மீள் காடுவளர்ப்பு பிரதேசமாக இருந்து வந்தன. எனினும் சூறாவளி, மரக்கடத்தல்காரர்கள், கடதாசி ஆலையின் கடதாசி உற்பத்தி, வன்செயல், பாதுகாப்பு படையினரின் காவல் அரண் அமைக்கும் பணிகள், யானை, மரை, மான் போன்ற காட்டு மிருகங்கள் ஆகியவற்றினால் முற்று முழுதாக அழிவடைந்து போயுள்ளன. தற்போது இப்பிரதேசங்கள் வெறும் தரிசாக வெட்டை வெளியாகவுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோறளைப்பற்று பிரதேசத்தின் (புணாணை) மேற்கு எல்லையிலிருந்து வடக்குப்பக்கமாக நோக்கின் படிவெட்டினமலை, நாகம்பூமலை, கவுடா கல்மலை ஆகியன தென்படும். இதில் படிவெட்டிய மலையானது மட்டக்களப்பு - கொழும்பு பிரதான பாதையில் புணாணையிலிருந்து வடபுறமாக (2) இரண்டு மைல்கள் தூரத்தில் உள்ளது. நாகம்பூமலை (5) ஐந்து மைல் தூரத்தில் உள்ளது. கவுடாகல் மலை (7) ஏழு மைல்கள் தொலை தூரத்தில் உள்ளது.

கவுடாகல் மலையில் இராச தானியிருந்தற்கான அத்தாட்சிகள் உள்ளன. அரண்மனை இருந்த இடம் "பொக்கண" கல்லில் அமைக்கப்பட்ட கிணறு, (3) மூன்று கற்றூண்கள் அம்மி போன்ற அமைப்பில் கல்மஞ்சனங்கள் புதையல் எடுப்பதற்காக தோண்டப்பட்ட அத்தாட்சிகள் தூர்ந்து போன கற்பாதை ஆகியனவும் உள்ளன. இதேபோன்று படிவெட்டிய மலையிலும் மலையில் உச்சிக்கு ஏறுவதற்கான ஒழுங்கு நிரையில் செதுக்கிய படிகள் (எண்ணிக்கை 72) அரண்மனை அமைக்கப்பட்டிருந்த இடங்கள், கல்மலையில் தோண்டப்பட்ட கிணறு, குளிப்பதற்கான இடம், மந்திரவாதிகளால் புதையல் எடுக்கத் தோண்டிய இடங்கள் ஆகியன காட்சியளிக்கின்றன. இப்பிரதேசம் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களால், உரிய முறையில் இன்னும் ஆய்வு செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கதே.

படிவெட்டிய மலை பற்றி தொல்லியல் பட்டம் பெற்றவரும், மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராக இருந்தவரும், எழுத்தாளருமாகிய க. தங்கேஸ்வரி என்பவரும் சிறிது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிட்டுள்ளார். எனினும் இம்மலை பற்றி விரிவாக ஆராயவில்லை. மாருதசேனனுடைய புத்திரன், எதிர்மனசிங்கன் என்பவன் மட்டக்களப்பை ஆண்டபோது வர்த்தகசாலைகள், வைத்தியசாலைகள் ஆகியவற்றை மட்டக்களப்பு உன்னசகிரி, போர்முனை நாடு, மண்முனை, கோறளை நாடு, ஆகியவற்றை ஏற்படுத்தி ஏரிகளைத் திருத்தி கழனிகளில் செந்நெல் விழையும்படி செய்தான். என்ற வரலாற்றுக் குறிப்பின்படி, கோறளை நாடு என்கின்ற கோறளைப்பற்றுப் பிரதேசம் குறிப்பிடப்படுவது நோக்கற்பாலதே.

பண்டைய மன்னர் ஆட்சிக்காலத்தில், இருந்த மக்களை ஈமத்தாழிகளில் அடக்கம் செய்ததற்கான ஆதாரங்கள் உள்ளதாக ஆய்வாளர்களின் கருத்தாயுள்ளது. "தாழிக்காடு" என்கின்ற புத்தளம், பொன்மரிப்பு என்ற பகுதியில் ஈமத்தாழிகளில் இறந்தவர்களை அடக்கம் செய்தனர். என்றும் 8000 ஈமத்தாழிகள் இங்கே கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என்றும், 1997 இல் செய்யப்பட்ட ஓர் ஆய்வு கூறுகின்றது. 12000 பேர்கள் இவ்வாறு ஈமத்தாழிகளில் அடக்கம் செய்யப்பட்டுள்ளதாகவும் வரலாற்று ஆய்வாளர்களின் கருத்தாயுள்ளது.

இந்தவகையில் பார்க்குமிடத்து கோறளைப்பற்றின் வட பிரதேசமான வாகரைப்பிரிவு கதிரவெளியிலும் ஈமத்தாழிச் சின்னங்கள் காணப்பட்டதாகவும் கதிர் தணிகாசலம் என்பவர் எழுதிய "தமிழர் வரலாறும் இலங்கை இடப்பெயர் ஆய்வும்" என்ற நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒல்லாந்தர் ஆட்சிக்காலப்பகுதியை எடுத்துக்கொண்டால் அவர்கள், மட்டக்களப்பை இரு பகுதிகளாகப் பிரித்து, தெற்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தப்போடியையும், வடக்கை அறுமக்குட்டியையும், நிலமைப் போடியாக நியமனஞ் செய்தனர். அறுமைக்குட்டி கோறளைப்பற்றினையும் ஆட்சி செய்தான் என்று குறிப்பிடப்பட்டுள்ள்து.

மேற் கூறப்பட்டவைகள் (500) ஐநூறு வருடகாலத்து வரலாறுகள் கோறளை திசாவ, பட்டங்கட்டி, விதான, உடையார், வன்னியன் ஆகிய பதவிப் பெயர்கள் அன்னியர் ஆட்சியினையடுத்து வந்த மன்னர் ஆட்சியில் ஏற்பட்ட பட்டப்பெயர்கள் ஒவ்வொரு பெரிய, சிறிய நிலப்பரப்புக்களைப் பரிபாலித்த அதிகாரிகளுக்கே மேற்படி பெயர்கள் சூட்டப்பட்டன. அதன் காரணமாக பல கோறளைகள் ஏறாவூர் மண்முனை, பொத்துவில், பாணாமை, விந்தனை, போன்ற பிரதேசங்களுக்கு நியமனம் பெற்றிருந்தனர். அதன் காரணமாகவே எமது பிரதேசமும், கோறளைப்பற்று என்ற பெயர் ஏற்படக் காரணமாயிருந்தது.

**வாழைச்சேனை என்ற பெயர் ஏற்படக் காரணமாயிருந்த காரணிகள்**

இவ்வூரின் முன்னைய பெயர் "காக்கைப்பள்ளி" என்றும் "மருங்கையடிப்பூவல்" என்றும் வழக்கிலிருந்துள்ளன. அந்நாளில் எழுதப்பட்ட இவ்வூர் காணி உறுதிகளில் மேற்படி பெயர்களைக் காண முடிகின்றது. இப்பகுதியில் வசித்து வந்த ஆதிக்குடிகள் சிலர் "வலஸ்ஹேன" என்ற பெயரே மருவி வாழைச்சேனையாகியது என்று கூறியுள்ளனர். அந்நாளில் இப்பிரதேசம் சோலைக் காடுகளாக இருந்ததால் கரடிகள் அதிகம் நடமாடியதாகவும், (சிங்களத்தில் வலஹா என்பது கரடியைக் குறிக்கும்) கூறப்பட்டது. காடுகள் அழிக்கப்பட்டு சேனைகள் ஆக்கப்பட்டதனால் இந்தச் சேனைகளில் கரடிகள் நடமாடியதாகவும் ஒரு சாராரின் கருத்தாயுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எது எவ்வாறாயினும் வாழை மரங்கள் நிறைந்த சேனையே வாழைச்சேனையாகியது என்பது பெரும்பாலானோரின் முடிவாக உள்ளது.

## பூர்வீக வரலாறு

பூர்வீக காலத்தில் வாழைச்சேனைப் பிரதேசத்தின் எல்லைகள் வடக்கே மாங்கேணியையும், தெற்கே கும்புறுமூலையையும், மேற்கே வாகனேரி புணானைப்பகுதி வரையிலும் வியாபித்திருந்தது, இதன் கிழக்கு எல்லை வங்காளக்கடல். 1505 பராக்கிரமபாகு மன்னன் காலத்தில் போர்த்துக்கீசர் கப்பலில் கடல்வழியாக இலங்கைத்துறை (இலங்கைத்துறை) யினை வந்து அடைந்தார்கள். அக்காலத்தில் மகாவலி கங்கையின் கரையில் வெருகல் கதிர்காமசாமி கோயிலை உருவாக்கி வழிபட்டு வந்த ஆதிக் குடிகளான வேடுவர்கள் அங்கே வசித்து வந்தார்கள். அப்போது அவர்களால்தான் சுவாமி தூக்குதல், சூரக வேட்டையாடல் போன்ற காரியங்களைச் செய்து வந்தார்கள். கோயிலும் அவர்களுக்கே சொந்தமாயிருந்தது.

1623 இல் போர்த்துக்கீசரால் துரத்தப்பட்டு வந்த முஸ்லீம்கள் ஏழுபேருக்கு, முக்குவர்கள் பெண் கொடுத்து காத்தான்குடியில் குடியமர்த்தி அவர்களைக் கொண்டு மட்டக்களப்பு திமிலைத்தீவிலிருந்த திமிலர்களை அடித்துத் துரத்தியதுடன் அவர்களில் ஒருவனான "பத்தி" என்பவனை சித்திரவதை செய்து பாலை மரத்தில் தூக்கியதாகவும், அவன் பெயராலேயே இன்றும் அப்பாலை மரமானது "பத்தியத்தூக்கிய பாலை" என்ற பெயருடன் மாங்கேணியில் உள்ளது. (தற்போது இல்லை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திமிலர்கள் பனிச்சங்கேணிக்கு அப்பால் துரத்தப்பட்டதுடன், இதற்கு அப்பால் நீங்கள் வரக்கூடாது என்று கருங்கல்தூண் ஒன்றினையும் நட்டதாக கூறப்பட்டுள்ளது. அந்தத் தூண் நாட்டிய இடமே "தூணடி" என்று இன்றும் பெயர் வழங்கி வருகின்றது. வெருகல் கோயிலை வேடர்கள் வழிபட்டுவந்த பின்னர், நல்லைநாதன் செட்டியாரின் கனவில் தோன்றிய கதைக்கு ஏற்ப வெருகல் சித்திரவேலாயுதக் கோயிலைக் கட்டியதாகவும் அதன் பின்னர், வாழைச்சேனை மக்கள் பரம்பரையில் வந்த கதிரவேலி கந்தப்பன், என்பவர் உம்முணித்தம்பி அவர்களையும் சேர்த்துக் கொண்டு மேளவாத்தியங்களுடன் 17ம் திருவிழாவினைச் செய்து வந்தனர். என்றும் அத்திருவிழாவே வாழைச்சேனைத் திருவிழாவாகவும், இன்று வரையில் வெருகல் கோயில் நடைமுறையில் உள்ளது. போத்துக்கீசரின் ஆதிக்கம் உச்சக்கட்டத்திலிருந்தபோது இந்தியா வேலூரிலிருந்து வந்த பறங்கியர், வெந்தூஸ் என்பவனின் தலைமையில் கப்பலில் வந்து இறங்கினார்கள். தனது மொழிபெயர்ப்பாளருடன் வந்த, வெந்தூஸ் என்ற பறங்கி, தான்கொண்டுவந்த ஒரு தங்க மாம்பழத்தை அங்கு நின்றிருந்த கதிராமன் என்கின்ற அதிகாரியிடம் கொடுத்து உரையாடினான். தாங்கள் யுத்தம் செய்வதற்காக இங்கு வரவில்லை என்றும், உங்களுடன் வியாபாரம் செய்வதற்காகவே வந்துள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

அதன்படி கறுவா, சாதிக்காய், கருங்காலி மரங்கள், யானைக்குட்டி என்பவைகளைத் தங்களுக்குத் தருமாறும், அதற்குப் பதிலாக தங்கக் கட்டிகைளத் தருவதாகவும் கூறி ஒப்பந்தம் செய்தனர். இதனைக் கதிர்காமன் அதிகாரியும் ஏற்றுக் கொண்டனர். இதன்படி வியாபாரம் தொடர்ந்து நடைபெற்றது. அதன் பின்னர் போர்த்துக்கீசர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்போது ஜோண்பிள்ளைக்குச் சொந்தமான (அதன் பின்பு காந்திகுமார் ஜோண்பிள்ளையின் பெயரில் உள்ள இந்த இடம், இலங்கை அரசின் பாதுகாப்பு அரணாகவுள்ளது) கருங்காலிச்சோலை என்ற இடத்தில் "கிட்டங்கி" எனப்படும் பண்டகசாலை ஒன்றை அமைத்து, அங்கு வந்து சேரும் பொதிகளை யானை வண்டிகளில் ஏற்றி, கத்தியன்பள்ளம், கறுவாக்கேணி, சுங்கான்கேணி, சாமந்தன்கேணி, ஐயன்கேணி, கருவேப்பங்கேணி, வழியாக கொண்டு சென்று பாய்க்கப்பலில் ஏற்றுமதி செய்ததாகவும் வரலாறு உள்ளது.

சில காலங்களின் பின்பு, கதிராமன் அதிகாரி, வேளாண்மை செய்து வந்தான். (தற்போது காகித ஆலையின் பின்னால் உள்ள வயல் நிலங்கள்) தியாவட்டவான் வயல்பக்கமாக 1582 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கரலியட்ட பண்டாரன் யமசிங்கன் கோணப்பு பண்டாரன் ஆகியவர்கள் கிறிஸ்தவர்களாக மாறிய காலத்தில், போர்த்துக்கீசரால் பெயர் சூட்டப்பட்ட தொன்பிலிப்பு தொன்சுவான் போன்றவர்கள் வேளாண்மை செய்து வந்தார்கள். அத்துடன் தாமிருந்த இடங்களில் கதிராமன் அதிகாரியிடமிருந்து பெற்ற புளிய மரங்களின் கொட்டை (விதைகள்) களை, நாட்டியும் இருக்கின்றார்கள். அவர்கள் வேளாண்மை செய்த இடங்கள், அவர்களின் பெயர்களாலேயே இன்றும் அழைக்கப்படுகின்றது. இதற்கு உதாரணமாக "நாசுவான்" என்பவன் நாசிவன்தீவிலும், அடம்படி வட்டவானிலும் (தற்போது இப்பகுதி வயல்களில் அநேகமானவை முஸ்லீம் விவசாயிகளுக்கு சொந்தமாயுள்ளன) "சுவான்" என்பவன் சுவர்ண தீவிலும் "மன்று" மன்று உசப்புத்தீவிலும் "வாக்கன்" வாகநேரியிலும் "கஞ்சான்" கஞ்சன் வெளியிலும், "வக்கிளான்" வகிளாவளையிலும், "மீயான்" மீயாங்குளத்திலும் இருந்து வேளாண்மை செய்திருக்கின்றனர் என்பது வரலாறு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பகுதி வயல்களில் விழைந்த நெல்லினை வகிளாவளையில் அமைக்கப்பட்டிருந்த கிட்டங்கியில் (பண்டகசாலை எனப்படும், நெல் ஸ்ரோர்) சேகரித்து வைத்திருந்தது. யானை வண்டிகளின் மூலம் கருங்காலிச் சோலை கிட்டங்கிக்கு கொண்டு சென்றனர். இங்கிருந்து பாய்க்கப்பலில் தங்கள் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்தனர்.

1510 ஆம் ஆண்டு காலப்பகுதியில் போர்த்துக்கீசர் இப்பகுதியில் வாழ்ந்த கிராமத்துப் பெண்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தலாயினர். அதன் காரணமாகப் பிறந்த பிள்ளைகளுக்கு அவர்களது பெயர்களை வைத்துள்ளனர்.

**உதாரணமாக** பறங்கிரமுருகன்
பறங்கிர வயிரன்

என்பன போன்ற பெயர்களைக் குறிப்பிடக் கூடியதாக உள்ளது.

இவர்களது வேளாண்மை நிலங்களையடுத்துள்ள பகுதிகள் குளங்களாகவும் இருந்துள்ளன. இதற்கு உதாரணமாக

சாதன் குளம்
மன்றுகட்டுக் குளம்.
பொருக்கன் குளம்.
மீயான் குளம்
வாகநேரிக் குளம்

ஆகியனவாகும்.

"வெந்தூஸ்" என்கின்ற போர்த்துக்கீசப் பறங்கி வந்து இறங்கியதால், வெந்தூஸ்குடா எனவும் பாசிக்குடா எனவும் அழைக்கப்படுகின்ற இடத்தில், கதிராமன் அதிகாரியும் அவனது குடிகளும் வாழ்ந்து வந்த இடத்திற்குப் பக்கமாக ஒரு கோட்டையை அமைக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்குடன் செங்கல் வெட்டிச்சுட்டும் சொறிக்கல், வைரக்கல் என்பன சேகரித்தும் வரும் வேளையில், 1514 இல் "நிலிமாச்" என்னும் போர்த்துக்கீசத் தலைவன் இலங்கையில் ஒரு பண்டக சாலை போதுமானது என்றும் சிங்களவர்களின் உதவியுடன் காலி, கொழும்பு பிரதேசங்களில் வியாபாரத்தை விஸ்தரிக்கத் தீர்மானித்தான். அதனால் இங்கு கட்டப்படவிருந்த கோட்டை கட்டும் எண்ணம் கைவிடப்பட்டது. 1518 இல் கொழும்பில் கோட்டை அமைக்கப்பட்டு வியாபாரம் தொடர்ந்தாக வரலாறு கூறுகின்றது.

இச் செயலினை முகம்மதி வியாபாரிகள் எதிர்த்து வந்தனர். இந்நிலையில் போத்துக்கீச அதிகாரிகள் முகம்மதியர்களைத் தாக்கி அழித்து தீக்கிரையாக்கினர். இந்நிலையில் சினமடைந்த சிங்களவர்களும், முகம்மதியர்களும் சேர்ந்து கொழும்புக் கோட்டையைத் தாக்கினர். அத்தருணத்தில் தமக்கு உதவி புரியவில்லை என்ற காரணத்தினால் போர்த்துக்கீச வீரன், மன்னனான தர்மபராக்கிரமபாகுவைக் கொன்றான். விஜயபாகு கோட்டை மன்னனானான். அவன் கள்ளிக்கோட்டை அரசனான "சாமொரின்" என்பவனின் உதவியுடன் போர்த்துக்கீசரைத் தாக்கினான். சாமொரினது படை பேர்த்துக்கீசரால் தோற்கடிக்கப் பட்டது.

நாடு போர்த்துக்கீசர் வசமாகியது. இலங்கையின் கடற்பகுதி முழுவதும் அவர்கள் வசமாகியது. 1623 இல் போத்துக்சீசர் திருகோணமலைக் கோட்டையை கட்டிமுடித்தனர். அதன்பின்னர் பாசிக்குடாவில் கட்டவிருந்த கோட்டைக்காகச் சேகரித்த கற்களை யானை வண்டி மூலம் மட்டக்களப்புக்கு கோட்டைக்கு (கச்சேரி) முகத்துவாரம் வெட்டி பாய்க்கப்பல் மூலமாகவும் ஏற்றிச் சென்று அதனைக் கட்டினர். மட்டக்களப்பு கோட்டையானது சுண்ணாம்பும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைரக்கல்லும், சொறிக்கல்லும் தேனும் சேர்த்துக் கட்டப்பட்டது. எனக் கூறப்படுகின்றது.

தேன் சேகரித்துக் கொடுத்த கந்தன் என்பவருக்கு வெள்ளியால் செய்யப்பட்ட விருதொன்றும் வழங்கப்பட்டது. அதனை உங்கள் அதிகாரிகளிடம் காண்பித்தால் தேவையானவற்றைப் பெறலாம் என்றும் கூறினார்கள். 1513 இல் கதிர்காமன் அதிகாரியின் சம்மத்துடன் ஆறுமுகத்தான் குடியிருப்பு கறுவாக்கேணி, முறக்கொட்டான்சேனை அமிர்தகழி, முகத்துவாரம், கல்லடி, நாவற்குடா, மஞ்சந்தொடுவாய், ஆரப்பத்தை, காங்கேயன் ஓடை, கல்லாறு, திருக்கோவில் முதலிய இடங்களில் கதிர்காமன் அதிகாரியின் குடிகளின் ஒரு பகுதியினரைக் கொண்டு போய் குடியமர்த்தி அவர்களின் துணையோடு போர்த்சூக்கீசர் தமது வியாபாரத்தை விஸ்த்தரித்தனர். அவ்விடங்களில் எல்லாம் கதிர்காமர், ஆறுமுகம் என்ற பெயர்கள் இன்றும் அதிகமாகக் காணப்படுவதை அறியலாம். அத்துடன் முருகன், வேலன், கந்தன், வள்ளி, தெய்வானை என்ற பெயர்களும் அதிகம் உள்ளதனை அறியமுடிகிறது.

அதன் பின்னர் 1514 இல் போர்த்துக்கீசர் இலங்கை முழுவதிலும் தங்கள் வியாபாரத்தைப் பெருக்கவும், இலங்கையைத் தமது ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவரவும், முஸ்லீம் வியாபாரிகளை இலங்கையை விட்டுத் துரத்தவும், சிங்களவர் உதவியைப் பெறவும், தீர்மானித்து காலி, கொழும்புப் பகுதிகளுக்கு கவனத்தைத் திருப்பினர். அதனால் முன்னர் குறிப்பிட்டபடி பாசிக்குடாவில் கோட்டை ஒன்று அவசியம் இல்லை எனவும் கருங்காலிச்சோலையில் அமைக்கப்பட்ட பண்டகசாலை ஒன்றே போதும் எனவும் போர்த்துக்கீசத் தலைவன் தீர்மானித்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழைச்சேனையில் ஒல்லாந்தர் ஆதிக்கம்

1582 இல் கதிர்காமன் அதிகாரி காலமானதன் பின்னர், அவனுடைய மகன் நம்பன் அதிகாரியாகப் பதவி பெற்றான். அவனுடைய காலத்தில் 1602ல் மட்டக்களப்பு புளியந்தீவு என்னும் இடத்தில் வந்து இறங்கிய "திசா" என்பவன் போரில் வெற்றியடைந்து 1627 இல் மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய பகுதிகளை யாழ்ப்பாணத்தில் உள்ள போர்த்துக்கீச அதிகாரியின் மேற்பார்வையின் கீழ் கொண்டு வந்தான். எனினும் நம்பன் அதிகாரியின் சம்மதத்தையும், உதவியையும் பெற்றுக் கொண்டான். அதன் பின்னர் 1656 வைகாசி மாதம் 12ம் திகதி கொழும்புக் கோட்டையில் ஒல்லாந்தரின் கொடி பறந்தது,

1656 இல் நம்பன் அதிகாரி இறக்க அவனுடைய மகன் கதிர்காமன் அதிகாரியானான். அவனுடைய காலத்தில் 1659இல் மன்னார் கடலில் ஆங்கிலேயக் கப்பல் ஒன்று மோதி உடைந்தது, ஆங்கிலேயர்கள் கடத்தப்பட்டுக் கொண்டுபோய் சிறை வைக்கப்பட்டனர். 1660இல் கொட்டியாரத்தில் வந்திறங்கிய "றொபட்நொக்ஸ்" என்ற மாலுமியையும் அவனைச் சேர்ந்தவர்களையும் கண்டிக்குப் பலவந்தமாக இழுத்துச் சென்று சிறைவைத்ததனையும், கொட்டியாரத்தில் பெரிய புளியமரத்தில் அவன் ஒழித்திருந்ததனையும் பற்றி வரலாற்றுக் குறிப்பில் கூறப்படுகின்றது.

ஒல்லாந்தர் போர்த்துக்கீசரைப் போலல்லாது வயது வந்த ஒவ்வொருவரையும் 682 இறாத்தல் கறுவாவைத் தரும்படியும் அதற்குப் பதிலாக பணமும், அரிசியும், உப்பும் தருவதாக கூறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிர்ப்பந்தித்தனர். கதிராமன் அதிகாரி செய்கை பண்ணிய வயலை மாத்திரம் தவிர்த்து ஏனைய வயல்களையெல்லாம் தென்னிந்தியாவில் இருந்து ஆட்களைக் கொண்டுவந்து செய்கைபண்ணினர். மேலும் தென்னைச்செய்கை ஆடு, மாடு வளர்ப்பிலும் ஈடுபட்டனர். அப்போது தேசவழமைச் சட்டம் கொண்டு வரப்பட்டது. இதனால் சுதேசிகளின் உரிமைகள் குறையத் தொடங்கின. யாழ்ப்பாணம், கொழும்பு, காலி என மூன்று பிரிவுகளாகப் பிரித்து ஒவ்வொரு பிரிவுக்கும் வெவ்வேறு அதிகாரிகளை நியமித்து ஆட்சி செய்தனர். யாழ்பபாணப் பிரிவிற்குள் மன்னார் திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய பிரதேசங்கள் அடங்கியிருந்தன. இதன்படி கோறளைப்பற்றுப் பகுதியும் தேசவழமையின்படி ஆளப்பட்டது.

போர்த்துக்கீசர் காலத்தில் கறுவாச்சோலை எனப்படும் கருங்காலிச் சோலையில் அமைக்கப்பட்டிருந்த பண்டகசாலை அழிக்கப்பட்டது. 1698 இல் வாகநேரியில் கல்லினால் வளை வைத்து பண்டகசாலை ஒன்று அமைக்கப்பட்டது. (தற்போது இது கல்வளை எனப்படுகின்றது) அயலில் உள்ள வயல் நிலங்களில் பெறப்பட்ட நெல்மணிகள் அங்கே சேர்க்கப்பட்டு, யானை வண்டிகள் மூலம் பாசிக்குடாவுக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து பாய்க்கப்பல் மூலம் வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டது. "கல்வளை" என்ற வயல் நிலங்களை "டவுணி" என்ற ஆங்கிலேயன் பின்னர் வாங்கி சொந்தமாக விவசாயம் செய்ததாக கூறப்படுகிறது. தற்போது அவ்வயல் நிலங்கள் மட்டக்களப்பு நிலச் சுவாந்தர்களான சரவணமுத்து குமாரசாமியின் குடும்பத்தினர்களுக்குச் சொந்தமாயுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒல்லாந்தர் கதிர்காமன் அதிகாரிக்கு தேசவழமைப்படி ஆட்சியுரிமையை விட்டுக்கொடுத்து, அவனுடைய உதவியுடன் வேளாண்மை செய்யலாயினர். மத மாற்றத்திற்கு கதிர்காமன் அதிகாரி மறுத்ததனால் இப்பகுதியில் கிறிஸ்தவ தேவாலயமோ, பாடசாலையோ அமைக்கப்படவில்லை. கதிர்காமன் அதிகாரியினால் உற்பத்தி செய்யப்பட்ட நெல், தேங்காய், மற்றும் பொருட்கள் சகலவற்றையும் பெற்றுக் கொண்டு தங்கப் பவுண்களைக் கொடுத்தனர். 1713ம் ஆண்டு ஆடி மாதம் 27ம் திகதி கதிர்காமன் அதிகாரி காலமானார். அதன் பின்னர் அவருடைய மகன் ஆறுமுகம் என்பவருக்குப் "பட்டம் கட்டி" அவருக்கு உதவிபுரிந்து ஒல்லாந்தரின் கடமைகளைச் செய்வதற்கு கருங்காலிச் சோலையின் மேற்குப் புறமாக கோறளையன், சின்னக் கோறளையன், என்னும் இருவரையும் நியமித்தார்கள்.

## வாழைச்சேனை தோன்றிய விதம்

பாசிக்குடாவில் உள்ள தமது தென்னங் காணிகளையெல்லாம் தமது இன சனங்களுக்கு கொடுத்துவிட்டு, ஆறுமுகம் பட்டங்கட்டியும் அவனது தங்கை பத்தநாச்சியும் தங்களது எருமைமாடுகள், பசுமாடுகள் முதலிய அசைவுள்ள சொத்துக்களுடன் கோறளையன் இருக்கும் இடத்திற்கு மேற்குப் புறமாக அமைந்த வீரையடியில் 1767 இல் குடியேறினார்கள். பின்னர் 1772 ஆம் ஆண்டில் பாசிக்குடாவிலிருந்து கொண்டுபோய் கறுவா முதலிய பொருட்களைச் சேகரிப்பதற்காக போர்த்துக்கீசரால் ஆரப்பத்தையில் குடியேற்றப்பட்ட தமது சந்ததியில் உள்ள கண்ணப்பன் என்பவரை அழைத்து வந்து தங்கை பத்தானாச்சிக்கு திருமணம் செய்து வைத்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் பின்னர் ஆறுமுகம் பட்டங்கட்டியும் கண்ணப்பரும், சேர்ந்து தங்கள் தியாவட்டவான் வயலில் வேளாண்மை செய்து கொண்டும் தங்கள் மாடுகளையும், பாசிக்குடாவில் உள்ள தென்னந் தோட்டங்களையும் பராமரித்து வந்தார்கள்.

பாசிக்குடாவிலிருந்து வியாபாரப் பொருட்கள் சேர்ப்பதற்காக, நாவற்குடாவில் போய் குடியேறிய தனது சந்ததியைச் சேர்ந்த ஒரு பெண்ணை, 1777 இல் ஆறுமுகம் பட்டங்கட்டி திருமணஞ் செய்து கொண்டார். பின்னர் தமது மனைவியாருடன் வாழைச்சேனையில் குடியேறி பக்கத்தில் உள்ள பிள்ளையார் கோயிலையும் அமைத்து, வழிபாட்டு வந்தார்.

அதற்கு முன்பு வீரையடியில் ஒரு பிள்ளையாரை வைத்து ஆறுமுகம் பட்டங்கட்டியும் அவரது தங்கையும் (1767) வழிபட்டதுடன் பக்கத்தில் ஒரு பாடசாலையையும் தொடங்கினார்கள். 1776 இல் ஆங்கிலேயரால் போரில் முறியடிக்கப்பட்டு ஒல்லாந்தர் வெளியேறியதும் ஆங்கிலேயர் ஆட்சி தொடங்கியது. அவர்களும் ஆறுமுகம் என்பவரையே, அதிகாரத்தை வழங்கி நியமித்தார்கள். அதனால் ஆறுமுகம் பட்டங்கட்டி தியாவட்டவான் காணியையும், மாடு கண்டுகளையும், சொத்துக்களையும், தனது மைத்துனராகிய கண்ணப்பரின் பராமரிப்பில் விட்டுவிட்டு, தான் நாட்டின் கடமைகளைக் கவனித்து வந்தார்.

ஆறுமுகம் பட்டங்கட்டிக்கு "உமையர்" என்று ஒரு மகனும், தில்லாச்சி தங்கா, சின்னன் என்ற பெண் மக்களும் தங்கை பத்தாச்சிக்கு கண்ணப்பர், கைம்பர், அன்னம்மை, வள்ளியார், கதிராமர் ஆகிய பிள்ளைகள் இருந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுமுகம் பட்டங்கட்டியின் மகன் உமையருக்கும் பத்தநாச்சியின் மகள் வள்ளியாருக்கும் 1805 இல் திருமணம் நடந்தேறியது.

இரண்டு வளவுகள்

எருமை மாடுகள்

பசு மாடுகள்

பொன், வெள்ளி, வெண்கலம் முதலிய அசைவுள்ள சொத்துக்களும், தியாவட்டவான் நெற்காணியும், சீதணமாகக் கொடுக்கப்பட்டன.

அதன் பின்னர் கறுவாக்கேணி பட்டியடியில் பட்டிபோட்டு பசுமாடுகள், எருமை மாடுகளை வைத்திருந்த "கொந்திருவர்" என்பவருக்கு தனது மகள் தில்லைச்சியை மணம்முடித்துக் கொடுத்தார். அவரின் சம்மதமில்லாது, அவர் மகள் தங்காவை, ஒல்லாந்தரால் மதம் மாற்றப்பட்டு உத்தியோகம்பார்த்த தன்னாமுனையில் வசித்து வந்த குடும்பமொன்றில் உள்ள "பசுக்கோல்" என்பவர் இரகசிய விவாகம் செய்து கொண்டார்.

ஆறுமுகம் பட்டங்கட்டி தனது "சின்னன்" என்ற மகளை தனது சந்ததியில் உள்ள ஆரப்பத்தை சிதம்பரநாதப் பரிசாரியாருக்கு 1826இல் விவாகம் செய்து கொடுத்தார். ஆயினும் சிதம்பரப் பரிசாரியாருக்கு நாவற்குடாவில் ஏற்கனவே மணம் முடித்த மனைவியிடத்தில் தம்பிநயினார் என்ற மகனும், கண்மணி என்ற மகளும் இருப்பதனை அறிந்து சின்னனுக்கு வள்ளியம்மை என்ற பெண் குழந்தை பிறந்த பின்னர் விவாகரத்துப் பெறப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் பத்தநாச்சியின் இளையமகன் கதிர்காமர் என்பவரைக் கொண்டுவந்து 1828 இல் மீண்டும் சின்னனுக்கு திருமணஞ்செய்து வைத்து தியாவட்டவான் காணியில் தமக்குரிய பங்கில் அரைவாசிப் பங்கையும், வேறு சில பொருட்களையும் ஆறுமுகம் பட்டங்கட்டி சீதணமாகக் கொடுத்தார்.

சிதம்பரப் பரிசாரிக்குப் பிறந்த வள்ளியம்மைக்கும் வேலப்பச்செட்டியாரின யாழப்பாணத்துப் பெண்சாதியின் மகன் சண்முகத்திற்கும், 1845ம் ஆண்டு ஆவணி மாதம் 12ம் திகதி திருமணம் செய்து வைக்கப்பட்டது.

கதிர்காமருக்கும் சின்னனுக்கும், வீரகத்தி சின்னத்தம்பி, கண்ணம்மை, மாதம்மை, என்னும் பிள்ளைகள் பிறந்தார்கள். வள்ளியார், 1847 ல் பிரசவ வேதனையால் இறந்து விட்டார். அவருக்கு சீதணமாகக் கொடுத்த வளவை கதிர்காமர் வீரகத்தி என்பவர் வேலப்பர் சண்முகத்திடமிருந்து தந்திரமாக எழுதி எடுத்துக் கொண்டார்.

பின்னர் சிதம்பரநாதப் பரிசாரியார், ஆறுமுகம் பட்டங்கட்டியின் வாழைச்சேனைக்கும், கண்ணப்பர் பத்தநாச்சியின் சேனைக்கும் இடையில் உள்ள காட்டை வெட்டித் துப்பரவு செய்து சொந்தமாக்கிக் கொண்டு, வம்மிக் கேணியிலிருந்து கூட்டிவந்த பெண்ணுடன் அங்கே பயிர் செய்து கொண்டு வாழ்ந்தார். தம்முடன் நாவற்குடாப் பெண்சாதியின் மக்கள் மூவரையும் கூட்டி வந்து வைத்துக் கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாகரையில் குடியேற்றம்

மட்டக்களப்பு பெரியதுறை முதலிக்கு அடிமையாய் (புழுக்கை) இருந்தவர்கள் ஒழித்து ஓடி பாலதவணைக் காட்டில் இருக்கிறபோது ஆராய்ச்சியாரும், சிங்கள வேடருடன் திருமணம் செய்து கொண்டு பாலதவணையில் குடியிருந்தார். இவர்கள் அடிமைச் சட்டம் நீக்கப்பட்டதை அறிந்து மாங்கேணியில் உள்ள பிரப்பையடி மடுவில் குடியேறினார்கள். அத்துடன் தாம் வழிபாடு செய்துவந்த பேச்சியம்மனையும் அங்கே வைத்துப் பூசிக்கலாயினர். அங்கே ஆராய்ச்சியின் மகள் நாச்சியும், சிங்கள வேட இனத்துடன் வாழ்ந்து வந்தாள்.

அப்போது மட்டக்களப்பு புளியந்தீவில் உள்ள புளியடிக்குடாவில் இருந்த அந்தோனியார் எனப்படுபவர், வாகரைக்கு மீன்பிடிக்கச் செல்லும் வழியில் பிரப்பையடி மடுவில் நாச்சியை வைத்திருக்கும் ஆராய்சியாளர் வீட்டில் தங்கிப் போவது வழக்கம். அவர் நாச்சியின் மேல் காதல் கொண்டு தனது முதல் மனைவி தாண்டவன் வெளியில் இருக்கவும், கிறிஸ்தவ மதக் கோட்பாடுகளுக்கு மாறாகவும் நாச்சியை திருமணம் செய்து கொண்டார். பின்னர் நாச்சியுடன் சென்று வாகரையிற் குடியேறி அங்கே "சம்பேதுருவானவர்" கோயிலையும் கட்டி எழுப்பினார். அவருக்கு சின்னையா, அல்லது பேதுருப்பிள்ளை செல்லையா, சவரிமுத்து, அனாப்பிள்ளை, தங்காமரியாச்சி என்னும் பெயர்களையுடைய பிள்ளைகள் பிறந்தார்கள். அவர்களின் சந்ததியினரே இன்றுள்ள வாகரையின் கிறிஸ்தவர்களாவர். தற்போது இங்கு எந்தவொரு கிறிஸ்தவக் குடும்பங்களும் குடியிருக்கவில்லை. அண்மைக்கால



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்செயல்களையடுத்து வாழைச்சேனைக்கும் அதற்கு அப்பால் மட்டக்களப்பு வரையிலும் இடம்பெயர்ந்து சென்றுவிட்டனர்.

## முஸ்லீம்களின் வாழைச்சேனைக் குடியேற்றம்

ஆராய்ச்சியாரும் மனைவி மக்களும் ஆறுமுகம் பட்டங்கட்டியின் சேனைக்கு அருகில் குடியிருந்தார்கள். காத்தான்குடியிலிருந்து வந்து குடியேறிய முஸ்லீம்களாகிய அம்மு, சேகுஅலி, வெள்ளையர், அசனார் என்பவர்கள் வெட்டிய சேனைப்பக்கமாக (தற்போது வாழைச்சேனைச் சந்தை இருக்கும் இடத்திற்கு கிழக்குப்பக்கம்) உள்ள காட்டை வெட்டி அங்கே குடியிருந்தார்கள். ஆராச்சியார் தாங்கள் வழிபட்டுவந்த பேச்சியம்மனுக்கும் ஓர் இடத்தை ஒதுக்கிக் கொண்டார்கள்.

சில காலம் செல்ல சிதம்பர நாதப்பரிசாரியின் மகன் தம்பிநயினாருக்கும் ஆராய்ச்சியாருடைய மகளுக்கும் திருமணம் நடந்தேறியது. இவர்களின் காணிக்குத் தென்புறமாக குமாரவேலியர் வந்து காடு வெட்டிக் கொண்டார். அந்த இடத்தில் 1832 இல் காயல்பட்டினத்திலிருந்து வந்த "சேகலியார்" எனப்படும் ஒரு முஸ்லீம் நபர் ஒரு சிறுகடை வைத்தார். பின்னர் அந்த இடத்தை தனக்குச் சொந்தமாக்கிக் கொண்டு காயல் பட்டினத்திலிருந்த தனது மக்களாகிய மேனாகாதர், சுலைமாலெப்பை என்பவர்களையும் வரவழைத்து தம்முடன் வைத்துக் கொண்டு, வியாபாரத்தைக் கவனித்து வந்தார். இச்சந்தர்ப்பத்தில் காத்தான்குடியிலிருந்து வந்து இங்கு குடியேறிய முஸ்லீம்களுடன் மறுவிவாகமும் செய்து கொண்டார். அதில் பிறந்த பிள்ளைகளாகிய இசுமாலெவ்வை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாக்கிர்சாகிபு என்பவர்களையும் வியாபாரத்தில் சேர்த்துக் கொண்டார். அவர்கள் நடத்தி வந்த கடை, பெரிய கடை என்ற பெயரில் அழைக்கப்பட்டு வந்தது.

ஆறுமுகம் பட்டங்கட்டியின் வாழைச்சேனைக்குப் பக்கமாக அவர் சம்மதத்தோடு, காத்தான்குடியிலிருந்து வந்த சேகுஅலி, அசனார், வெள்ளையர், அம்மு ஆகிய முஸ்லீம்கள் 1782 இல் குடியேறினர். செட்டிமாரும், முஸ்லீம்களும் இலங்கையில் நிலம் வாங்க முடியாது என்ற ஒல்லாந்தர் காலச்சட்டம் 1832 இல் நீக்கப்பட்டதை அறிந்த முஸ்லீம்கள், தாங்கள் குடியிருந்த நிலங்களையும் ஏனையவற்றையும் இரகசியமாக வாங்கிக் கொண்டு, (இப்போது முஸ்லீம்கள் வசிக்குமிடம்) ஒரு சிறுபள்ளிவாசலையும் அமைத்துக் கொண்டனர். அத்துடன் வேளாண்மைச் செய்தல், வியாபாரம் போன்றவற்றிலும் ஈடுபட்டனர். கல்குடா வரையில் பிரதான பாதையோரங்களில் முஸ்லீம்களின் தென்னங் காணிகள் இருந்த போதிலும், அங்கு எந்தவொரு முஸ்லீம் குடும்பங்களும், வசிக்கவில்லை. காவலுக்காக தமிழ் குடும்பங்களே இருந்தன.

இராமர் என்பவர், ஆறுமுகம் பட்டங்கட்டியின் சேனையிலிருந்து, சுவாதியும் வேடரும் குடியிருந்த பகுதிகள் வரையிலும் சேனை வெட்டிக் கொண்டார். இராமர் இறந்தபின்னர் ஆங்கிலேயர் ஆட்சியின்போது, ஒரு பகுதி நிலம் எடுக்கப்பட்டு மருந்துச்சாலை (Dispensary) வாடிவீடு, (இது பின்னர் DRO கந்தோராக இயங்கியது) என்பனவும் அவற்றின் நடுவாக மட்டக்களப்பு திருகோணமலைப் பாதையை இணைக்கும் துறையும் (தபால்துறை) அமைக்கப்பட்டது. ஏனைய பகுதிகளை முஸ்லீம்கள் பிடித்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டார்கள். D.R.O. கந்தோர் இயங்கிய கட்டிடம ச.கு. முதலாளிக்கு சொந்தமானது. (சரவணமுத்து குமாரசாமி)

துறைக்காரன், உலகர், விநாசியர், சின்னவர் ஆகியோர் ஆறுமுகம் பட்டங்கட்டியின் சேனைக்குத் தென்கிழக்கில், குடியேறினர். இதற்குப் பக்கமாக வீறியர், ஆல்வாடிக்கந்தன், குஞ்சிக்கந்தன், இந்தியக் கறுப்பர், சீனியர், யாழ்ப்பாணக்குடும்பி வேலிப்பிள்ளை, வண்டிற்காரச் சண்முகம், ஆகியோர் குடியேறினர்.

பின்னர் ஆராய்ச்சியின் மகன் ஒருவனும் மற்றவர்களும் சேர்ந்து பேச்சியம்மனை வைத்து வழிபட்டனர். (தற்போது உள்ள இடம்)

## கல்குடாவில் தென்னைப் பயிர்ச் செய்கை

ஆறுமுகம் பட்டங்கட்டி இறந்ததும் அவருடைய மகன் "உமையர்" என்பவர் 1830 இல் விதானையாக (பொலிஸ் தலைவன்) நியமிக்கப்பட்டார். எவரும் நிலம் வாங்கலாம் என்ற சட்டம் கொண்டு வரப்பட்டதும், அவர் தமது பரம்பரைச் சொத்தான தியாவட்டவான் காணி முழுவதற்கும் தனது மைத்துனர் கதிர்காமருக்குக் கொடுக்கப்பட்ட பங்கையும் சேர்த்து தன்னுடைய பெயரில் 1832 இல் உறுதி முடித்துக் கொண்டார். தனக்குச் சீதனமாகக் கொடுக்கப்பட்ட காணிக்கும், உறுதி முடிக்கப்பட்டதை அறிந்த கதிராமர் மீறாவோடைப் பகுதியில் தனக்கு ஒரு காணியைத் தேடிக் கொண்டார். அக்காணி தற்போதும் கதிராமன்ர உம்மாரி (முன்மாரி) என வழங்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உமையர்" இறந்த பின்னர் ஆல்வாடியார் என்பவர் விதானையானார். அதன் பின்னர் யாழ்ப்பாணத்திலிருந்து வந்த குடும்பி வேலிப்பிள்ளையர் என்பவர் விதானையானார். பின்னர் தம்பி நயினாரும் அதனைத் தொடர்ந்து கதிராமர் சின்னத்தம்பி என்பவரும் 1900ம் ஆண்டில் விதானையானார். அவர்களுக்குப்பின்னர் 1907 இல் இப்பிரதேசம் பல கிராமங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பகுதிக்கும் விதானைமார் நியமிக்கப்பட்டனர்.

காலவரையில் கதிராமர் சின்னத்தம்பி என்பவர் தனது தமையன் வீரகத்தியுடன் சேர்ந்து பாசிக்குடாவில் நிலம் வாங்கி தென்னை, கரும்பு, வாழை முதலிய பயிர்களை வளர்த்தும், வேளாண்மை செய்து கால் நடைகள் வளர்த்தும் முன்மாதி காட்டினர். இவர்கள் உற்பத்தி செய்த தேங்காய்களையும், கொப்பிறாவாகவும், தங்கப் பவுண் கொடுத்து வாங்கிய அரசாங்கம் ஜேர்மனி போன்ற பிற நாடுகளுக்கும் தமது நாட்டிற்கும் நீராவிக்கப்பல் மூலம் ஏற்றுமதி செய்தனர். எண்ணெய்க்காகவும், விசுக்கோத்துகள் செய்வதற்காகவும், தேங்காய்கள் பயன்படுத்தப்பட்டதால், மற்றவர்களையும் இத்தொழிலைச் செய்யுமாறு, அரசாங்கம் ஊக்கப்படுத்தியது. அதனால் சந்தியாவர், குமாரவேலியர், மார்க்கண்டுமுதலியார் ஆகியோரும்

"ஸ்கொட்" "சோட்டன்"
"டவுணி" "வேக்கவுஸ்"
"மன்று"

முதலிய வெள்ளைக்காரர்களும் பாசிக்குடாவில் தென்னந் தோட்டங்களை உண்டாக்கி, தேங்காய்களை அரசாங்கத்திற்கு விற்றனர். "சோட்டன்துரை" என்பவருக்கு சொந்தமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்னந்தோட்டம் 500 (ஐநூறு) ஏக்கர் விஸ்தீரணம் உடையது. பாசிக்குடா குளிக்குமிடத்திலிருந்து பேத்தாழை கருங்காலிச் சோலை வீதி வரையிலும் பரந்திருந்தது. அதன் பின்பு அத்தோட்டம் தென்னை அபிவிருத்திச் சபைக்கும் (Coconut Board) ஹோட்டல் கூட்டுத்தாபனங்களுக்கும் சொந்தமாகியது. தற்போது சுனாமியின் பின்னர், பாசிக்குடாவிருந்து இடம்பெயர்ந்து வந்தவர்களின் சுனாமி குடியேற்றத்திட்டமாய் அமைந்துள்ளது.

தென்னைப்பயிர்ச் செய்கையினால் அதிக பிரயோசனம் கிடைக்கின்றது என அறிந்த ஆங்கிலேயர் தென்னைப் பயிர் செய்கையினை விஸ்தரித்தார்கள். ஆயினும் இலங்கை சுதந்திரம் பெற்ற பின்னர் தெங்குச் செய்கை முக்கியத்துவம் பெறாததால் வீழ்ச்சியடைந்தது.

ஆங்கிலேய காலத்தில் கல்குடாப்பகுதியில் உள்ள நிலங்கள் தென்னை செய்கையில் ஈடுபட்ட உள்ளூர் தமிழ், முஸ்லீம்களுக்கும், சிங்களவர்களுக்கும் ஒரு ஏக்கர் ஒரு பவுண் (பத்து ரூபாய்கள்) என்ற அடிப்படையில் காணிகள் பிரித்து வழங்கப்பட்டன. தென்னைப் பயிர்ச் செய்கைக்காக முஸ்லீம்கள் காணிகள் வாங்கிய போதிலும் அவர்கள் அக் காணிகளில் குடியிருக்கவில்லை. தமிழ் தொழிலாளர்களை வைத்தே வேலை செய்தனர்.

அப்படி வழங்கப்பட்ட காணிகளை தம்பிராசா போஸ்மாஸ்டர் முனைக்கணபதியர், நாவற்குடா நாகப்பர் மரியாம்பிள்ளை (மாசிலார்) ஆறுமுகத்தார், கைகுத்தியர் அழகரெத்தினம், அகமது லெவ்வை, ஈசாலெப்பை, சீனிமுகம்மது, லெவ்வைத்தம்பி ஆகியோர் பெற்று தென்னைச் செய்கையில் ஈடுபட்டனர். (இதில் சாப்பன் எனப்படும் மீரா சாஹிப் என்பவரும் அடங்குவார்.) இன்னும் பலரது பெயர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதில் குறிப்பிடப்படவில்லை. செனிவிரட்ண என்பவரும் இதில் குறிப்பிடப்பட வேண்டியவர். (58 வன் செயலுக்கு இவரது மரணம் வழி வகுத்தது.)

இதில் குறிப்பிடப்படும் மரியான்பிள்ளை என்ற தனவந்தர் (மாசிலார்) மட்டக்களப்பிலிருந்து பேத்தாழைக் கிராமத்திற்கு வந்து, இக் கிராமத்தில் உள்ள வேட்டுவக் குடும்பத்துப் பெண்ணை (ஆனையரின் மகள் வள்ளி அல்லது நாகமுத்து) இரண்டாம் தாரமாக மணம் முடித்தவர். தென்னைச் செய்கையில் ஈடுபட்டதுடன் ஊர் மக்கள் பலருக்கு தொழில் வசதிகளையும், ஏற்படுத்திக் கொடுத்தவர். இக்கிராமத்தின் சேனைப் பயிர்ச் செய்கையாளர்களுக்கும் நிதி வழங்கி, சோளன் கொட்டைகளை அவர்களிடமிருந்து பெற்று அரசாஙகத்திற்கு வழங்கி வந்தார்.

அத்துடன் முதன் முதலாக நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலிலும் இப்பகுதியில் போட்டியில்லாமல் தெரிவு செய்யப்பட்ட மெம்பராகவும் கடமையாற்றினர். (V.C. Member)

இவரது மருமகன்தான் S.A. ஜோன்பிள்ளை என்பவர். இவர் ஸ்ரீ லங்கா அரசாங்கத்தில் S.P. யாக (பொலிஸ் சுப்பிரிண்டன்) பதவியிலிருந்தபோது புரட்சிச் சதி வழக்கில் ஈடுபட்டார் என்ற குற்றத்தின் பெயரில் பதவியிழந்தார். இவரது பெயரிலேயே, இவரது தென்னந் தோட்டம் எஸ்.பி. யின் தோட்டம் என அழைக்கப்படுகிறது. மேல் மாடியுடன் உள்ள இவ் வங்களா தற்போது அரசாங்க பாதுகாப்பு படையின் பொலிஸ் போஸ்ட் ஆகவுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணி உறுதி முடித்தல்

வியாபாரப் பொருட்கள் சேர்ப்பதற்காக பாசிக்குடாவிலிருந்து ஆறுமுகத்தான் குடியிருப்புக்கு குடியேற்றப்பட்டவர்கள் (போர்த்துக்கீசர் காலம்) கந்தட்டித்துறையை மீன்பிடித்துறையாகப் பாவித்து, மீன்பிடித் தொழிலிலும் ஈடுபடலாயினர். இவ்வேளையில் காத்தான்குடியிலிருந்து வந்து பக்கத்தில் குடியேறிய முஸ்லீம்களின் தொல்லைகள் காரணமாக பழையபடி, கருங்காலிச்சோலை கிட்டங்கதித்துறைப் பக்கமாக காண்டாஆறுமுகம், நெடிய ஆறுமுகம் ஆகியோர் வந்து குடியேறி தெங்குத் தொழில், மீன்பிடித்தொழில், ஆடு, மாடு வளர்த்தல், தும்பினால் கயிறு திரித்தல் முதலிய தொழில்கள் செய்தனர். அக்காலத்தில் பிரிட்டிஸ் அரசாங்கம், பூர்வீகச் சொத்துக்களாகிய காணிகளுக்கு, உறுதி வழங்கத் தீர்மானித்தது. அதன்படி 1863 இல் காணிகள் அளக்கப்பட்டு படம் கீறப்பட்டு, 1884 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 10ம் திகதி நெடிய ஆறுமுகத்தின் மக்களாகிய, சீனித்தம்பி, கண்ணகை, சின்னப்பிள்ளை, வள்ளியம்மை, சின்னப்பிள்ளையின் கணவர், கட்டை ஆறுமுகம் அல்லது விளக்குவைத்தார் ஆறுமுகம் என்போருக்கு உறுதி முடிக்கப்பட்டு வழங்கப்பட்டது.

பின்னர் கட்டை ஆறுமுகமும், சீனித்தம்பியும் மருமக்களாகிய ஆறுமுகம், கதிரவேலி என்பவரும் சேர்ந்து கதிராமன் அதிகாரியின் காணிக்குப் பக்கமாக "சுவான்" என்கின்ற போர்த்துக்கீசன் இருந்து வேளாண்மை செய்த காணிக்கு இடையில் காடு வெட்டி நிலம் திருத்திப் பயிர் செய்தனர். இலங்கை முழுவதும் ஆங்கிலேயர் ஆட்சிவந்த பின்னர் கட்டை ஆறுமுகத்தின் மகன் குஞ்சித்தம்பி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பவன் அரசிடம் காணி வாங்கி தனது பெயரில் உறுதி முடித்ததுடன் அக்காணிக்கு "குஞ்சன்ரகுளம்" என்ற பெயரில் சூட்டி செய்கை பண்ணி வந்தான். தற்போது அப்பெயரே வழக்கத்தில் உள்ளது.

யாழ்ப்பாணத்தில் இருந்து வந்த வேலப்பச்செட்டியார் தனது மகள் நாகாத்தையை, ஆ. குஞ்சித்தம்பிக்கு திருமணம் செய்து வைத்தார். அத்துடன் குஞ்சித்தம்பியின் காணிக்கு மேற்குப்பக்கமாய் உள்ள காணியில் ஒரு பகுதியை தான் வாங்கி வேளாண்மை செய்து வந்தார். தற்போது அக்காணிகள் எல்லாம் முஸ்லீம் விவசாயிகளுக்குச் சொந்தமாயுள்ளன.

## வேடர்கள்

தன்னுயிரைக்காத்த குவேனியையும், இரண்டு பிள்ளைகளையும் விந்தனைக் காட்டிற்கு கொண்டு சென்று வெட்டிக் கொல்லுமாறு தனது அதிகாரியிடம் ஒப்படைத்த விஜயன், குவேனியின் நாட்டையும் உள்ள பொருட்களையும் தான் அபகரித்துக் கொண்டான். அதிகாரிகள் காட்டிற்குக் கொண்டு சென்று குவேனியை வெட்டிக் கொலை செய்கின்ற தருணத்தில் பிள்ளைகள் இருவரும் பயந்து, தப்பி ஓடிவிட்டார்கள். அவர்கள் காடுகளில் அலைந்து திரிந்து காய், கனி, கிழங்கு, இறைச்சி முதலியற்றைத் தின்று உயிர் வாழ்ந்தனர். அவர்களின் சந்ததியினரே வேடர்களாவர். குவேனியை வெட்டும்போது பயந்து ஓடியதிலிருந்து இன்றும் வேடர்களுக்குப் பயம் நிறைந்திருப்பதை அவதானிக்கக் கூடியதாயுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேடர்களுக்கு மேற்குப்பக்கம் செல்வதற்குப் பயம், ஆதலால் கிழக்குப்பக்கமாக கதிர்காமம் மண்டூர், கொக்கட்டிச்சோலை, ஆரைப்பத்தை, கருவேப்பங்கேணி, சித்தாண்டி, புட்டக்கரச்சை, வெருகல் முதலிய இடங்களில் குடியேறி தங்கள் சந்ததியால் பாதுகாக்கப்பட்ட வள்ளி நாயகியை மணந்த முருகக் கடவுளுக்கு, கோயில் அமைத்து வழிபாடு செய்து வரலாயினர்.

கதிர்காமத்தில் முருகனும், மண்டூரில் கந்தனும், ஆரப்பத்தையில் கந்தசாமியும், கொக்கட்டிச்சோலையில் தான்தோன்றீஸ்வரரும், அமிர்தகழியில் மாமாங்கப்பிள்ளையாரும், சித்தாண்டியில் கந்தசாமியும், வெருகலில் சித்திரவேலாயுத சுவாமியும், நல்லூரில் கந்தசாமியும் இவர்களால் வழிபாடு செய்யப்பட்ட கடவுள்கள்.

குவேனியை வெட்டியபோது பறைமேளம் அடிக்கப்பட்டதால் அந்தமேளம் அடிக்கப்படும்போது, தங்கள் முன்னோர்களாகிய உத்தியாக்கள், சீயாமார்களை நினைத்து குவேனியை வெட்டியபோது உண்டான பேதமை உண்டாகி, பேய்ச் சடங்கு செய்வார்கள்.

புட்டக்கரச்சையில் வாழ்ந்த வேடர்களில் ஒரு பகுதியினர் முறக்கொட்டான்சேனை, சித்தாண்டியிலும், சுவாதியின் கூட்டத்தினர் தற்போது "சுவாதிரஓடை" எனப்படும் இடத்திலும் குடியேறி சேனைப்பயிர் செய்தார்கள். அதன் பின்னர் கதிராமன், அதிகாரியின் மகள் பத்தநாச்சி, கணவன் கண்ணப்பர் ஆகியோருடைய சேனைக்கு மேற்குப் புறமாக குடியேறி சேனைப்பயிர்ச் செய்கையில் ஈடுபட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேடரும், கிறிஸ்தவரும்

போர்த்துக் கீசராலும், ஒல்லாந்தராலும், இப்பகுதிகளில் கிறிஸ்தவ மதத்தைப் பரப்ப முடியாது போனமையை அறிந்து, தங்கள் மதத்தைப் பரப்புவதற்கான ஏற்பாடுகளை ஆங்கிலேயர் செய்ய ஆரம்பித்தனர். அதன் பிரகாரம் "சேர்ச் ஒவ் இங்கிலாண்ட்" என்கின்ற இங்கிலாந்து தேசத்தின் மதகுருமார் வந்து, ஒரு தமிழ்பாடசாலையை 1870 இல் ஆரம்பித்து தங்கள் மதபோதனையையும் செய்தனர். பின்னர் மட்டக்களப்பில் கல்லடியில் வாழ்ந்த தம்பிமுத்து என்பரை தங்கள் மதத்துக்கு எடுத்து, மதம் போதிக்கும் பாதிரியராகவும், ஆசிரியராகவும் நியமித்து, அப்பாடசாலையை நடாத்தினர். வேடர்களுக்கு அதிகம் உதவி செய்து தங்கள் மதத்தைப் பரப்ப விரும்பி, "விக்ரோறியா" மகாராணியின் அனுமதி பெற்று நெடிய ஆறுமுகத்தாருக்கும், மக்களுக்குமுரிய காணிக்குத் தெற்குப் பக்கமாக சுவாதியின் மக்கள் நான்கு பேருக்கும், சேனைப்பயிர் செய்யவும், குடியிருக்கவும், ஐம்பது ஏக்கர் நிலத்தையும், மதுரங்கேணியில் வேளாண்மை செய்வதற்கான நிலத்தையும் வழங்கிப் பொருள் உதவியும் செய்ததுடன், 1891 இல் ஒரு சவக்காலைக்கும் பூமி ஒதுக்கினார்கள்.

அப்போது ஞானஸ்நானம் கொடுப்பதற்கு கோயில் இருக்கவில்லை. பாடசாலையினுள் மரத்தினால் செய்யப்பட்ட, பீடம் ஒன்றிருந்தது. அதில் ஒரு சிலுவையை வைத்து, மெழுகு திரியையும் பற்றவைத்து வைப்பார்கள். அங்கே சமூகமளிக்கும் வேடர்களுக்குப் போதனை நடக்கும். பின்னர் பாதிரிமாரினால் சில பொருட்கள் கொடுக்கப்படும். இவ்விதமாக நடைபெறுங்காலத்தில், தங்களுக்கு ஒதுக்கப்பட்ட 50 ஏக்கர் கண்டத்துக்கு அருகில், கால் (1/4) ஏக்கர் நிலத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயிலுக்காக வேடர்கள் விட்டுக் கொடுத்தார்கள். அந்த இடத்தில் மாறா இலுப்பை மரத்தை தேடி வெட்டி வந்து பறங்கிக்காரர் வந்த கப்பலின் பாய்மரம்போல், நாட்டி, பாய்மரத்துக்கு கயிறு கட்டியதுபோல் பட்டை நார்களால் இழுத்துக் கட்டி, வேடர்கள் பேய் ஆடுவார்கள். ஆங்கிலேயரிடம் எவ்வளவு சலுகைகளைப் பெற்ற போதிலும் அவர்களால் மதம்மாற முடியவில்லை. கருங்காலிச்சோலையில் கட்டப்பட்டிருந்த பண்டகசாலை, துறைமுகம், கல்லடியில் பெரியகோறளையன், சின்னக்கோறளையன் ஆகியோர் இருந்த இடங்கள் எல்லாம் ஆங்கிலேயரால் அழிக்கப்பட்டு கல்குடாவில அவற்றை எல்லாம் அமைத்தார்கள். அக்கப்பல்களுக்கு வழிகாட்டும் கலங்கரைவிளக்கான "நோனாக்கோரி" என்னும் கருங்கற்களால் ஆன வெளிச்சவீடும் அமைக்கப்பட்டது. 2004 இல் ஏற்பட்ட சுனாமியின் போது அது அழிந்து விட்டது. (அவை சம்பந்தப்பபடட நிழற்படம், நூலின் பின் பக்கங்களில் உள்ளன.

கல்குடாவில் கதிர்காமர் வெட்டியசேனையில் கட்டுவிளா, கவலை, அல்லைக்கிழங்கு, ஏராளமாய் இருந்தன. அதனைச் சாப்பிடுவதற்காக வேடர் ஒரு பகுதியினர் அங்கு குடியேறினார்கள், அங்கேயும் தம்பிமுத்து பாதிரியார் போய் ஒருசிறு தமிழ்ப் பாடசாலையினை நிறுவினார். தாண்டவன்வெளியிலிருந்து, துறைமுகக் காவலுக்காக வந்த கரிக்குருவிஞானம் என்பவரும், அவருடன் துறைமுக வேலைக்கு வந்த கத்தோலிக்கர்களும் சேர்ந்து கல்குடாவில் ஒரு தேவாலயத்தை அமைத்தார்கள். இரு பகுதியாரும் தமது மதத்தை வேடர்களுக்குப் போதித்தார்கள். ஆனால் வேடர்களோ அவர்களது உதவிகளைப் பெற்றுக் கொண்டு சென்றும் தமது பேய்ச்சடங்குகளையே செய்து வந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குவேனியின் சந்ததியினர் திருகோணமலை, தம்பலகாமம், சின்னக்கிண்ணியா, மூதூர், சம்பூர், சம்புவின்சேனையூர், கட்டைபறிச்சான், வாழைத்தோட்டம், ஈச்சிலம்பத்தை, பால்சேனை, வாகரை, பனிச்சங்கேணி, மாங்கேணி, சாங்கிலிவில், காயான்கேணி, வட்டவான், நாசிவன்தீவு, வண்ணாத்திப்பாலத்தடி, அரிசி அரிச்சகேணி, மயிலங்கரச்சை, அக்கிறாணை, கிண்ணையடி, முறக்கொட்டான்சேனை, முதலிய இடங்களில் குடியேறினார்கள்.

சுவாதிர குடும்ப வேடர், நட்டமாமரம், பின்னர் நெருப்புப் பிடித்துப் பற்றியதால் ஓட்டையாகியது. அவர்களின் ஆதரவுடன் வந்தாறுமூலையில் வந்து ஆறியிருந்த "சாண்டார்கனகர்" கூட்டம், ஓட்டமாவடியில் குடியேறியது. (தற்போது ஓட்டமாவடி தபால் நிலையம், பிரதேச செயலகம் அமைந்திருக்கும் இடம், முதலில் "சாண்டானின் சவுக்காலை" என அழைக்கப்பட்டது.) மீறாவோடை வேடரோடு, மாரியர் குடும்பமும் வாழ்ந்தது.

ஆரையம்பதியில் வாழ்ந்த தமிழ் சந்ததியினர் அங்கே இருந்த வேடரைக் கொண்டு கண்டிக்கு புன்னை எண்ணெய் காவிக் கொண்டுபோய் விற்றுவிட்டு, அங்கேயுள்ள பொருட்களை வாங்கி வந்து விற்றார்கள். கண்டிக்குச் செல்வதற்காக, சித்தாண்டியூடாக செல்லும் காட்டுப்பாதை ஒன்று இருந்தது.

முஸ்லீம்கள் ஆரைப்பத்தைக்கு பக்கத்து ஊரான காத்தான்குடியில் இருந்தும், ஆறுமுகத்தான் குடியிலும், வாழைச்சேனையின் மேற்குப் பகுதியிலும், ஓட்டமாவடி, மீறாவோடை ஆகிய பகுதிகளிலும் குடியேறினார்கள். இவர்களுள் இந்தியாவிலுள்ள காயல் பட்டினத்திலிருந்து வியாபாரமாக வந்து குடியேறிவர்களும் அடங்குவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராவண சங்காரம் முடிந்து, சீதையை மீட்டுக் கொண்டுபோகும் போது விபீஷணனுக்கு முடிசூட்டியும், சீதைக்குத் துணையாயிருந்த திரிசடைக்கு தலைமைப் பதவியும் கொடுத்த சந்ததியினரே தமிழ்வேடராவர். (இக்கர்ண பரம்பரைக் கதையில் எந்தளவு உண்மையுள்ளதோ தெரியவில்லை) இவர்களே பூர்வீக வேடராவர். குவேனியின் மக்களின் பிற்சந்ததியினரே சிங்கள வேடராவர்.

**(1ம் அத்தியாயத்தில் கூறப்பட்ட வரலாறுகள் 400 வருடகாலத்திற்கு உட்பட்டவை)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் இரண்டு

## வணக்கத்தலங்கள்

## வாழைச்சேனை ஸ்ரீ கயிலாயபிள்ளையார் ஆலயம்

ஆறுமுகம் பட்டங்கட்டி வைத்து வணங்கிய பிள்ளையாரை, அவர் இறந்த பின்னர், உமையர் என்பவர் இப்போது கோயில் இருக்கும் இடத்திற்கு வட புறத்தில் களிமண் சுவர்வைத்து கட்டிய சிறுகோயில் ஒன்றில் வைத்து வழிபட்டார். அவருடைய இளைய தங்கை சின்னன் அக்கோயிலுக்கு எதிராக ஒரு கிணறும், ஒரு மடமும் கட்டுவித்தார்.

உமையரும், மைத்துனரும், மருமக்களுமாகச் சேர்ந்து கோயிற் பராமரிப்பு, கிராமச் சுத்தம், சுகாதாரம், நல்லொழுக்கம், பொருளாதாரம், சீர்திருத்தம், முதலியவற்றைப் பற்றி கோயிலடியில் கூட்டம் கூட்டிப் பேசித் தீர்மானித்து அதன்படி செயற்பட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உமையர் இறந்த பின்னர் அவருடைய மகன் தாமோதரம் போடியாரும், மைத்துனரும், மருமக்களுமாகச் சேர்ந்து நிருவாகம் நடத்தி வந்தனர். பின்னர் சிதம்பரநாதப் பரிசாரியாரின் மக்களாகிய தம்பிநயினார், உம்முணித்தம்பி, மருமகன் நல்லதம்பி ஆகியவர்களையும் சேர்த்து, (10) பத்துபேர் முகாமைத்துவக் காரர்களாகவும், தாமோரம் போடியாரும், தம்பிநயினாரும், வண்ணக்குமாராகவும், இருந்து நிருவாகம் நடாத்தி வந்தனர்.

அவர்கள் காலத்தில் இப்போ இருக்கும் கயிலாயபிள்ளையார் ஆலயம் கட்டப்பட்டது. மூலஸ்தானத்தில் முகமுள்ள பிள்ளையார் சிலை இருக்க வேண்டுமெனத் தீமானஞ் செய்த அவர்கள் இந்தியாவிலிருந்து தற்போது மூலஸ்தானத்தானத்திலுள்ள சிலையை தருவித்தார்கள். ஏககாலத்தில் கிரான் பிள்ளையார் கோயில் சிலையும் இதுவும் யாழ்ப்பாணத்துக்கு கொண்டு வரப்பட்ட பின்னர், பாய்க்கப்பலில் மட்டக்களப்பு அமிர்தகழிக்கு கொண்டுவரப்பட்டு, வண்டியில் கிரானுக்கு கொண்டுவரப்பட்டன. பின்னர் (தற்போது கயிலாயபிள்ளையார் கோயிலுக்குள் இருக்கும் சிலை) சவாரி வண்டியில் ஊர்வலமாக வாழைச்சேனைக் கோயிலுக்கு கொண்டு வரப்பட்டு, "தரிசனமண்டபத்தில்" நெல்லுப் பட்டறைக்குள் வைத்துக் கட்டப்பட்டது.

பின்னர் ஒரு சுபதினத்தில் சுவாமியைப் பிரதிஷ்டை செய்தும், கும்பாபிஷேகம் செய்தும் விழா நடத்தினர். பின்னர் ஆண்டுதோறும் திருவிழாவும் நடைபெறலாயிற்று. தாமோதரம் போடியார் இறந்ததன் பின், அவரின் மகன் நாகமுத்துவும், (தம்பிநயனாரின் பின்னர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரின் மகன்) கதிர்காமத்தம்பி உடையாரும் சேர்ந்து வண்ணக்குமாராக இருந்து, ஏனைய பத்து (10) பத்து முகாமைக்காரருடன் சேர்ந்து நிருவாகம் நடத்தினர்.

அச்சமயம் மிஷன் பாடசாலைக்கு ஒரு "பறையர்" இனத்தைச் சேர்ந்த வாத்தியார் நியமிக்கப்பட்டதனால், பிள்ளைகள் எவரையும் பெற்றோர்கள் பாடசாலைக்கு அனுப்பவில்லை. பதிலாக விழா மண்டபம் இருக்கும் இடத்தில் அமைக்கப்பட்டிருந்த மடத்தில் பிள்ளைகளுக்குப் பாடம் கற்பிக்கப்பட்டது. பின்னர் கந்தையா என்னும் ஒரு ஆசிரியர், நியமிக்கப்பட்டதாலும், பாதிரியார், ஊர்மக்களிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டதாலும் மீண்டும் பிள்ளைகள் மிஷன் பாடசாலையில் கல்வி கற்றனர்.

நாகமுத்து வண்ணக்கர் இறந்த பின்னர், அவர் மகன் தம்பிராசா என்பவர் வண்ணக்கராகக் கடமை பார்த்தார். அவரும் இறந்த பின்னர் நாகமுத்துவின் தம்பி நாகப்பர் (இராசாப்போடியார்) வண்ணக்கராகக் கடமை பார்த்தார்.

அவரின் இடுப்பில் இருந்த கோயில் திறப்பையும், பெட்டகத்துத் திறப்பையும் கண்ணப்பர் ஆறுமுகம் என்பவர் பலவந்தமாகப் பாய்ந்து பறித்து, தனது தமையன் கண்ணப்பர் கந்தையாவிடம் ஒப்படைத்தார். அதன்பின்னர் கந்தையா என்பவரே, கோயில் நிருவாகியாக (மனேச்சர்) இயங்கி வந்தார்.

அவர், கோயிலில் உள்ள வெள்ளி, வட்டிக்காகக் கொடுக்கப்பட்டிருந்த கோயிற் பணம் ரூபாய் ஐயாயிரம் மட்டில் அறவிட்டு எடுத்து அப்பணத்தைக் கொண்டு தற்போதிருக்கும் வசந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்டபத்தையும், முற்பகுதியையும் கட்டுவித்தார். வீரையடிப் பிள்ளையார் (பேய்த்தாழை) வளவிலிருந்த முதிரை, நுரை புன்னை, ஆகிய மரங்களை அறுத்து கோயிலுக்குத் தேவையான கைமரங்களைப் பூட்டினார். பின்னர் நடேசர் சிவகாமியம்மன் முதலிய வெண்கலச் சிலைகளை இந்தியாவிலிருந்து தருவித்து வசந்த மண்படத்தில் வைத்துப் பூசை செய்து வரலானார். பின்னர் நித்திய மேளக்கூட்டம் ஒன்றினையும் வரவழைத்து ஊர் மக்களையும் சேர்த்து திருவெம்பாவைத் தினங்களில் திருவிழாவும் செய்து வந்தார்.

"**வாழைச்சேனை ஸ்ரீ கயிலாயப்பிள்ளையார் ஆலய வரலாறு**" என்னும் நூலைத் தொகுத்த (1997) திருமதி.சி.ப. தங்கத்துரை என்னும் பரஞ்சோதி ரீச்சர் தனது நூலில் இன்னும்பல விபரங்களையும், காலத்திற்கு காலம் ஏற்படுத்தப்பட்டிருந்த நிருவாக உறுப்பினர்கள் பற்றிய விபரங்களையும் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால் இந்த ஆலய வரலாறு பற்றிக் கூறிய இவர். வாழைச்சேனை ஸ்ரீ கயிலாயப்பிள்ளையார் கோயில் வரலாற்றில் வேடர் ஆரம்பித்து வணங்கியதற்கான ஆதாரங்கள் இல்லை என இரு வேறு இடங்களில் குறிப்பிட்டுள்ளார். ஏனோ தெரியவில்லை.

அக்காலத்தில் இங்கு வாழ்ந்த "பொக்கணியர்" என்னும் .உடையர் தமது வளவில் ஒரு கல் பிள்ளையாரை வைத்து வழிபட்டார். என்றும், இவருக்குப்பின் இவரது சந்ததியினர் வழிபட்டனர் என்றும், வாய்ப்பேச்சுகள் மூலம் அறிய முடிகிறது என்று குறிப்பிடுகிறார். அத்துடன் "பிச்சிலான் கணபதி" என்பவனின் கதையையும் கூறி இவ்வாயலத்தில் நடந்த அற்புதமான சம்பவம் என்றும் குறிப்பிடுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் கரம் கிடைத்த கையெழுத்துப் பிரதியின்படி ஆறுமுகம் பட்டங்கட்டி என்பவர், தனது தங்கை பத்தநாச்சியுடன் சேர்ந்து, 1767 இல் பேத்தாழை வீரையடியில் ஒரு பிள்ளையாரை வைத்து வழிபட்ட பின்னர், பாசிக்குடாவிலிருந்து நாவற்குடாவுக்குச் சென்ற (வியாபாரப் பொருட்கள் சேர்க்க) ஒரு பெண்ணைக் கூட்டிவந்து 1777 இல் திருமணம் செய்து, தனது மனைவியுடன் வாழைச்சேனையில் குடியேறி ஒரு பிள்ளையார் கோயிலையும் அமைத்து வழிபட்டு வந்தார் என்றும்,

ஆறுமுகம் பட்டங்கட்டிக்கு உமையர் என்ற ஒரு மகனும், தில்லைச்சி, தங்கா, சின்னன் என்ற பெண்களும் இருந்தனர். என்றும் உள்ளது. இதன்படி பார்த்தால் திருமதி.சி.ப. தங்கத்துரை அவர்களது தொகுப்பு நூலில் குறிப்பிட்ட க.உமையர் என்பவர் ஆ.உமையர் என்று குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். (அச்சுப்பிழையாகவும் இருக்கலாம்) இவ்வாலயத்தில் நடக்கும் திருவிழாக்கள், பூசை முறைகள் போன்ற விபரங்கள், மேற்படி நூலாசிரியரின் தொகுப்பில் இடம்பெற்றுள்ளன.

## ஸ்ரீ கயிலாயபிள்ளையார் முத்துமாரியம்மன் ஆலயம்

பிள்ளையார் கோவிலின் பக்கத்தில் தற்போது அமைக்கப்பட்டிருக்கும் கற்கோயில், ஆரம்ப காலத்தில் தென்னை ஓலைக் கிடுகுகளாலும், காட்டுக் கம்புகளாலும் அமைக்கப்பட்டிருந்தது, கோயிலின் முன்னால் பந்தல் அமைக்கப்பட்டு (பாதை ஓரம்வரையில்) சடங்கு நடைபெற்றும், பேய் ஆடுதல் பலிகொடுத்தல், சாட்டையடித்தல்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதியில் ஆற்றங்கரைக்கு அல்லது கல்குடா பாசிக்குடா கடலுக்கு தீர்த்தமாடச் செல்லுதல் இறுதியில் பிள்ளையார் கோயிலினுள் வைத்து அடியார்களுக்கு அன்னதானம் வழங்குதல். ஆகியவற்றுடன் மாரியம்மன் கோயில் சடங்கு நடைபெற்று முடிவுறும்.

எக்காலத்தில் இவ்வாலயம் ஆரம்பிக்கப்பட்டது என்பதற்கான ஆதாரங்கள் கிடைக்கவில்லை. எனினும் 1952 இல் ஓலையால் கேயில் அமைக்கப்பட்டதாகத் தெரியவருகிறது. இக்கோயில் சடங்கு நடைபெறும் காலங்களில் வாழைச்சேனை அரசினர் சிரேஸ்ட பாடசாலைக்கும் (தற்போது இந்துக்கல்லூரி) ஒரு பகல் சடங்கு வழங்கப்பட்டிருந்தது. இக்கோவில் கவனிப்பாரற்று கிடந்தபோது ஊர்ப்பன்றிகள் கோயிலினுள் குட்டிபோட்டுக்கிடந்தன. என்று குறிப்பிடப்படுவது (ஸ்ரீ கயிலாய பிள்ளையார் ஆலய வரலாறு) பொருத்தமற்றதென்று. என திரு.பெ. புண்ணியமூர்த்தி கூறினார்

## பேச்சியம்மன் ஆலயம் – வாழைச்சேனை

இவ்வாலயம் விபுலாநந்த வீதியில் பனை மரங்கள் அடர்ந்த சோலையின் நடுவே கற்களால் கட்டப்பட்டுள்ள ஓர் அம்மன் கோயிலாகும். இக்கோயில் தனியாருச்குச் சொந்தமானது உடையார் என்பவர் இதற்குப் பொறுப்பாயிருந்தார். அதன்பின்னர் அவரது மகன் சிதம்பரப்பிள்ளை போஸ்மாஸ்டரால் வருடாந்தச் சடங்கு செய்யப்பட்டு வந்தது. தற்போது அவரின் பின்னர் அவரது மக்களால் சடங்கு செய்யப்படுகின்றது.

ஆரம்ப காலத்தில், இக்கோயில் சடங்கு நடக்கும் நாட்களில் ஆலய முன்றில் வீதியில் கூத்துக்களும், நாடகங்களும், நடைபெற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தன. காலவரையில் இக்கலை நிகழ்ச்சிகள் நடைபெறாது கைவிடப்பட்டன. இங்கும் தெய்வமாடுதல், பலிகொடுத்தல் சாட்டை கொடுத்தல், இறுதியில் கும்பஞ் சொரிதல் ஆகியன நடைபெற்றன. தற்போதும் அவ்வாறே நடைபெற்று வருகின்றன. ஊர் வரலாற்றின் படி 1800 ஆம் ஆண்டு காலப்பகுதியில், ஆராய்ச்சியாளரும், அவரின் மகள் நாச்சியும், வாழைச்சேனையில் குடியேறியபோது, பேச்சியம்மனுக்கு என்று ஒரு இடத்தை ஒதுக்கியிருந்ததாகவும் அறிய முடிகின்றது.

## ஸ்ரீ பத்திரகாளியம்மன் கோயில் – புதுக்குடியிருப்பு

1954 - 1955 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் அனுமான் காசியர் எனப்படும் காசுபதியர் என்பவர் செல்லையா (தூக்குமரம்) என்பவர் க.சீனித்தம்பி என்பவர்களால், வாழைச்சேனை பொது மயானத்தையண்டிய காட்டுப் பிரதேசத்தில் கொக்கட்டிமர மொன்றின் கீழ் இக்கோயில் ஆரம்பிக்கப்பட்டது. எனினும் இக்கோயிலுக்குரிய அம்மன் சிலை, போன்ற கோயில் சாமான்கள் ஸ்ரீ கயிலாயபிள்ளையார் ஆலயத்தில் வைத்தே பாதுகாக்கப்பட்டு வந்தன. தற்போது போதிய கட்டிட வசதிகளுடன் இவ்வாலயத்தில், பூசை வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.

## புதுக்குடியிருப்பு முத்துமாரியம்மன் ஆலயம்

இவ் ஆலயம் முத்துப் பூசாரி என்பவரால் உருவாக்கப்பட்டது. 1960 ஆண்டு காலப்பகுதியில் காடாயக்கிடந்த இப்பகுதி அவரது சந்ததியினரால் வெட்டித் துப்பரவு செய்யப்பட்டு, அவர்களாலேயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சடங்கும் செய்யப்பட்டு வந்தது. இக்கோயிலுக்கு முஸ்லீம்களும் பெருந்தொகையாக வந்து தமது நேர்த்திக் கடன்களை நிறைவேற்றி வந்தனர். தெய்வமாடுதல், பலிகொடுத்தல் ஆகியன இங்கு நடைபெறும் முக்கிய நிகழ்வாகும். முத்துப் பூசாரியார் மரணித்த பின்னர் அவரது மகனால் இக்கோயில் பரிபாலிக்கப்பட்டு வருகின்றது. இது தனிப்படட ஒரு குடும்பத்திற்குரிய கோயிலாகவே உள்ளது.

## கண்ணகியம்மன் ஆலயம்

இக்கோயில் "அம்மாள் கணபதியர்" என்பவரால் உருவாக்கப்பட்டு பின்னர், வாழைச்சேனை பொலிஸ் அதிகாரியாக இருந்த ஆறுமுகம் (SI) என்பவர் தலைமையில் ஊர்மக்களின் முன்னிலையில் கூட்டம் போடப்பட்டு ஊர் மக்களின் சொத்தாகியது. வ்ருடா வருடம் சிறப்பான முறையில் சடங்கு நடைபெறுகின்றது. தீ மிதிப்பு இங்கு நடக்கும் முக்கிய நிகழ்வாகும். முன்னர் புதுக்குடியிருப்பு, வாழைச்சேனை, நாசிவன்தீவு ஆகிய மூன்று ஊரவர்களாலும் சடங்கு செய்யப்பட்டிருந்தது. சடங்கு நடைபெறும் காலங்களில் மேடையில் சமயச் சொற்பொழிவுகள், கலை நிகழ்ச்சிகள் என்பனவும் நடைபெறும்.

## ஸ்ரீ நாகதம்பிரான் ஆலையம் – கருங்காலிச்சோலை

1972 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கதிரவேலி சின்னத்தம்பி என்பவர் தனது மைத்துனர் கந்தையாவின் மாடுகளைத் தேடி ஆற்றங்கரைப்பக்கம் சென்ற போது, கருங்காலிச்சோலை பக்கம் தற்போது கருங்காலிச் சோலை பாடசாலை இருக்கும் பக்கமிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கிருந்த புற்றினை நோக்கி வந்த "நாகபாம்பு" ஒன்று அதனுள் சென்று புகுவதனைக் கண்டு தனது மைத்துனரான கண்ணன் கந்தையா என்பவரிடம் கூறினார். அதன் பின்னர் இருவரும் சென்று பார்த்தபோது அப்புற்றினுள் அந்த நாகபாம்பு வசித்து வருவது உறுதியாகிவிட்டதனை அறிந்து அவ்விடத்தில் ஓருமேடை கட்டி வழிபட்டனர்.

அதன் பின்னர் கந்தையா என்பவர் கல்குடாவைச் சேர்ந்த "இளையார்' எனப்படும் க. இளையதம்பி (கிராம சபை உறுப்பினர்) என்பவரை பூசாரியாகவும் நியமித்து வருடா வருடம் சடங்கினை நடாத்தி வந்தார். 1978 இல் அவர் இறக்கும் வரையில் ஆயுள் தலைவராயிருந்து வந்தார்.

அதன் பின்னர் அவரது இளைய மகன் கந்தையா சிவநாயகம் என்பவர் தலைவராயிருந்தார். அரசியல் பிரச்சினை ஒன்றின் காரணமாக அவர் நீக்கப்பட்டு செல்லத்தம்பி கதிர்காமத்தம்பி என்பவர் தலைவராக நியமிக்கப்பட்டார். தற்போது சூழவுள்ள ஊரவர்களின் ஒத்தாசையுடன் வருடாந்தச் சடங்கு நடைபெற்று வருகின்றன. ஊர்மக்களால் பொங்கல் செய்வது இங்குநடைபெறும் முக்கிய நிகழ்வாகும். தற்போது கல்லால்கட்டப்பட்ட கிணறு ஆலையம், மடைப்பள்ளி ஆகியன அமைக்கப்பட்டுள்ளன. தற்போதைய தலைவராக சின்னமணி கிருஷ்ணப்பிள்ளை உள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விநாயகபுரம் விநாயகக்கோவில்.

1990ஆம் ஆண்டில் வடமுனை, ஊத்துச்சேனை ஆகிய இடங்களிலிருந்து வன் செயல் காரணமாக இடம்பெயர்ந்து விநாயக புரத்திற்கு வந்த மக்களால் உருவாக்கப்பட்டது இதன் தலைவராக திரு.சு.இரோசேந்திரம் செயலாளராக த.ஆனந்தராசா என்பவரும் சேர்ந்த நிருவாக சபை ஒன்று இயங்சி வருகின்றது. கல்மடுவுக்குச் செல்லும் முல்லை வீதியல் இவ்வாலயம் அமைந்துள்ளது.

## விநாயகபுரம் – மாரியம்மன் கோவில்

கல்மடுவுக்குச் செல்லும் முல்லை வீதியல் இவ்வாலயமும் அமைந்துள்ளது. வடமுனை ஊத்துச்சேனை ஆகிய பகுதிகளிலிருந்து கலவரம் காரணமாக இடம் பெயர்ந்து வந்த மக்களால் 1990 இல் அமைக்கப்பட்ட இவ்வாலயத்தில் வருடாந்தம். சடங்குகள் நடைபெறுகின்றன. தெய்வம் ஆடுதல் முக்கிய நிகழ்வாகும். இவ்வாலயத்தின் தலைவராக சிவலிங்கம் சிவம் என்பவரும், உப தலைவராக சோ.மகாலிங்கம் என்பவரும் செயலாளராக திரு.அல்லிராசா என்பவரும் நிருவாகிகளாயுள்ளனர்.

## விநாயகபுரம் பிள்ளையார் ஆலயம் (பழைய கோவில்)

மீறாவோடையிலிருந்து வந்து இங்கு குடியேறிய சி.கோவிந்தன் என்பவரால் இவ்வாலயம் உருவாகியது. இவ்வாயலத்தின் தலைவராக பொ.பத்மநாதன் என்பவரும், செயலாளராக திரு.காசிநாதன் என்பவரும் பொருளாளராக கோ.திருநாவுக்கரசு என்பவரும் நிருவாகிகளாகவுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீ கணேசப் பெருமாள் ஆலயம் – கண்ணகிபுரம்

கிண்ணியாவிலிருந்து இங்கு வந்து குடியேறிய கணேசன் என்பவரால் இவ்வாலயம் உருவாக்கப்பட்டது. (1970) இல் ஆலயத்தின் பூசகராக செல்வநாயகம் குருக்கள் நியமிக்கப்பட்டுள்ளார். வருடாந்தம் (5) ஐந்து நாட்கள் திருவிழா நடைபெறும். தலைவராக திரு.யோகராசா என்பவரும், உபதலைவராக க.மகேந்திரன் என்பவரும், செயலாளராக நடராசா ரஞ்சன் என்பவரும், பொருளாளராக பெரியாள் வீரக்குட்டி என்பவரும் நிருவாகிகளாகவுள்ளனர்.

## கிறிஸ்தவ குடும்பசபை (கண்ணகிபுரம்)

இவ்வாலயம் 1992 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இதன் போதகராகவும், தலைவராகவும் போதகர். T.C. மகேந்திரன் என்பவர் பூசை செய்கிறார். வருடாந்தம் பதினைந்து நாட்கள் விழா நடாத்தப்படுகின்றது. வருடா வருடம் புதிய நிருவாகம் தெரிவு செய்யப்படுகின்றது.

## நாகதம்பிரான் ஆலயம் – கண்ணகிபுரம்

விறகு பொறுக்கச் சென்ற பெண்கள் காட்டுக்குள்ளிலிருந்து வந்த பாம்பு ஒன்று (நாகம்) புற்று ஒன்றினுள் சென்று புகுந்ததைக் கண்டு அயலவர்களுக்கும் தெரியப்படுத்தியதன் பின்னர் தம்பியப்பா மாரிமுத்து என்பவரிடமும், அவரது கணவர் பூசாரி கந்தையா என்பவரிடம் கூறி அவர்களை கூட்டிவந்து அவ்விடத்தில் பந்தல்போட்டு ஊர் மக்களிடம் இருபத்தைந்து சதம், ஐம்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சதம் அறவிட்டு, மொத்தமாக முப்பது ரூபாய் (30/=) சேர்த்து முதல் முதலில் அவ்விடத்தில் பொங்கல் செய்து நாகதம்பிரானுக்குப் படையல் செய்ததாக திருமதி. கந்தசாமி என்பவர் கூறினார். இவ்வாலயத்தில் தொடக்க காலமான 1970 இல் பணிபுரிந்த கந்தையா பூசாரி என்பவர் இஸ்லாத்தைத் தழுவினார். அவரது மனைவியான மாரிமுத்து என்பவர் 1978 இல் ஏற்பட்ட சூறாவளியில் களிமண் சுவர்வீடு இடிந்து விழுந்ததனால் அதனுள் நசுங்கண்டு மரணித்துவிட்டார்.

அக்காலத்தில் இக்கோயில் சடங்கின்போது ஒலி பெருக்கி பாவித்ததற்கு முப்பது ரூபாய் தான் செலுத்தியதாகவும், திருமதி.கந்தசாமி தெரிவித்தார். தற்போது ஒரு கற்கோயில் அமைக்கப்பட்டுள்ளது. தற்போது இவ்வாலயத்தின் நிருவாகசபை தலைவராக இளையதம்பி செல்வம், செயலாளராக கந்தசாமி ஜெயராசா, பொருளாளராக மா. தியாகராசாவும் உள்ளனர்.

## ஸ்ரீ பேச்சியம்மன் ஆலயம்

1988 ஆம் ஆண்டளவில் இந்திய வம்சாவழியைச் சேர்ந்த மாமன் சண்முகம் என்பவரால் ஓலைக்குடிசையொன்றில் இவ்வாலயம் ஆரம்பிக்கப்பட்டது. தற்போது ஒரு ஏக்கர் அளவு நிலத்தில் அமைந்துள்ள இவ்வாலயத்தில் பிள்ளையார், நாகதம்பிரான், வைரவர், காளி, கண்ணகியம்மன், மாரியம்மன் ஆகிய தெய்வங்களுக்காகவும், கற்களால் பந்தல்கள் அமைக்கப்படடுள்ளன. இவ்வாலயத்தில் வருடா வருடம் 8ம் மாதம் ஆறு நாட்களுக்கு சடங்கு நடைபெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாசிக்குடா முத்து மாரியம்மன் ஆலயம்

இவ்வாலயம் 100 வருடகாலப் பழமை வாய்ந்தது. 1910ல் கந்தன் செட்டியார் என்பவரால் தாபிக்கப்பட்டது. இவருக்கு ஆறுமுகம் இளையதம்பி, குழந்தைவேல், உம்முணி ஆகியவர்கள் ஆண் மக்களாவர். ஆரம்ப நாட்களில் விண்ணாங்குத் தடிகளால் பந்தல் போடப்பட்டு சக்கரைப் பொங்கல் பொங்கப்பட்டு பூசைகள் நடைபெற்றன. கல்குடாப் பிரதேசத்தின் கிராம சபை உறுப்பினராயிருந்த க.இளையதம்பி என்பவர் கோயிலை கல்லால் கட்டி கடலில் அடைந்துவந்து கரையில் கிடந்த மரங்களை அறுத்து, கதவுகள் கைமரங்களாக்கி இக் கோயில் கட்டப்படடது. 2004 இல் ஏற்பட்ட சுனாமியினால் இக்கோயில் முற்றாக அழிந்து போய்விட்டது. அதன் பின்னர் இந்து கலாச்சார அமைச்சினால் வழங்கப்பட்ட ரூபாய் மூன்று லெட்சம், நிறுவனம் ஒன்று வழங்கிய 25 லெட்சம் ஆகியவற்றைக் கொண்டு தற்போதுள்ள கோயில் அமைக்கப்பட்டுள்ளது.

நீண்டகாலமாக அதனைப் பாரிபாலித்து வந்த க.இளையதம்பி அவர்கள் மரணித்த பின்னர் தற்போது கந்தன் செட்டியாரின் வழிவந்த சந்ததியினர் இக்கோயிலைப் பராமரித்து வருகின்றனர். தற்போது இவ்வாலயத்தின் நிருவாகிகளான

திரு. கு. ஏரம்பமூர்த்தி - தலைவர்
திருமதி. கோ. தங்கமலர் - செயலாளர்
திரு. த. தக்ஜிதரன் - உப செயலாளர்
திரு. நா. தவனேசன் - பொருளாளர்

ஆகியோர் உள்ளனர். இக்கோயிலில் வருடா வருடம் பதினொரு தினங்கள் சடங்கு நடைபெற்று வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீ முருகன் ஆலயம் – பேய்த்தாழை

1980 ஆம் ஆண்டு பேய்த்தாழையைச் சேர்ந்த கந்தசாமி தங்கநாயகம் என்பவரால் ஓலைக் குடிசை ஒன்றில் இவ்வாலயம் ஆரம்பிக்கப்பட்டது. அக்காலத்தில் சடங்குகளைக் கூட நடத்த முடியாத நிலையிலிருந்த போது குட்டப்பன் சிவராமன், கா.இரத்தினம், வை..தர்மராசா (றீகல்) ஆகியோர் முன்வந்து தாமோதரம்பிள்ளை குருக்களிடம் ஆலோசனை பெற்று அவரைக் கொண்டு 1981 இல் கோயிலை உருவாக்கினர். அப்போது வெள்ளிக்கிழமைகளில் ஒரு பூசை நடாத்தப்பட்டது. விளையாட்டு மாதிரி தொடங்கப்பட்ட இவ்வாலயம் தற்போது வளர்ச்சியடைந்து திருப்பனிச்சபையொன்றும் ஆரம்பிக்கப்பட்டு, 2005 இல் தொடக்கம் திரு.தா.இராசநாயகம் அவர்களால் நிருவகிக்கப்பட்டு வருகின்றது. தற்போது கோபுரத்துடன் இவ்வாயலம் காட்சியளிக்கின்றது இது ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் கூத்து போன்ற கலை நிகழ்ச்சிகளும் நடாத்தப்பட்டு வந்தது.

## புனித பரியோவான் ஆலயம் – வாழைச்சேனை

இவ் ஆலயத்தின் அருகாமையில் ஓடிச் சென்று ஆற்றில் கலக்கும் நீரோடைதான் ஆரம்ப காலத்தில் பேய்த்தாழைக் கிராமத்தின் மேற்கு எல்லையாகவிருந்தது. அவ்வகையில் இவ்வாலயம் அமைந்துள்ள இடம் பேய்த்தாழையாக இருந்தது. காலவரையில் ஊர் எல்லைகள் மாற்றப்பட்டதன் பின்னர் வாழைச்சேனையாகிவிட்டது. வறுமை, யுத்தம், சூறாவளி, சுனாமி இடப்பெயர்வு போன்ற அனர்த்தங்கள் மாறி மாறி ஆக்கிரமித்துவரும் எமது வரலாற்றில் பல்வேறு கட்டங்களில் இறையாட்சிக்காக வாழ திருச்சபை முயன்றுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நற்செய்தி பரப்புரை சமூகத்தின் மறைபரப்புப்பணி 1840 இல் கொழும்பில் ஆரம்பமானது. கிழக்கு மாகாணத்தில் வறுமையில் வாடியோருக்கு உதவுவதிலும், கல்விப்பணியிலும் இவர்கள் ஈடுபட்டனர். கல்குடா, மட்டக்களப்பு வாழைச்சேனை, பேத்தாழை ஆகிய இடங்களில் பாடசாலை இயங்கின. 1886 இல் பாடசாலைக்கும், ஆலயத்துக்கும் காணித்துண்டு வாங்கப்பட்டது. 02.12.1925 இல் இவ்வாலயம் "பேராயர். மார்க் ருடொல்ப் காப்பென்ரன் கார்ணியர்" என்பவரால் திருப்பொழிவு செய்யப்பட்டது. இலங்கை திருச்சபையின் (சேர்ச் ஒவ் அங்கிலிக்கன்) சபை, திருப்பணியாளர்கள் சமூகப்பங்களிப்பு ஆகியவற்றினால் இவ்வாலயம் வளர்ச்சி கண்டுள்ளது. கிளினி. அருட்பணி S. நிக்கல்ஸ், H.L. வெயிற், J.ஹண்ணா, D.சோமநாதர், A.வேதகண் என்போர் ஆரம்ப காலத்திலும், பூபாலப்பிள்ளை ஞானமுத்து நல்லையாஜோசப், P. மாணிக்கராசா, சந்திரன் கிறிஸ்பஸ், எஸ். ஞானராசா, H. ஹால்போல் பாண்டியன் அன்டன் லாசர்ஸ், ஜோன்சன் என்னும் பணியாளர்களின் பணி இவ்வாலய வரலாற்றில் குறிப்பிடத்தக்கது.

அருட்பணி J.R. தம்பிமுத்து, UBS முத்துவேலு, J.S. ஐசாயா, S.H. இராமநாதன், G. தம்பாப்பிள்ளை, B.L. அருள்பிரகாசம் சாம், A. முத்துவேலு, A. ஆனந்தநாயகம், K.P. ஞானதாஸ், L.B.அருள்பிரகாசம், J. இரட்னம், J.A. ஐசாயா, P. மாணிக்கராசா, D. சாம்பராஜ், P.A. யேசுதேவன், S. சந்திரசேகரன் கிறிஸ்பஸ், N. காருண்பன் ஆகியோரும் உதவியுள்ளனர். இந்து, இஸ்லாம், கத்தோலிக்க திருச்சபை, மெதடிஸ்த திருச்சபை, வை.எம்.சீ.ஏ. ஆகியவற்றுடனும் இணைந்து பணியாற்றி வருவது குறிப்பிடத்தக்கதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அசம்ளீ ஒவ் கோட் – வாழைச்சேனை

இவ் ஆலயம் 1982 இல் பாஸ்டர் விளஸ்ஸில் என்பவரால் ஆரம்பிக்கப்பட்டது. இதில் நேசரி பாடசாலை ஒன்றும் இயங்கி வருகிறது. 65 மாணவர் கல்வி கற்கின்றனர். செபக் கூட்டங்கள், பெண்கள் ஊழியம், ஆண்கள் ஊழியம், ஓய்வு நாட்கள் பாடசாலை என்பன இவ்வாயலத்தின் சிறப்பு அம்சங்களாகும். இதன் கிளைச் சபைகள் மாங்கேணி, கதிரவெளி ஆகிய கிராமங்களில் உள்ளன.

இதன் போதகர்களாக மு. சுனில் குணதுங்க லக்ஸ்மணகாந், உதவிப் போதகராக சுனில் ரெஜினா நாயோமி ஆகியோர் பணிபுரிந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். வாழைச்சேனை பிரதான வீதியிலிருந்து புதுக்குடியிருப்புக்குச் செல்லும் பாதையில் இவ்வாலயம் அமைந்துள்ளது.

## முனை முருகன் ஆலயம் – கல்குடா

கல்குடா கடற்கரையில் நோனாக்கோரிப் பக்கமாக காடு மண்டிக் கிடந்த இடத்திற்கு 1979 இல் ம.புஸ்பராச அவர்கள் (தற்போதைய ஸ்ரீ கயிலாயபிள்ளையார் ஆலயக் குருக்கள்) விறகு வெட்டச் சென்ற போது மலையும், மயில்களும், மானும் உள்ள சூழலினைக் கண்ணுற்றார். இந்த இடத்தில் முருகனுக்கு கோயில் கட்டலாம் என நினைத்து திரு.க.பாலச்சந்திரன் (ஆங்கில ஆசிரிய ஆலோசகர்) திரு.க. தனபாலசிங்கம், கனகசுந்தரம், கலாதரன், க.வன்னியசிங்கம், கருணாகரன் (பாசிக்குடா) ஆகியோர்களுடனும் சேர்ந்து கோயில் அமைப்பதில் ஈடுபட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூறு நாட்களின் முடிவில் கோவில் பூர்த்தியாக கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. திரு.உம்முணியர் கதிர்காமத்தம்பி அவர்கள் தலைமையில் வாழைச்சேனை ஸ்ரீ கயிலாயபிள்ளையார் ஆலய குருக்கள் தாமோதரம்பிள்ளையினால் கும்பாபிஷேகம் நடாத்தப்பட்டது. வருடாந்தம் ஏழு நாட்கள் திருவிழா நடைபெற்று பங்குனி உத்திரத்தில் தீர்த்தம் நடைபெறும்.

இயற்கை அழகுமிக்க இக்கோயிலுக்கு பெருந்தொகையான பக்தர்கள் வருகை தந்தனர். யுத்தம் ஆரம்பித்ததும் கோயில் நடவடிக்கைகள் குறைவடைந்தன. மூன்று பக்கங்களும் கடல் சூழ்ந்த இக்கோயிலுக்கு சுனாமியின் போது அதிகளவு பாதிப்பு ஏற்படவில்லை. கோயிலின் உட்சுவரில் மாட்டப்பட்டிருந்த சுவாமி படங்கள் கூட நனைந்து போகவில்லை.

திரு. டக்ளஸ் தேவானந்தா அவர்கள் 3 லெட்சம் ரூபாய் நிதி உதவியும், முதலமைச்சர் திரு.சி. சந்திரகாந்தனால் 10 லெட்சம் ரூபாய் நிதி உதவியும் வழங்கப்பட்டது. மாகாணசபை உறுப்பினர் திரு.நா.திரவியம் அவர்களால் புதிய கோபுரத்துக்கான கல் நாட்டப்பட்டுள்ளது. திரு.வி.முரளிதரன் (எம்.பி.) திரு.சீ. யோகேஸ்வரன் எம்.பி. ஆகியோர்களும் நிதி உதவுவதாகக் கூறியுள்ளனர்.

## சந்திப்பிள்ளையார் கோவில் – கல்குடா

1983 இல் ஆரம்பிக்கப்பட்ட இக்கோவிலிலிருந்த பிள்ளையார் சிலை எங்கோ தூக்கி வீசப்பட்டு, தற்போது அந்த இடத்தில் புத்தர் சிலை நிறுவப்பட்டுள்ளது. யுத்தகாலத்தில் இங்கிருக்கும் பாதுகாப்பு படையினர் பிள்ளையாரைத் தினம் வழிபட்டு வந்தனர். யுத்தம் முடிவடைந்த பின்னரேயே பிள்ளையாருக்கு இக்கதியேற்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாலயத்தில் சரஸ்வதிப் பூசை ஆகியன சிறப்பாக நடைபெற்று வந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

## பாலீஸ்வரர் ஆலயம் – பேய்த்தாழை

மட்டுநகரின் வடக்கிலும், வாழச்சேனையின் கிழக்கிலும் பேய்த்தாழை விபுலானந்த வித்தியாலயத்தின் முன்னால் செல்லும் பாதையானது முடிவுறும் இடத்தின் வலது கரையில் அமைந்துள்ளது. இப் பாலீஸ்வரர் ஆலயம்.

1980 ஆம் ஆண்டு 16ம் திகதி திங்கள்கிழமையன்று இக்கிராமத்தைச் சேர்ந்தவரும். கிராம அபிவிருத்திச் சங்கததின் தலைவராயிருந்தவரும, சமூகத் தொண்டருமான திரு.பிள்ளையான் கிருஷ்ணப்பிள்ளை அவர்களின் கனவில் தோன்றிய காட்சியிது.

அவ்விடத்தில் தோன்றியிருந்த லிங்கத்திற்கு பால் ஊற்றி அயலில் விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்களைக் கொண்டு பச்சை மட்டை வெட்டி வரச்சொல்லி அருகில் உள்ள பெண்களைக் கொண்டு கிடுகுகள் பின்னி, கம்புதடிகளால் கோவில் அமைத்து வழிபடும் நிகழ்ச்சியாகும்.

இதனைக் கனவில் கண்ட அப்பெரியார் எவ்வாறாயினும் அவ்விடத்தில் கோவில் அமைக்க வேண்டுமென உறுதி பூண்டார். அவரது மனைவி மக்கள் பூரண ஆதரவு வழங்கினர். இவ்வாலயம் அமைந்துள்ள காணி 1970 இல் அவராலேயே காடுவெட்டி துப்பரவு செய்து வைக்கப்பட்டிருந்தது. இதனால் இவ்வாலயம் அமைப்பதற்கு காணிப்பிரச்சினை எழவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1981 ஆம் ஆண்டு ஆனி மாதம் 23ம் திகதி பூரணையன்று வாழைச்சேனை ஸ்ரீ கயிலாயபிள்ளையார் ஆலயக் குரு, தாமோதரம் பிள்ளை அவர்களால் லிங்கப்பிரதிஸ்டை செய்யப்பட்டது. இன்றுவரையில் விழா நடைபெற்று தீர்த்தமாடி, அன்னதானமும் வழங்கப்பட்டு, நிறைவுபெற்று வருகின்றது.

இவ்வாலயத்தின் படம் பின்னால் உள்ளது. வெறும் செங்கல் கட்டிடத்தினால் உள்ள இவ்வாலயம் உயர்ந்து நிற்க உதவ வேண்டும்.

## நாற்சதுர சுவிசேஷ சபை

"நாற்சதுர சுவிசேஷம்" என்னும் வார்த்தையின் பொருள் யாதெனில் இயேசு கிறிஸ்துவின் நான்குவித ஊழியங்களாகும். அவையாவன

1. இயேசுகிறிஸ்து இரட்சிக்கிறார்.
2. இயேசு கிறிஸ்து குணமாக்குகிறார்.
3. இயேசுகிறிஸ்து அபிஷேகிக்கின்றார்.
4. இயேசு கிறிஸ்து வரப்போகின்ற இராஜாவாக இருக்கிறார்.

என்பனவாகும். 1989 இல் பேய்த்தாழையில் சோமநாதன் யோகராசா என்பரினால் ஆரம்பிக்கப்பட்டது. அத்துடன் இச்சபையானது இலங்கை ஜனநாயக குடியரசினால் பதிவு செய்யப்பட்டு அங்கீகாரம் பெற்ற ஒரு சபையாகவும் விளங்குகின்றது. இலங்கையின் அனைத்து மாகாணங்களிலும் இவ்வகையைச் சேர்ந்த 1700 ஆலயங்களும், 1900 ஊழியர்களும் உள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழைச்சேனையில் பிரபல்யம் பெற்றிருந்த ஓய்வுபெற்ற ஆசிரியரும், ஆயுர்வேத வைத்தியருமான பொன்னையா சோமநாதன், திருமதி. சோமநாதன் கண்ணகை (ஆயுர்வேத வைத்தியர்) ஆகிய தம்பதிகளின் புத்திரனாகப் பிறந்த யோகராசா என்பவர், 1983 இல் மூன்றாவது தடவையாக வெளிநாடு போக முயற்சித்து அவரது சகோதரரின் கொழும்பு வீட்டில் தங்கியிருந்தபோது இயேசு யார்? கடவுள் யார்? ஆலய நிலமை என்ன? என்ற உணர்வினை அடைந்தாராம். அதனால் அவருக்கு கடவுளைத் தேடவேண்டும், அவர் செய்த கிரியைகளைச் செய்ய வேண்டும் என்று ஆதங்கப்பட்டாராம். தனது வாழ்க்கை இயேசுவுக்கு ஒப்புக் கொடுத்தாராம். இந்நிலையில் இலங்கையில் இனப்போராட்டமும் ஏற்பட்டது. அப்போது இயேசு அவருக்கு முகம்கொடுத்துப் பேசினாராம்.

அவரது வீட்டிலிருந்து அவர் ஜெபித்த வேளையில் இரண்டாவது தடவையும் இயேசு அவருடன் பேசினாராம். இதற்கிணங்கவே இவ்வாலயம் அமைக்கப்பட்டதாக யோகராசா கூறினார். அத்துடன் எவரினதும் உதவியின்றி இவ்வாலயத்தைக் கட்டியதாகவும் கூறினார்.

மன்னிக்கிறோம், உதவுகின்றோம், விதவைகளை பராமரிக்கின்றோம், திக்கற்ற பிள்ளைகளைப் பராமரிக்கின்றோம், நோயாளிகள் பிசாசு பிடித்தவர்கள் ஆகியோர்களை ஜெபித்து விடுகிறோம் என்பன இச்சபையினால் செய்யப்படும் சேவைகளாகும்.

இது வரையில் 22 பேர் ஞானஸ்ஞானம் பெற்று அங்கத்தவராயுள்ளனர். விடுதலை பெற்றுள்ளனர். தொடர்ந்தும் பெறுகின்றனர். இதன் நிமித்தம் 28 விதவைக் குடும்பங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்சபையின் உதவிகளைப் பெற்றுள்ளன. பெற்றோரில்லாத 20 பிள்ளைகளுக்கு படிப்பு, சாப்பாட்டுச் செலவுக்காக தலா 1500/= ரூபாய்கள் வீதம் வழங்கப்பட்டு அவர்கள் நன்மை பெறுகின்றனர்.

இவ் ஆலயத்தில் ஞாயிறு - காலை 8 மணி தொடக்கம் 10.30 மணிவரையும் ஆராதனையும், சனி - பிள்ளைகளின் ஓய்வுநாள் பாடசாலையும், வெள்ளி - உபவாசமும், நோயாளர்களுக்கான ஆராதனையும் நடைபெற்று வருகின்றன.

இக்கிராமத்தின் 150 குடும்பங்கள் அங்கத்தவராயுள்ளனர். கோறளைப்பற்று வாழைச்சேனை பிரதேசத்தில் 6 கிளைச் சபைகள் உள்ளன.

| | | |
|---|---|---|
| திருவிழாக்கள் - | நத்தார் தினம் | டிசம்பர் - 25 |
| | ஈஸ்டர் ஞாயிறு | ஏப்ரல் 4 |
| | பெரியவெள்ளி | ஏப்ரல் - 2 |
| | புதுவருடம் | ஜனவரி - 1 |
| | ஆலயத்தின் திறப்பு விழா நிறைவு நாள் | ஆனி 25 |

ஆகியன இவ்வாலயத்தின் சிறப்புக்கள்.

மேற்குறிப்பிட்ட ஆலயங்களை விட கல்குடாவில் கண்ணகியம்மன் ஆலயமும், (கடற்கரையில் இருந்து அழிவடைந்துள்ளது.) பேத்தாழையில் ஆலயடிப்பிள்ளையார் ஆலயமும் (தனியார் காணியில்) இரட்சணியசேனை ஆலயமும், கறுவாக்கேணி பிள்ளையார் ஆலயம், கிண்ணையடி பிள்ளையார் கோவில், மீறாவோடை மாரியம்மன் ஆலயம், வாழைச்சேனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெந்தக்கொஸ்தே சபையும், நாசிவன்தீவு பிள்ளையார் கோவில், கண்ணகியம்மன் கோவில், மாரியம்மன் ஆலயம், பேய்த்தாழை கடல் நாச்சியம்மன் ஆலயம் ஆகியனவும் பிரசித்தி பெற்ற ஆலயங்களாகவுள்ளன.

கல்குடா கண்ணகியம்மன் ஆலயம் தற்போது ஊருக்குள் அமைக்கப்பட்டு நடைபெறுகின்றது. இது சலவைத் தொழிலாளர்களின் நிருவாகத்தில் உள்ளது.

கல்குடாவில் விஷ்ணு ஆலயம் ஒன்றும் உள்ளது.

## கல்குடா கன்னிமரியாள் தேவாயலம்

தற்போது இது பாதுகாப்பு வலயத்துள் உள்ளது. இவ்வாலயம் சிங்கவர்களால் (வலைவாடி) நடாத்தப்பட்டுவந்தது. சிங்களத்தில் ஆராதனை நடைபெற்றன. சுனாமியின்போது வழிபாட்டில் ஈடுபட்டிருந்த பெருந்தொகையினர் அகால மரணமடைந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் மூன்று

## கல்விக் கூடங்கள்

கோறளைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் வாழைச்சேனை இந்துக்கல்லூரி, பேத்தாழை விபுலானந்த வித்தியாலயம், கல்குடா நாமகள் வித்தியாலயம், கறுவாக்கேணி விக்கினேஸ்வரா வித்தியாலயம் ஆகியன முதன்மை பெற்ற கல்விக் கூடங்களாகவும், போதியளவு கட்டிட வசதிகளுடனும் தரம்மிக்க ஆசிரியர்கள், மாணவர்களுடனும் "சாதனையாளர்கள்" என்ற பெயர் பெற்ற மாணவர்களை உள்ளடக்கிய பாடசாலையாகவும் காணப்படுகின்றன. இவற்றைவிட, ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவுகளிலும் ஒவ்வொரு பாடசாலைகள் வீதமும், ஒவ்வொரு கிராமத்திலும் பாலர் பாடசாலைகள், தனியார் கல்வி நிறுவனங்கள் ஆகியனவும் காணப்படுகின்றன. (உ-ம் பாரதி கல்வி வட்டம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழைச்சேனை இந்துக்கல்லூரி

1929 இல் கந்தையா மனேஜர் (கொஸ்தாப்பர்) என்பவரால் சைவப்பாடசாலை என்ற பெயரில் முதன் முதலில் ஆரம்பிக்கப்பட்டது. அந்த இடத்தில் முன்னர் ஸ்ரீ கயிலாயபிள்ளையார் ஆலயத்திற்குச் சொந்தமான மடம் ஒன்று இருந்தது. அது இடிக்கப்பட்டதன் பின்னர் அந்த இடத்திலேயே இப்பாடசாலை ஆரம்பமாகியது. (கந்தையா மண்டபம் இருந்த இடம்) அப்போது மட்டக்களப்பைச் சேர்ந்த சபாபதிப் பண்டிதர் என்பவர் இப்பாடசாலையில் கற்பித்தார். இப்பாடசாலை அரசினரிடம் ஒப்படைக்கப்பட வேண்டுமெனக் கேட்டதற்கிணங்க அரசிடம் இருந்து பாடசாலை கட்டுவதற் குரிய நிலம் போதாது எனப்பதில் கிடைத்தது. அப்போது வாழைச்சேனை கூட்டுறவுப் பண்டகசாலை நன்றாக இயங்கி வந்ததால் அதிலிருந்து ஐயாயிரம் (5000/=) ரூபாய் பெறப்பட்டு தற்போது இந்துக் கல்லூரி இருக்கும் இடம் (நிலம்) விலையாக வாங்கப்பட்டது. அதன்பின்பு அந்நிலம் அரசினரிடம் கையளிக்கப்பட்ட பின்னர், கட்டிடங்கள் கட்டப்பட்டு, அரசினர் கனிஷ்ட பாடசாலை என்ற பெயருடன் விளங்கியது. தொடர்ந்து அரசினர் சிரேஸ்ட பாடசாலையாக அதன் பின்பு இந்துக் கல்லூரியாகவும் பெயர் பெற்றுள்ளது.

## இக் கல்லூரியில் இடம்பெற்ற முக்கிய சம்பவங்கள்

1953 இல் பழைய பாடசாலைக் கட்டிடத்தில் (கந்தையா மண்டபம்) பாடசாலை மாணவிகளால் "அல்லி அரசாணி" என்னும் நாடகம் நடிக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1954 இல் பிரதான பாதையின் வடக்குப் புறத்தில் இயங்கிவந்த பாடசாலை பாதையின் தென்புறமாக பிள்ளையார் கோயிலை அடுத்து புதிய கட்டிடம் அமைக்கப்பட்டதன் பின் 3ம் ஆண்டு தொடக்கம் 10ம் ஆண்டு வரையில் புதிய கட்டிடத்தில் நடைபெற்று வரலாயிற்று.

இரண்டு இல்லங்கள் பிரிக்கப்பட்டு 1. வெள்ளை, 2. மஞ்சள் *ஆகியன வெள்ளை இல்லத்தின் தலைவராக M.S. மீராசாஹிப்* என்பவரும் மஞ்சள் இல்லத்தின் தலைவராக S.தம்பிராசா என்பவரும் நியமிக்கப்பட்டனர்.

1956 இல் தற்போது இருக்கும் விளையாட்டு மைதானத்தில் நின்ற கூளாமரம், மாமரங்கள், தென்னை மரங்கள் ஆகியன மாணவர்களால் பிடுங்கப்பட்டு மைதானம் ஆக்கப்பட்டது.

1958 இல் நடைபெற்ற வன்செயல்களின் காரணமாக மஹாஓயா, புல்லுமலை, பதியத்தலாவை போன்ற இடங்களிலிருந்து அகதியாக வந்தவர்கள். இப்பாடசாலையில் தங்கவைக்கப்பட்டனர்.

1958 இல் முதன் முதலாக மாணவ மாணவிகளால் "வாழ்மதி" என்னும் சஞ்சிகை வெளியிடப்பட்டது. (வாழ்மதி சஞ்சிகை குழுவினரின் நிழற்படம் பின்னால் உள்ளது.)

1956 இல் உயர்தர மாணவர்களால் பல நாடகங்கள் இப்பாடசாலையில் மேடையேற்றப்பட்டன. இதில் A.M. அப்துல்காதர் (டொக்டர்), எஸ். கறுப்பையா, சா.தம்பிராசா, மு. அரசரெத்தினம் (கிரான்) போன்றவர்கள் அந்நாடகங்களில் நடித்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1958 ஆம் வருடம் ஜனாப் மஹ்முது என்பவர் (பின்னர் இவர் ஆசிரியராகவும், தினபதி பத்திரிகை நிருபராகவும் கடமையாற்றி ஒரு விபத்தில் மரணித்தார்.) இப்பாடசாலை மூலம் மட்டக்களப்பு மாவட்ட விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றி 100 யார் ஓட்டத்தில் 1ம் இடம் பெற்றுச் சாதனை படைத்தார்.

1960 இல் இப்பாடசாலையில் படித்த P.T.M. புஹாரி என்பவர் மட்டக்களப்பில் நடந்த தினகரன் விளையாட்டு விழாவில் பங்கேற்று 5 மைல் தூர மாணவர்களுக்கான பைசிக்கிள் ஓட்டப்போட்டியில் முதலிடம் பெற்றார்.

1964 இல் முதன் முதலாக உயர் தரப்பரீட்சைக்கு தோற்றிய ஒன்பது மாணவர்களில் ஐந்து (5) பேர் சித்தி பெற்றனர்.
அதில் R. துரைராசசிங்கம் (கல்விப் பணிப்பாளராகி ஓய்வு பெற்றார்.)

M. சந்திரபாலா (அரச உத்தியோகம்)

க. செல்வநாயகம் (வன அதிகாரியாகி ஓய்வு பெற்றார்)

ஆகியோர் நான்கு (4) பாடங்களிலும் சித்தி பெற்றனர்.

E. சின்னையா

E. சாமித்தம்பி

ஆகியோர் மூன்று பாடங்களில் சித்தி பெற்றனர். இதில் R.துரைராசசிங்கம், M.சந்திரபால ஆகிய இருவரும் பல்கலைக்கழகம் சென்றனர்.

1965 இல் சரஸ்வதிப்பூசை விழாவில் தாழைசெல்வநாயகம் என்பவராலும், செ.தர்மராசா என்பவராலும் சேகர், நீதிபதி, பாத்திரமாக (கோட்சீன்) நீதிமன்றக் காட்சி நாடகம் நடாத்தப்பட்டது இந் நாடகம் மூடிய திரை நாடகத்தின் ஓர் அங்கம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்படி தகவல்கள் இக்கல்லூரியால் இதுவரை வெளியிடப்பட்ட "செவ்வாழை" சஞ்சிகைகளில் சுட்டிக் காட்டப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கதே.

**இக்கல்லூரியில் அதிபராக கடமையாற்றியவர்களின் விபரம்**

| பெயர் | சொந்த ஊர் | காலம் |
|---|---|---|
| திரு. க.சிவசம்பு | காரைதீவு | |
| திரு. மயில்வாகனம் | யாழ்ப்பாணம் | |
| திரு. செல்வநாயகம் | நற்பிட்டிமுனை | |
| திரு. இலக்கணப்பிள்ளை | வந்தாறுமூலை | |
| திரு. எஸ்.பி.கந்தையா | வாழைச்சேனை | |
| திரு. முருகேசு | முள்ளியவளை | |
| திரு. சி.விநாயகமூர்த்தி | அமிர்தகழி | |
| திரு. அட் புசாமி | வந்தாறுமூலை | |
| திரு. எஸ். இளையதம்பி | சுன்னாகம் | |
| திரு. பூ.சபாதிப்பிள்ளை | தாமரைக்கேணி | |
| திரு. ஆறுமுகவடிவேல் | மட்டக்களப்பு. | |
| திரு. ஐசேக் | மிருசுவில் | |
| திரு. எஸ். இளையதம்பி | ஆரையம்பதி | 1946 - 1969 |
| திரு. ஐ. பரமானந்தராசா | ஆரையம்பதி | 1969 - 1970 |
| திரு. சி. நடராசா | சித்தாண்டி | 1970 - 1975 |
| திரு. க. வடிவேல் | வாழைச்சேனை | 1975 |
| திரு. கே. தியாகராசா | வாழைச்சேனை | 1978 - 1979 |
| திரு. எஸ். பொன்னுத்துரை | மட்டக்களப்பு | 1975 - 1978 |
| திரு. எஸ்.சிவராசா | மட்டக்களப்பு | 1979 - 1884 |
| திரு. தா. பரசுராமபிள்ளை | வந்தாறுமூலை | 1984 - 1994 |
| திருமதி. ப. கணகசிங்கம் | வாழைச்சேனை | 1996 |
| திரு. மு. தவராசா | பேத்தாழை | 1996 |

(இத்தகவல் 1997 இல் வெளியிடப்பட்ட செவ்வாழையில் பெறப்பட்டது.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பாடசாலையின் சின்னம் (அறிமின், தெளிமின், துணிமின்) இப்பாடசாலையில் கடமையாற்றிய சித்திர ஆசிரியர் மா. இராசையா என்பவரால் முதன் முதலில் வரையப்பட்டது. என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கதே.

இக்கல்லூரியில் படித்தவர்கள் பல சாதனைகள் புரிந்துள்ளனர். அவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள்

**திரு. வீ. இளையதம்பி** : இப்பாடசாலையில் கல்வி கற்று முதல் முதலாக இதே பாடசாலையிலேயே ஆசிரியராக முதல் நியமனம் பெற்றவர். க.பொ.த. (சா.த) முதன் முதலில் சித்தி பெற்றவர்.

**திரு. க. தியாகராசா** - 5ம் ஆண்டு புலமைப் பரீட்சையில் சித்தி பெற்றதுடன் இப்பாடசாலையில் படித்தவர்களில் பட்டம் பெற்றவர், வரிசையில் முன் நிற்பவர். அத்துடன் அதிபராகவும், இறுதியில் கல்விப் பணிப்பாளராகவும் பதவியிலிருந்தவர்.

**திருமதி. பவானி கனகசிகம் :** படித்த பாடசாலையிலேயே அதிபராக கடமையாற்றியவர்.

**திரு.க. மகேசன்** : அரச நிருவாக சேவையில் சித்தி பெற்று மேலதிக அரசாங்க அதிபராகவும் (கச்சேரி) தற்போது கென்யா நைரோபி என்னும் ஆபிரிக்க நாட்டில் இலங்கைக்கான உதவித் தூதுவராக கடமையாற்றுவதன் மூலம் இப்பிரதேசத்திற்குப் பெருமை சேர்த்தவர்.

**திரு. பெ. புண்ணியமூர்த்தி** : சிறந்த சோதிட நிபுணராகவும், "சிவநெறிப்புரவலர்" என்னும் சிறப்பு விருதினையும் பெற்றவர். (ஆங்கில மொழியில் சித்திபெற்ற முதல் மாணவன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திரு. இ. விநாயகமூர்த்தி** : கணித பாடத்தில் முதல் முறையாக அதிவிசேட சித்தி பெற்ற (A) முதல் மாணவன்.

**திருமதி. ஜீவராணி தம்பிப்பிள்ளை** : இதே கல்லூரியில் கல்வி கற்றதுடன் கல்விப் பணிப்பாளராகவும் கடமையாற்றுபவர்.

**திரு. மு. தவராசா** : இக்கல்லூரியில் படித்து 5ம் ஆண்டு புலமைப் பரீட்சையில் சித்தி பெற்று வந்தாறுமூலை மத்திய கல்லூரியில் படித்து பின்னர் பல்கலைக்கழகப் பட்டம் பெற்று, இக்கல்லூரியில் அதிபராக கடமையாற்றி எழுத்தாளராகவும், இரு சிறுகதை நூல்களையும் வெளியிட்டவராவார்.

**திரு. R. துரைராசசிங்கம்** : முதன் முதலில் உயர்தரப் பரீட்சையில் (A/L) சித்தி பெற்று, பல்கலைக்கழகம் சென்றதுடன் அதிபராகி இறுதியில் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றியது.

**திரு.க. செல்வநாயகம் (தாழை செல்வநாயகம்)** இக் கல்லூரியில் முதன் முதலில் (A/L) உயர்தரப் பரீட்சையில் சித்திபெற்று, வன அதிகாரியாகப் பதவி பெற்றதுடன் கலைத்துறையான நாடகம் சிறுகதை, நாவல், கவிதை, ஆகியவற்றில் தடம்பதித்து கலைச் சேவையாற்றியமைக்காக இலங்கை அரசினால் வழங்கப்பட்ட "கலாபூஷண விருதினையும்" கிழக்கு மாகாண சபையினால் "ஆளுநர் விருதினையும்", பிரதேச செயலகம் மாவட்டச் செயலகங்களால் "கலைஞர் விருதுகளையும்", சிறு கதைக்கான தேசிய விருதான "சாஹித்திய விருதினையும்" பெற்ற சாதனையாளர் இந்நூலுடன் மூன்று நூல்களை வெளியிட்டுள்ளார். இன்னும் (3) மூன்று நூல்களை அச்சேற்றும் பணிகளில் ஈடுபட்டுவருகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கல்லூரியல் படித்தவர்களும், இப்பிரசேத்தை சேர்ந்தவர்களும் அதிபர் பதவி, கல்விப் பணிப்பாளர் பதவி வரை பெற்றுள்ளனர். அவர்களுள் குறிப்பிடத் தக்கவர்கள்.

| | |
|---|---|
| ஜனாப். A.M. அப்துல் காதர் | பிரதிக் கல்விப் பணிப்பாளர். |
| அமரர். என். கதிர்காமத்தம்பி | அதிபர், கல்விப் பணிப்பாளர் |
| திரு. க. திருநாவுக்கரசு | அதிபர் |
| திரு. தா. இராசநாயகம் | அதிபர் |
| திரு. சி. அருட்பிரகாசம் | அதிபர் |
| திரு. க. செந்தில் நாயகம் | அதிபர் |
| திரு. த. சந்தரலிங்கம் | அதிபர் |
| திரு மு. தேவரெட்ணம் | அதிபர் |
| திரு. வீ. அரசரெத்தினம் | அதிபர் |
| திரு. க. தவராசா | அதிபர் |
| திருமதி. க. சோதிமணி | அதிபர் |
| செல்வி. யோகேஸ்வராணி | அதிபர் |
| திருமதி. க. கணேசன் | உப - அதிபர் |
| திரு. க. கதிர்காமநாதன் | உப - அதிபர் |
| திரு. சி. முருகவேள் | அதிபர் |
| திரு. சீ. ஜெயராசா | அதிபர் |
| திரு. ச. பரமேஸ்வரன் | அதிபர் |
| திரு. சா. பாலச்சந்திரன் | அதிபர் |
| திரு. அ. ஜெயஜீவன் | அதிபர் |
| திரு. பொ. மங்களரூபன் | அதிபர் |
| திரு. சீ. காளிதாஸன் | அதிபர் |
| திரு. R. துரைராசசிங்கம் | க. பணி |
| திரு. த. அகிலன் | அதிபர் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**குறிப்பு** : சிலரது பெயர்கள் விடுபட்டிருக்கலாம். ஜனாப் A.M. அப்துல்காதர் என்பவர் வாழைச்சேனையைச் சேர்ந்த சுப்பிரமணியம் சிவகாமலெட்சுமி என்வரைத் திருமணம் செய்து முதன் முதலில் இன ஐக்கியத்தை ஏற்படுத்தியவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

## பேத்தாழை விபுலானந்த வித்தியாலயம்

கல்குடா வீதி வாழைச்சேனையில் பரியோவான் ஆலயம் உள்ள இடத்தில் இயங்கிய இப்பாடசாலை ஆரம்பகாலத்தல் மிஷன் பாடசாலையாக இயங்கி வந்தது. ஆரம்ப நாட்களில் ஓலைக் கொட்டிலில் இயங்கி வந்தது. தற்போது பரியோவான் ஆலயம் இருக்கும் இடத்திலேயே அமைந்திருந்தது.

சேர்ச் ஒப் இங்கிலாந்து அங்கிலிக்கன் சபை இப் பாடசாலையை நிருவகித்தது. முதன் முதலில் குஞ்சுக்குட்டி வாத்தியாரின் மகன் பூபாலப்பிள்ளை அதிபரும், அவர் மனைவியும் (கிரான்) நடராசா வாத்தி. நவரெத்தினம் வாத்தி, மண்டூர் சதாசிவம் வாத்தியும். மனைவியும், தாமரைக்கேணி குழந்தை வேல் வாத்தி ஆகியோர்கள் இங்கு கற்பித்தனர். சோமசுந்தரம் (1942 இல் கற்பித்தார்) அதன் பின்பு பிரதான பாதையில் 1945 இல் ஆரம்பிக்கப்பட்டது. முதல் தலைமை ஆசிரியராக திரு. எஸ். ஆறுமுகம் என்பவர் 1948 வரையில் கடமை புரிந்தார். அடுத்த திரு. A. கணபதிப்பிள்ளை 1948 - 1955 வரையிலும், அடுத்து திரு. M. இராஜரெட்ணம் 1955 - 1956 வரையிலும், அடுத்து திரு. மு. சிவகுரு 1956 - 1969 வரையிலும், திரு. கு. நாகமணி 1969 - 1978 வரையிலும், திரு. எஸ். பெரியதம்பி 1978 - 1979 வரையிலும், திரு.எஸ். தருமரெத்தினம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1979 - 1980 வரையிலும், திரு. தா. இராசநாயகம் 1980 - 1990 வரையிலும், திருதி. ஜீவராணி தம்பிப்பிள்ளை 1991 - 1999 வரையிலும், திரு. த.சுந்தரலிங்கம் 1999 இல் தொடக்கமும் பணியாற்றினர். இப்பாடசாலையில் குறிப்பிடத்தக்கவராக திருமதி. கண்மணி யேசுரெத்தினம் ஆசிரியை விளங்கினார்.

1974 இப்பாடசாலை கல்குடா பிரதான வீதியிலிருந்து தற்போது உள்ள இடத்திற்கு மாற்றப்பட்டது. 1997 இல் மாடிக் கட்டிடம் ஒன்றும் அமைக்கப்பட்டது.

## புதுக்குடியிருப்பு வாணி வித்தியாயலம்

திரு.க. திருநாவுக்கரசு என்பவராலும், திரு.வீ. இளையதம்பி என்பவராலும் ஓலைக் கொட்டில் அமைக்கப்பட்டு தொண்டு அடிப்படையில் மாணவர்களைச் சேர்த்து இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. 03.05.1960 இல் இப்பாடசாலை அரசினால் பொறுப்பேற்கப்பட்டது. அக்காலத்தில் திரு. வீ. இளையதம்பி அவர்கள் பயிற்றப்பட்ட ஆசிரியராகவிருந்த காரணத்தினால் அவர் பதில் தலைமை ஆசிரியராக கடமையாற்றினார். வாணி வித்தியாலயம் என்ற பெயரைச் சூட்டியவர் அமரர். திருமதி. சி.ப. தங்கத்துரை (பரஞ்சோதி ரீச்சர்) இப்பாடசாலையின் சின்னத்தினை உருவாக்கியவர் திரு. பெ. புண்ணியமூர்ததி (அதிபர்)

## கல்குடா நாமகள் வித்தியாயலம்

ஏறத்தாள 134 வருடங்களுக்கு முன்னர் 1886 இல் கிறிஸ்தவ மிசனரி மார்களால் இப்பாடசாலை அமைக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழைச்சேனையைச் சேர்ந்த "உமையர்" என்பவரிடம் காணி வாங்கப்பட்டு பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. இரண்டாம் உலகப்போர் காரணமாக பாடசாலை அழிவடைய, மீண்டும் இலங்கைத் திருச்சபை கலவன் பாடசாலை என்ற பெயரில் அரசாங்கம் பொறுப்பேற்றது. கார்த்திகேசுவும் அவரது மனைவியும் முதன் முதலாக கடமையாற்றினர். அதன்பின்னர் வை.சி. ஆறுமுகம் என்பவர் 1972 இல் அதிபர் பதவி ஏற்றார். 1986 இல் பெ. புண்ணியமூர்த்தி அதிபராகிய பின்னர் பாடசாலை வளர்ச்சி கண்டது, நாமகள் வித்தியாலயம் எனவும் பெயர் மாற்றம் பெற்றது. பாராளுமன்ற உறுப்பினராகவிருந்த ஜோசப் பரராஜசிங்கம் அவர்களின் நிதி ஒதுக்கீட்டில் 20 அடி கட்டிடம் அமைக்கப்பட்டது.

2007 இல் இப்பாடசாலையில் நூலகம் ஒன்று அமைக்கப்பட்டது. பாடசாலையைச் சுற்றி E.P.D.P. சிவா அவர்களால் சுற்று மதில் அமைக்கப்பட்டது. 2003 இல் பா.உ. எஸ். ஜெயானந்த மூர்த்தியின் நிதியிலிருந்து பின்பக்க சுற்றுமதில் அமைக்கப்பட்டது.

26.12.2004 இல் ஏற்பட்ட சுனாமியினால் இப்பாடசாலை மாணவர்கள் 66 பேர் மரணித்தனர். இவர்கள் நினைவாக 25 அடி உயரமான நினைவுத்தூபி ஒன்று இங்கு கட்டப்பட்டுள்ளது. இங்கு புதிதாக அமைக்கப்பட்ட மாடிக் கட்டிடம் 2007 இல் திருமதி. சுபாஜினி சக்கரவர்த்தி அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

## சுங்கான்கேணி அ.த.க. பாடசாலை

மட்டக்களப்பு - வாழைச்சேனை பிரதான வீதியில் 18ம் மைலிலிருந்து மேற்காக கின்னையடிக்குச் செல்லும் வீதியில் 3 கி.மீ. தூரத்தில் .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைந்துள்ளது. இப்பாடசாலை 1949 இல் சிறிய மண்குடிசையில் ஆரம்பிக்கப்பட்டது. க. சிவக்கொழுந்து ஆசிரியராக இருந்தார். 1955 இல் நிரந்தரமான கட்டிடம் அமைக்கப்பட்டது. இப்பாடசாலையில் கற்பித்த ஏனைய ஆசிரியர்கள் M. ஜோசப் (1955), திருமதி. M.G. ஜோசப் (1961), K. முத்துலிங்கம் (1962), திருமதி. S.P. தங்கத்துரை (1963), S. நெடுவல்தம்பி (1969), K. தட்சணாமூர்ததி (1971), ப.சபாபதிப்பிள்ளை (1974), க. வேலிப்பிள்ளை (1975), கா. தாமோதரம்பிள்ளை (1985), சி. தங்கராசா (1986), த. இதயராசா 1993 இலிருந்து இன்று வரை கடமையாற்றுகின்றார். தற்போது 350 மாணவர்கள் கற்கிறார்கள்.

## கல்மடு விவேகாந்தா வித்தியாலயம்

இப்பாடசாலை கல்குடா கிராமத்தையடுத்து தெற்காக கல்மடுவில் உள்ளது. ஆரம்பப் பெயர் அரசினர் தமிழ்க்கலவன் பாடாசலை என்பது 1972 இல் விவேகானந்தா வித்தியாலயம் எனப் பெயர் மாற்றம் பெற்றது. இப்பாடசாலையின் ஆரம்ப காலம் 1965 ஆம் ஆண்டு முதல் அதிபராக S. மூத்ததம்பி கடமையாற்றினார். 1980 இல் புதிய கட்டிடம் கட்டப்பட்டது. அப்போது க. திருநாவுக்கரசு அதிபராகவிருந்தார். தற்போது 2000 ஆம் ஆண்டிலிருந்து திரு. K.சதாசிவம் அதிபராக கடமையாற்றி வருகின்றார். 135 மாணவர்கள் கற்கின்றனர். 2008 இல் இப்பாடசாலை மாணவர்களைக் கொண்டு நிறுவனமான "சேவ் த சில்றன்" னின் அனுசரணையுடன் "புலவர்மணி கலாமன்றத்தின்" தலைவர் தாழை செல்வநாயகம் அவர்களால் "வள்ளி திருமணம்" என்னும் கூத்து பயிற்றுவிக்கப்பட்டு மேடையேற்றப்பட்டது. அண்ணாவியாராக செ. நல்லதம்பி, க. தங்கவேல் ஆகியோர் பயிற்றுவித்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கறுவாக்கேணி விக்கினேஸ்வரா வித்தியாலயம்

இப்பாடசாலை சகல துறைகளிலும் முன்னிலையில் நிற்கும் ஒரு பாடசாலையாகும். மாகாண மட்டம், மாவட்ட மட்டம் ஆகிய வற்றிலும் தமிழ் தினப் போட்டிகளிலும் பல பரிசில்களைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இப்பாடசாலையினால் தயாரிக்கப்பட்ட "வாழ்வளித்த வளவன்" நாடகம் தமிழ்த்தினப்போட்டியில் பல பரிசில்களைப் பெற்றதாகும். இந்நாடகத்தை ஆசிரியர் திரு.T. கௌரீஸ்வரன் தயாரித்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

வாழைச்சேனை இந்துக்கல்லூரியில் கல்விகற்ற முஸ்லீம் மாணவர்கள் பெயர் விபரம்

| | |
|---|---|
| T.L. அப்துல்சலாம் | (T.L.T.) |
| ஜனாப். A.M. அப்துல் காதர் J.P. | கல்விப் பணிப்பாளர் |
| ஜனாப். M.S. மீராசாகிப் | |
| S.M. கபூர் | புடவைக்கடை |
| M.S. அலியார் | |
| பரீதா உம்மா | ஆசிரியை |
| ஜனாப். H.M. இப்ராஹிம் | அதிபரும், சட்டத்தரணியும் |
| ஜனாப். H.M. இஸ்மாயில் | கிராம உத்தியோகத்தர் |
| ஜனாப். அகமது லெவ்வை | காகித ஆலை |
| ஜனாப். தம்புக்குட்டி | விளையாட்டு வீரர் |
| ஜனாப். மஹ்முது | அதிபரும், ஊடகவியலாளரும் |
| ஜனாப். லாபிர் | |
| பவுசுல் அமின் | |
| ஜனாப். முகமது இஸ்மயில் | தபால் அதிபர் |
| ஜனாப். ரசீத்கான் | ஆசிரியர் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| மீராசாஹிப் | (அதிபர்) |
| ஜனாப். H.M. அப்துல் ஹசன் | |
| இஸ்மாயில் | (தபால் சேவை) |
| ஜனாப். ஹசன் | (மரக்கறி வியாபாரி) |
| பிரித்தவிசா | ஆசிரியை |
| ஜனாப். முனாஸ் | நீதிமன்ற ஊழியர் |
| பத்மாவீவீ | |
| ஜனாப். மௌலானா | |
| ஜனாப். H.M. புகாரி | விளையாட்டுச் சாதனையாளர் |
| றஹீலா உம்மா | B.A |
| M.S. றைஹானா | (நூலகரின் தயார்) |
| கதீசா உம்மா | |
| ஜனாப். H.M. காதா | (பத்திரிகை ஏஜண்ட்) |

(சிலரின் பெயர்கள் விடுபட்டிருக்கலாம்)

## வட்டவான் கலைமகள் வித்தியாலயம்

1978 இல் ஏற்பட்ட சூறாவளி, 2004 இல் ஏற்பட்ட சுனாமி ஆகியவற்றின் காரணமாக இப்பாடசாலையானது மட்டக்களப்பு திருகோணமலை (கரையோரப்பாதை) பாதையில் உசன் ஏற்றத்திலிருந்து கிழக்கே அமைந்துள்ளது. வட்டவானில் குடியிருந்தவர்களின் குடிமனைகள் இவ்விடத்திலேயே அமைந்துள்ளன. இப்பாடசாகைக்குப் பெயர் சூட்டியவர் திரு.பெ. புண்ணியமூர்த்தி அதிபர். இங்கு செ. நல்லதம்பி, திருமதி. கமலாஜினி நல்லதம்பி, பெ. புண்ணியமூர்த்தி, க. திருநாவுக்கரசு, திரு. வேதாரணியம், ச. பரமேஸ்வரன், திருமதி. A.A. தாஸ் ஆகியோர் அதிபராகப் பணியாற்றியுள்ளனர். தற்போது திரு.சீ. ஜெயராசா அதிபராகவுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாசிவன்தீவு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை.

இப்பாடசாலை வாழைச்சேனையின் வடபுறமாக ஓடிச் செல்லும் "மதுறு ஓயா" என்னும் உப்பாற்றிற்கு அப்பால் உள்ளது. இப்பாடசாலையில் திருமதி. சி.ப. தங்கத்துரை, திரு. வீ. இளையதம்பி (அதிபர்), திரு. க. சதாசிவம், திரு. சீ. ஜெயராசா ஆகியோர்கள் அதிபர்களாக கடமையாற்றியுள்ளனர்.

## இந்துக்கல்லூரியின் வரலாற்றின் முக்கிய பதிவுகள்.

வாழைச்சேனை இந்துக்கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தில் திரு.பெ. புண்ணியமூர்த்தி அவர்கள் நீண்டகாலமாக செயலாளராகவிருந்தார். இக்காலத்தில் அப்பாடசாலை இந்துக்கல்லூரி எனப் பெயர் பெறவில்லை. 1960 இல் வாழைச்சேனையில் கந்தையா விளையாட்டுக் கழகத்தினர் நடாத்திய பாரிய விளையாட்டுப் போட்டியினை அடுத்தே 1960 இல் இக்கல்லூரியில் முதலாவது விளையாட்டுப் போட்டி ஆரம்பிக்கப்பட்டது. அப்போது அதிபராயிருந்தவர் அமரர். செ.இளையதம்பி (J.P.) அறிவு, அன்பு, அருள் ஆகிய மூன்று இல்லங்கள் இருந்தன.

1970 இல் திரு.க. நடராஜமூர்த்தி அதிபராக வந்ததன் பின்னர்தான் இப்பாடசாலை அதிக வளர்ச்சியை அடைந்தது, அவர் இங்கு அதிபராக வருவதற்கு உறுதுணையாக இருந்தவர் பழைய மாணவர்சங்கச் செயலாளர் திரு.பெ. புண்ணியமூர்த்தி என்பது குறிப்பிடத்தக்கதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கருங்காலிச்சேலை அரசினர் பாடசலை

இப்பாடசாலை பிரதிக்கல்விப் பணிப்பாளராயிருந்த S. நாகேந்திரம் அவர்களால் 24.01.1992 இல் ஆரம்பிக்கப்பட்டது. முதலாவது அதிபராக M.தேவரெட்ணம் கடமையாற்றினார். செல்வி. செ.புவனேஸ்வரி, திருமதி.சு.கார்த்திகேசு, திருமதி. கனகநாயகி துரைராசா, T.V. சுப்பிரமணியம், செல்வி. ச. நந்தினி, செல்வி. எஸ். சாருலதா, S. சுகந்தினி, திருமதி. லலிதா நடேசமூர்த்தி, தே.பானந்தினி, திருமதி. செவ்வந்தி சதீஸ்வரன் ஆகியோர் கடமையாற்றினர். திரு. ஜோசப் பரராஜசிங்கம் (பா.உ.) பாடசாலை கட்டிடத்திற்கு நிதியுதவினார். முதலாவது விளையாட்டுப் போட்டி 98 இல் நடைபெற்றது. பல நிறுவனங்கள் இப்பாடசாலைக்கு பல உதவிகளை வழங்கியுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் நான்கு

## கலைத்துறை

இப்பிரதேசம், பாரம்பரியக் கலைகளில் பெயர் பெற்றதாக விழங்கியது. நூறு வருட காலங்களுக்கு மேலாக இப்பிரசேதங்களில் வாழ்ந்த கலஞர்கள், ட்றாமா கொட்டகை போட்டு நாடகம் அரங்கேற்றுவதிலும், கூத்துக்களரிகளில் கூத்துக்களை அரங்கேற்றுவதிலும், பிரசித்தி பெற்றிருந்தனர். இவர்களுள் ட்றாமாக்காரச் சபாபதியர் அவரது மகள் சங்கரப்பிள்ளை தெய்வானை ஆகியோர் முன்னணியில் திகழ்ந்தனர்.

கூத்தினைப் பொறுத்தவரையில், வாழைச்சேனையைச் சேர்ந்த அண்ணாவி இ.விநாயகம் என்பவர் புகழ்பெற்ற அண்ணாவியாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தார். மாங்காட்டிலிருந்து வந்து இங்கு திருமணம் செய்த கந்தையா அண்ணாவியாரும், புகழ்பெற்றிருந்தார். இவர் வடமோடி தென்மோடி, வசந்தன் கூத்து ஆகியவற்றினைப் பழக்குவதில் கைதேர்ந்தவராயிருந்தார்.

பேய்த்தாழையில் வைரமுத்து அண்ணாவி, புட்டுவர் கணபதிப்பிள்ளை அண்ணாவி, தம்பிமுத்து, அண்ணாவி ஆகியோர் புகழ் பெற்றிருந்தனர். தற்போது இவர்களின் மரணத்தின் பின்னர் அவர்களிடம் கூத்துக்கலை பயின்ற திரு.செ. நல்லதம்பி என்பவர் கூத்துப்பழக்கும் வேலைகளில் ஈடுபட்டு வருகின்றார்.

மேற்குறிப்பிட்டவர்களை விட மாரிவெள்ளக்குட்டி அண்ணாவி என்பவர் ஒரு கால் ஊனமுற்றவராயிருந்த போதிலும் கூத்துக் கொப்பி எழுதுதல், மத்தளம் அடித்தல், கொப்பி பார்த்தல், பழக்குதல் ஆகியவற்றில் சிறந்தவராயிருந்தார்.

கல்குடாவில் பொன்னையா அண்ணாவி, வேலன் அண்ணாவி ஆகியவர்களும் கிண்ணையடியில் இரத்தினப்பிள்ளை அண்ணாவி ஆகியோரும் சிறந்த கூத்துக்கலைஞர்களாயிருந்தனர். இப்பிரதேசங்களில் ஆடப்பட்டு, அரங்கேற்றப்பட்ட கூத்துக்களின் விபரம்

- இராம நாடகம்
- குசேல சரித்திரம்
- அரிச்சந்திரன் நாடகம்
- 18ம் போர்
- கண்டிராசன் கதை
- குருக்கேத்திரன் சண்டை
- வள்ளியம்மன் நாடகம்
- வலகுசலக நாடகம்
- 14ம் போர்
- சுபத்திரை கல்யாணம்
- பப்பிரவாகன் நாடகம்
- அனுமன் சண்டை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✸ அல்லி நாடகம் ✸ அர்ச்சணன் தவசு

**அண்ணாவி விநாயகம்:**

இவர் வாழைச்சேனையில் பிறந்தார். பல கூத்துக்களைப் பழக்கிப் பல இடங்களில் அரங்கேற்றிப் புகழ்பெற்றவர். அக்காலத்தில் 1953 இல் வாழைச்சேனை இந்துக்கல்லூரி அரசினர் கனிஷ்ட பாடசாலையாக இருந்தபோது அமரர். எஸ். இளையதம்பி அதிபராயிருந்த காலத்தில் புராணக் கதைகளில் ஒன்றான சூரசம்ஹாரம் கூத்தின் சண்டைக்காட்சியினை மாணவர்களைக் கொண்டு பயிற்றுவித்து, கண்டி மாநகர்வரை புகையிரத்தில் சென்று, 2ம் பரிசினை பெற்றுக்கொடுத்தார்.

அக் கூத்தில் ஆடிய மாணவர்கள் பெயர் விபரம்

| | |
|---|---|
| மு. இராசதுரை | பத்மாசூரன் |
| கே. கனகரெத்தினம் | தாரகாசூரன் |
| உ. தங்கராசா | கிருஷ்ணர் |
| வீ. தங்கத்துரை | சிங்கமாசூரன் |

ஆகியோர்களாவர். இவர் பெயரில் அவரது ஞாபகார்த்தமாக இந்துக்கல்லூரி மைதானத்தில் "அண்ணாவி விநாயகம் அரங்கு" என்ற பெயரில் ஒரு நாடகமேடை அமைக்கப்பட்டிருந்தது. காலவரையில் அது அழிக்கப்பட்டுவிட்டது. மீண்டும் அவரது பெயரில் அரங்கு ஒன்று நிறுவப்பட வேண்டும் என்பது இப்பகுதி கலை ஆர்வலர்களின் ஆதங்கமாயுள்ளது.

**சி. கணபதிப்பிள்ளை அண்ணாவி (புட்டுவர்)**

இவர் எழுதப் படிக்கத் தெரியாத ஒருவர். செவியேறல் மூலமாக கூத்துக்கலையில் பாண்டித்தியம் பெற்றிருந்தார். பேத்தாழை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருங்காலிச் சோலையைச் சேர்ந்த இவர் மட்டக்களப்பில் நடைபெற்ற அண்ணாவியார் மகாநாட்டில் பங்குபற்றியவர். அத்துடன் கல்குடாப் பகுதியின் கிராம சபை உறுப்பினராக தமிழரசிக் கட்சியின் சார்பாக போட்டியிட்டு வெற்றி பெற்றவர். பல கூத்துக்களைப் பழக்கி அரங்கேற்றியவர். வாகரை, மன்னம்பிட்டி, கறுப்பளை போன்ற பிரதேசங்களிலும் நாட்டுக் கூத்தினைப் பழக்கி அரங்கேற்றியவர்.

**மாரி வெள்ளக்குட்டி அண்ணாவி**

இவர் பல கூத்துக்களைப் பழக்கி அரங்கேற்றியவர். ஆரம்ப காலத்தில் வைரமுத்து அண்ணாவியிடம் மத்தளம் அடிக்கக் கற்றுக் கொண்டதாக கூறினார். இவர் பாடசாலை மாணவ, மாணவிகளைக் கொண்டு பயிற்றுவித்த கூத்துக்கள் பல தமிழ்தின விழாக்களில் பரிசு பெற்றுள்ளன. இவர் ஒரு கால் ஊனமுற்றவராயிருந்த போதிலும் கூத்தாடுபவர்களுக்கு ஆட்டம் காட்டுவதில், திறமையானவராயிருந்தார். அழகாக தமிழ் எழுத்துக்களை எழுத வல்லவர். கூத்துக் கொப்பிகள் பல இவரது கையெழுத்திலேயே எழுதப்பட்டுக் காணப்படுகின்றன.

இவரைப்பற்றி தினக்கதிர், தினகரன், வீரகேசரி ஆகிய பத்திரிகைகளில் கலாபூஷணம் தாழை செல்வநாயகம் என்பவரால் நேர்காணல், கட்டுரை ஆகியன எழுதப்பட்டுள்ளன. வானொலி கல்விச் சேவையிலும் இவர் பற்றிப் பேசப்பட்டுள்ளது. 2009 இல் இவர் மரணமடைந்துவிட்டார்.

இன்றும் பல அண்ணாவிமார்கள் இப்பிரதேசத்தில் பல கூத்துக்களைப் பழக்கி அரங்கேற்றியுள்ளனர். 2009 இல் "புலவர்மணி கலா மன்றத்தின்" மூலம் பேத்தாழை கருங்காலிச் சோலையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணாவி நல்லதம்பியினால் "14ம் போர்" என்றும் கூத்து இறுதியாக அரங்கேற்றப்பட்டது. இதனை கலாபூஷணம் தாழை செல்வநாயகம் தயாரித்து வழங்கினார்.

பாரம்பரிய கலைகளில் இப்பிரதேசம் முன்னணியில் உள்ளதனை அறிய முடிகிறது. சுமார் ஐம்பது வருடகாலங்களுக்கு முன்னர் இப்பிரதேசமானது மகுடி விளையாட்டு, கோடுகச்சேரி, கப்பல் கட்டுதல், ஊஞ்சலாட்டம், புலியாட்டம், கிளித்தட்டு விளையாட்டு, தோணியோட்டம், நீச்சல் வியைாட்டு போன்ற கலை நிகழ்ச்சிகள், விளையாட்டு நிகழ்ச்சிகளில் பெயர் பெற்று விளங்கியது. சித்திரை வருடப் பிறப்புக் காலங்களில் ஊரில் இவை வருடா வருடம் நடைபெற்று வரும். காலவரையில் இவை மறைந்து வருவதனை அறிய முடிகின்றது. 2004 இல் தாழைசெல்வநாயகம் அவர்களால் பேத்தாழைக் கிராமத்தில், "மகுடி விளையாட்டு" நடாத்திக் காண்பிக்கப்பட்டது இதுவே இறுதியாக இப்பிரதேசத்தில் நடாத்தப்பட்ட ஒரு பாரம்பரியக் கலையாகும். இக்கலைகளில் சிறந்து விளங்கியவர்களின் மறைவும், அரசு இதற்கு ஊக்கமளிக்காமையும், இக்கலைகளில் மக்களின் ஆர்வம் குறைந்து வருவதுமே இவை அழிந்து போவதற்குக் காரணங்களாயுள்ளன.

**நாடக மன்றங்கள்.**

ஐம்பது (50) வருட காலங்களுக்கு முன்னர் இப்பிரதேசத்தில் பல நாடக மன்றங்கள் இயங்கி நாடகக்கலையினை வளர்த்து வந்துள்ளன. பண்டிகை காலங்கள் கோயில் திருவிழாக்கள் ஆகியவற்றில் அரங்கேற்றப்பட்டும் வந்தன. தற்போது உரிய கலைஞர்கள் மறைந்து போனதன் பின்னரும், பொது மக்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதரவின்மையும், சினிமா சின்னத்திரை ஆகியவற்றின் ஆதிக்கங்கள் காரணமாகவும் இக்கலை மறைந்து வருவதனை அறிய முடிகின்றது. நாடகக் கலைக்கு புத்துயிர் அளித்து வந்த மன்றங்களாவன

- சக்தி கலாமன்றம்
- அண்ணாகலை மன்றம் (கறுவாக்கேணி)
- கம்பன் கலாமன்றம்
- இளந்தளிர் விளையாட்டுக் கழகம்
- எம்.ஜி.ஆர். கலா மன்றம்
- ஒகோபுரடக்சன்
- கலைவாணி கலாமன்றம்
- கந்தையா விளையாட்டுக் கழகம்
- ஆர்.கே.கோமாளிகள்
- புலவர்மணி கலாமன்றம்
- கிருஷ்ணா விளையாட்டுக் கழகம்
- ஊர்ப்பணி மன்றம்

இன்னும் பல.

**சக்தி கலாமன்றம் (வாழைச்சேனை)**

இதன் ஆரம்பகால ஸ்தாபகராக அமரர். க.செந்தில்நாயகம் B.A. அவர்கள் இருந்ததுடன் அதன் தலைவராகவுமிருந்து பல நாடகங்களை எழுதி முக்கிய பாத்திரங்களில் நடித்தும் வந்தார். சக்தி கலாமன்றத்தின் மூலம் அரங்கேற்றப்பட்ட நாடகங்களில் முக்கிய மானவற்றுள் சில.

- கள்வனின் காதலி
- புது மாப்பிள்ளை
- பெயரில்லாத இரு காவிய நாடகங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இம் மன்றத்தின் முக்கிய நடிகர்கள் பெயர் விபரம்**

- க. செந்தில் நாயகம்
- ச. தம்பிராசா
- உ. தங்கராசா
- திருமதி. ப. தம்பிராசா
- க. சோமாஸ்கந்தராசா
- ஆர். எதிர்மனசிங்கம்
- கஸ்டன் பிராங்
- பி.கே. கணபதிப்பிள்ளை
- கா. நாராயணபிள்ளை
- சி. ஞானராசா
- கா. பொன்னுத்துரை

மேற்குறிப்பிட்ட அனைவரும் இப்பிரதேசத்தின் சிறந்த நடிகர்கள்

**கம்பன் கலாமன்றம் - வாழைச்சேனை**

இம் மன்றம் 1963 இல் கலாபூஷணம் தாழை செல்வநாயகம் என்பவரால் உருவாக்கப்பட்டது, அதன் தலைவரும் அவரே இம் மன்றம் வாழைச்சேனை விபுலானந்த வீதியில் பாரிய மேடையமைத்து, முதன் முதலாக மூடிய திரை என்றும், சமூக நாடகத்தினை அரங்கேற்றியது. ஒலி, ஒளி அமைப்புக்கள், ஆரையம்பதி "சுந்தரம்ஸ்" குழுவினர்களால் ஒழுங்கு செய்யப்பட்டன. மூடிய திரை நாடகத்தின் கதாநாயகனும் தாழை செல்வநாயகம் அவர்களே ஆவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம் மன்றத்தின் மூலம் அரங்கேற்றப்பட்ட ஏனைய நாடகங்கள் சில

- சாக்கிரட்டிஸ்
- உரிமைப்போர்
- தேர்தல் காலத்தினிலே...
- சாப்பிராட் அசோகன்.
- கடமையின் எல்லை

இன்னும் பல சிரிப்பு, சமூக, வரலாற்று நாடகங்களும் அரங்கேறின

**இம் மன்றத்தின் முக்கிய நடிகர்கள்**

தாழை செல்வநாயகம்

- கா. இரத்தினம்
- கா. சேதுகாவலர்
- இ. செல்வராசா
- மு. பாலசுந்தரம் (மரக்கறிக்கடை)
- த. குருகுலசிங்கம் (பெண் நடிகர்)
- மு. சபாரெத்தினம் (பெண் நடிகர்)
- சி. தர்மலிங்கம் (பெண் நடிகர்)
- சு.ம. நல்லதம்பி
- அற்புதராசா குருஸ்
- க. சுந்தரலிங்கம் (ஆரையம்பதி)
- மேசன் சண்முகம் (இயக்கம், சண்டைக்காட்சி)
- அ. அழகுதுரை (நடனமாடுவதில் சிறந்த பெண் நடிகர்)

**பின்னணிப்பாடல்கள்:**

க. அன்னலெட்சுமி, கு. துளசிமணி

**தயாரிப்பாளர்** : ப. குமாரவேற்பிள்ளை (யாழ்ப்பாணம் தெல்லிப்பழை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எம்.ஜீ.ஆர் கலாமன்றம் (ஓடியன்ஸ்)** : 1965 இல் சபாபதி தம்பிராசா அவர்களால் ஆரம்பிக்கப்பட்டது. அதன் பின்னர் 1970ல் இம் மன்றம் பாரதி கலாமன்றம் எனப் பெயர் மாற்றப்பட்டது. நடிக்கப்பட்ட நாடகங்கள், சுயம்வரம், உப்புக்குறவன், கண்ணீரின் கடமை, துப்பறியும் சகோதரர்கள், அப்பாவி ராமு, கொலிஜ்கேள், ஊமையின் கனவு,

**நடிகர்கள்.**

- ச. தம்பிராசா
- திருமதி. பத்மினி தம்பிராசா
- இ. விஜயா
- க.விஜயா,
- ச. கணேசன்,
- ச. நடராசா,
- உ. கண்ணப்பன்,
- ந. நாகராசா,
- வி. தேவன்,
- ச. கந்தசாமி,
- வை.ராசா
- ஆர்.கே.

ஆகியோர் 1982 இல் "ஊமையின் கனவு" கலாச்சார விழாவில் பரிசு பெற்றது.

**புலவர் மணி கலாமன்றம்**

1987 ஆம் ஆண்டில் இந்தியன் பாதுகாப்பு படை இப்பிரதேசத்தில் குடிகொண்டிருந்த வேளையில் தாழை செல்வநாயகம் அவர்களால் பேத்தாழையில் ஆரம்பிக்கப்பட்டதே புலவர்மணி கலாமன்றமாகும். இதன் முதல் நடவடிக்கையாக சி. கணபதிப்பிள்ளை மா.வெள்ளக்குடி ஆகிய அண்ணாவிமார்களைக் கொண்டு "பப்பிரவாகன் நாடகம்" என்னும் வடமோடிக் கூத்து இவ்வூர் இளைஞர்களைப் பழக்கி அரங்கேற்றப்பட்டது. இந்திய அமைதி காப்பு படை இதற்கு பாதுகாப்பு வழங்கியது. இந் நாடகத்தின் தயாரிப்பாளர் (மனேச்சர்) தாழை செல்வநாயகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக் கூத்து தொடர்ந்து இரு தடவைகள் பேத்தாழையில் அரங்கேற்றப்பட்டது. அதன் பின்னர் 2009 இல் கருங்காலிச்சோலை பாடசாலை மைதானத்தில் "14ம் போர்" என்னும் கூத்தினை அரங்கேற்றியது. இக் கூத்திற்கு சமாதான சகவாழ்வு மன்றம் (மட்டக்களப்பு) 10,000/= ரூபாயும், திரு. சா. பஞ்சலிங்கம் 5,000/= ரூபாவும், திரு. ஆ.சிவநேசதுரை 1,000/= ரூபாயும் "கபினாஸ்" வாழைச்சேனை 1,000/= ஆயிரம் ரூபாயும் அன்பளிப்பாக நிதி வழங்கினர். இதன் அண்ணாவி செ. நல்லதம்பி அவர்கள் பாடசாலை மாணவர்களின் "வள்ளியம்மன்" நாடகம் அரங்கேற்றம் இதன் பணியாகும்.

**ஊர்ப்பணி மன்றம்**

இதன் ஸ்தாபகர் "அமரர். வே. ஞானமுத்து கிளாக்கர்" அவர்கள் இவர் பழுகாமத்தினைப் பிறப்பிடமாக் கொண்டிருந்ததாலும், வாழச்சேனையில் திருமணம் முடித்து இங்கேயே நீண்ட காலம் வாழ்ந்து வெளிநாடொன்றில் அமரத்துவமானார். இவர் எழுது விளைஞராக கடமையாற்றி ஈற்றில் உதவி அரசாங்க அதிபராக வாழைச்சேனை, வாகரை ஆகிய பிரதேசங்களில் கடமை புரிந்தார்.

வாழைச்சேனை தபால் துறையில் உதவி அரசாங்க அதிபர் காரியாலயம் இயங்கிய வேளையில் அப்போது அக்காரியாலயம் DRO. கந்தோராகவே பெயர் பெற்றிருந்தது. (அரச வரி அறவிடும் காரியாலயம்) அக்கட்டிடத்தில் ஞானமுத்துக்கிளாக்கர் தலைமையில் ஊர்ப்பணி மன்றத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் 1978 இல் நடந்தது. வாழைச்சனை, பேத்தாழை ஆகிய கிராமங்களிலிருந்து பொதுப்பணிகளில் ஈடுபட்டு வரும் பிரமுகர்கள் ஒன்பது பேர் (09) தெரிவு செய்யப்பட்டு இக் கூட்டம் நடைபெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அங்கத்தவர்களின் பெயர் விபரம்**

திரு. வே. ஞானமுத்து தலைவர்
திரு. வீ. இளையதம்பி அதிபர்
திரு. நா.கதிர்காமத்தம்பி அதிபர்
திரு. க. செல்வநாயகம் (தாழை செல்வநாயகம்)
திரு. வே. சந்திரசேகரம் காகித ஆலை
திரு, சி. ஞானராசா தபாலதிபர்
திரு. க. கந்தசாமி புதுக்குடியிருப்பு
திரு. தியாகராசா பொது முகாமையாளர் ப.நோ.கூ.சங்கம்
அமரர். வீ. சிவலிங்கம் (பகுதிவன அதிகாரி)

ஆகியோர் ஊரில் ஏற்படும் அனர்த்தங்களால் பாதிக்கப்படும் மக்களுக்கு உதவுதல். ஏழை மக்களின் குடும்பங்களில் ஏற்படும் மரண வீடுகள், திருமண வீடுகள ஆகியவற்றில் பங்கேற்று போதிய உதவி புரிதல், கலைகளின் வளர்ச்சிக்கான சேவையாற்றுதல், ஊர்ப்பெயரிவர்களைக் கௌரவித்தல் ஆகிய அடிப்படை நோக்கங்களுடன் இம்மன்றம் ஆரம்பிக்கப்பட்டது.

மன்றத்திற்கு நல்லதொரு பெயர் சூட்டவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டபோது தாழை செல்வநாயகம் அவர்களே "ஊர்ப்பணி" மன்றம் என்ற பெயரினைச் சூட்டினார். வே. ஞானமுத்து அவர்களுக்குப்பின் திரு.செ. தியாகராசா, திரு.வீ. இளையதம்பி ஆகியோர் தலைவர்களாகவும், தாழைசெல்வநாயகம் செயலாளராகவும், க. சந்திரசேகரம் பொருளாளராகவும் பணிபுரிந்தனர். நாட்டின் அசாதாரண சூழ்நிலை ஏற்பட்ட பின்னர் இம் மன்றம் செயலிழந்து போயிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கந்தையா விளையாட்டுக் கழகம்**

1960 ஆம் ஆண்டில் இப்பிரதேசத்தில் இவ்விளையாட்டுக் கழகத்தின் மூலம் முதல் முதலாக பாரம்பரிய விளையாட்டுக்களான கிளித்தட்டு, அடிபந்து, நீச்சல், தோணியோட்டம், ஆகியனவும் மெய்வல்லுனர் போட்டிகளும் பிரமாண்டமான முறையில் நடைபெற்றன இவ்விளையாட்டுக் கழகத்தைப் பின்பற்றியே, வாழைச்சேனை சிரேஸ்ட பாடசாலையிலும் 1960 இல் விளையாட்டுப் போட்டிகள் ஆரம்பிக்கப்பட்டன. க.கணேசன், ஞா. தேவராஜ் ஆகிய இருவருமே இதனை ஆரம்பித்தவர்கள். பின்னர் வீ. இளையதம்பி, S. விநாயகம், சி. மகேஸ்வரன், ந.கணேசமூர்த்தி, கி. இளையதம்பி, க.திருநாவுக்கரசு, ந. ஆறுமுகம் ஆகியோரும் இணைந்து கோறளைப்பற்றுப் பிரதேசம் முழுவதனையும் இணைத்து விளையாட்டுப்போட்டிகளில் பங்கேற்கவைத்து திறம்பட நடத்திவந்தனர்.

ந. கணேசமூர்த்தி விளையாட்டுப் பொறுப்பாளராகச் செயற்பட்டார். அதன் பின்னர் வீ. இளையதம்பியும் விளையாட்டுப் பொறுப்பாளர் பதவியில் இணைந்து கொண்டார். "கந்தையா விளையாட்டுக் கழகம்" என்ற பெயரைச் சூட்டியவர் திரு.வீ. இளையதம்பி அவர்களாவர். இக்கழகத்தினால் மகுடி விளையாட்டு, நாடகம் முதலிய கலை நிகழ்ச்சிகளும் நடாத்தப்பட்டுள்ளது.

**அரச ஓய்வூதியர்களின் நம்பிக்கை நிதியம்**

கோறளைப்பற்றுப் பிரதேசத்தில் கிரான், வாகரை ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகள், ஒன்றித்திருந்த 1999 ஆம் ஆண்டில் 40 ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தின் அடிப்படையில் தாபிக்கப்பட்டது. இந் நிதியத்தின் ஆரம்பம் 2001 ஆம் வருடம் ஜனவரி மாதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓய்வு பெற்றோர் தம் அபிமானத்தையும், மரியாதையையும் பேண உதவுவதன் மூலம் அவர்களது பொதுவான நலனோம்பு விடயங்களை விருத்தி செய்தல் என்ற அடிப்படையில் இலங்கை முழுவதும் உருவாக்கப்பட்டது. இலங்கை முழுவதும் 25 மாவட்டங்களிலும் அமைக்கப்பட்டுள்ளது.

திரு. எஸ். புண்ணியமூர்த்தி (D.S.) பிரதேச செயலாளராக கடமையாற்றியபோது பிரதேச செயலகத்தில் இதன் அங்குரார்ப்பணக் கூட்டம் 1999 இல் நடைபெற்றது. முதலாவது அமர்வில் திரு.வீ.இளையதம்பி அவர்கள் தலைவராகவும், திரு. தாழைசெல்வநாயகம் அவர்கள் செயலாளராகவும், திரு.என். கதிர்காமத்தம்பி அவர்கள் பொருளாளராகவும் நியமிக்கப்பட்டனர். இரு வருடங்கள் மாத்திரம் தலைமைப்பதவி வகித்த திரு,வீ. இளையதம்பி விலகிச் செல்ல திரு. தாழை செல்வநாயகம் இந் நிதியத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்று இன்று வரையில் (2010) தலைவராக பணியாற்றி வருகிறார்.

தற்போது (150) நூற்று ஐம்பது ஓய்வூதியர்கள் வரையில் இதன் அங்கத்தவர்களாயுள்ளனர். இலங்கையில் உள்ள அரச ஊழியர் சங்கங்களில் மிகப்பெரிய சங்கம் இந்நிதியமாகும். $1^1/_2$ இலட்சத்திற்கு (150000 பேர் வரையிலான) மேல் இலங்கை முழுவதும் அரசு ஊழியர்கள் அங்கம் வகிக்கின்றனர். மட்டக்களப்பு மாவட்டத்தில் 1500 பேர் உள்ளனர். இந்நிதியம் 10,000/= ரூபாய் கடன் திட்டம் மரணப் பணிக்கொடை, விசேட மரணப்பணிக்கொடை, சுகாதார அனுகூலம், கண்வில்லை கொடுப்பனவுத் திட்டம், வைத்திய சிகிச்சை அனுகூலம், உயர்கல்வி நன்கொடை சேமிப்பு வைப்புத்திட்டம், புனித யாத்திரைத் தலங்களுக்கான திட்டம், ஆகியவற்றை முன்னெடுத்துச் செல்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஓகோ புரடக்சன்**

இந்த மன்றத்தின் தாபகர் விநாயகம் இளையதம்பி அவர்கள் இம்மன்றத்தின் மூலமும் புராண நாடகங்கள் சிரிப்பு நாடகங்கள் ஆகியன 1970 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் மேடையேற்றப்பட்டன.
"இரணியன்"
"நரசிங்கன்"
"பாதாள பைரவி" ஆகியன முக்கியமான நாடகங்கள். இதில் பங்கேற்ற நடிகர்கள். ஆ. சிவநேசதுரை (பி. உறுப்பினர்) உ.தங்கராசா, வி. இளையதம்பி, நா. கந்தசாமி ஆகியவர்கள் முக்கிய நடிகர்கள்.

இரணியன் நாடகத்தில் ஆ. சிவநேசதுரை இரணியனாக நடித்தார். இதில் ஒரு கட்டத்தில் "தூணிலும் இருப்பான், துரும்பிலும் இருப்பான்" என்றொரு வசனம் வருகிறது. அவ்வசனத்தைப் பேசியபின் இரணியன் இந்தத் தூணிலும் இருப்பானா? என்று கேட்டு தூணுக்கு காலால் உதைக்கும் கட்டம். நாடகக் கொப்பி பார்த்த தயாரிப்பாளர் வி. இளையதம்பி இடம்மாறி இரணியன் உதைக்க வேண்டிய தூணின் மறைவில் நின்றுவிட்டார்.

இந்தத் தூணிலும் இருப்பானா? என்று இரணியன் கேட்டவாறு, தூணில் உதைக்க அந்தத் தூணின் மறைவில் நின்றிருந்த தயாரிப்பாளரின் வயிற்றில் உதைவிழுந்து நக்கென்றவாறு அவர் பின்னாலிருந்த மண் குவியலில் மல்லாக்காக விழுந்துவிட, சனங்கள் விழுந்து விழுந்து சிரித்தனர்.
உதைத்த இரணியன் - ஆ. சிவநேசதுரை
உதைவாங்கிய தயாரிப்பாளர் - வி. இளையதம்பி
(அன்றைய நாடகத்தின் காட்சி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றைவிட கறுவாக்கேணியில் அண்ணாகலை மன்றம், புதுக்குடியிருப்பில் ஆர்.கே. கோமாளிகள், பேய்த்தாழையில் இளந்தளிர் விளையாட்டுக் கழகம், கலை வாணி கலாமன்றம் ஆகியன பல நாடகங்களை காலத்துக்குக் காலம் அரங்கேற்றியுள்ளன. ஆர். கணபதிப்பிள்ளை, வி. இரத்தினம் ஆகியோர் ஆர்.கே. கோமாளிகளின் சிறந்த நடிகர்கள்.

**கலைஞர்கள்**

கோறளைப் பற்று பிரதேச செயலாளர் பிரிவில் கலாச்சாரப் பேரவை இயங்கத் தொடங்கியதன் பின்னரேயே, கலைத்துறையில் ஈடுபட்டவர்கள். கண்டு பிடிக்கப்பட்டு கௌரவ கலைஞர்களாக சமூகத்தின் முன் கொண்டுவரப்பட்டனர். அந்த வகையில் முத்துமாதவன், தாழைசெல்வநாயகம், ஹெ. மெத்தியேஸ், மு.தம்பிராசா, மு. தவராசா, மா. வெள்ளக்குட்டி, செ. நல்லதம்பி (அண்ணாவி), ரொனி சொக்மன் ஆகியோர்கள் இனங்காணப்பட்டனர்.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் 2003 இல் தாழை செல்வநாயகம் (எழுத்தாளர்), மா. வெள்ளக்குட்டி (அண்ணாவி) க. இராசகோபால் (சமூகசேவை), தா. இராசநாயகம் (பொதுப்பணி) ஆகியவர்கள் கலைஞர்களாக தெரிவு செய்யப்பட்டு, பிரதேச செயலாளர் எஸ். புண்ணியமூர்த்தி அவர்களால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டனர்.

**எழுத்தாளர்கள்**

தாழைசெல்வநாயகம், முத்துமாதவன், மு.தவராசா, ஹெ. மெத்தியோஸ், எஸ்.ஏ.ஸ்ரீதர், க.பரமானந்தராசா, திருமதி.சி.ப. தங்கத்துரை, ந. சத்தியசீலன், எ. ஜெயரஞ்சித் ஆகியோர் எழுத்துத் துறையில் ஈடுபட்டு வருகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கலாபூஷணவிருது பெற்றவர்**

தாழை செல்வநாயகம்

இவர் (40) நாற்பது வருட காலங்களுக்கு மேலான கலைச் சேவை ஆற்றியமைக்காக 2008 மார்கழி 15 இல் கலாச்சார அலுவல்கள் திணைக்களத்தினால் கலாபூஷண விருது வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்.

**ஆளுநர் விருது பெற்றவர்:**

தாழை செல்வநாயகம்

இவர், 1963 ஆம் வருடம் தொடக்கம் கலைச் சேவை செய்தமைக்காக கிழக்கு மாகாண சபையினால் 2007 இல் ஆளுநர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

**சாஹித்திய விருது பெற்றவர்கள் (தேசிய மட்டம் முதலிடம்)**

தாழைசெல்வநாயகம் - சிறுகதை

முத்துமாதவன் - கவிதை

இவர்கள், கலாச்சார அலுவல்கள் திணைக்களமும், மட்டக்களப்பு மாவட்ட கலாச்சாரப்பேரவையும் இணைந்து 06.11.2009 இல் நடத்திய இலக்கிய விழாவிலும், பொலநறுவையில் நடைபெற்ற அகில இலங்கை தேசிய விழாவிலும் அம்பாறையில் நடைபெற்ற மாகாண மட்ட, தேசிய இலக்கிய விழாவிலும் 1ம் இடத்தினைப் பெற்றமைக்காக சாஹித்திய விருதினைப் பெற்றனர்.

**1ம் இடம் பெற்ற ஆக்கங்கள்**

தோடம்பழக்காசி - சிறுகதை - தாழைசெல்வநாயகம்

தண்ணீர் - கவிதை - முத்துமாதவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தற்போதைய கோறளைப்பற்று வாழைச்சேனைப் பிரதேசத்தின் 150 வருட காலத்திற்குட்பட்ட வரலாறு

ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் தங்களுக்குச் சார்பாக செயற்பட்டவர்களை வன்னியர்களாகவும், உடையார்களாகவும், நியமித்தனர். அவர்களின் நிருவாக வசதிக்காக 13 பற்றுக்களை வகுத்தனர். அதில் ஒன்றுதான் கோறளைப்பற்று பிரதேசம், கல்குடா துறைமுகம், பெயர் பெற்று விளங்கலாயிற்று. கடற்கரையில் அமைக்கப்பட்டிருந்த "நோனாக்கோரி" (வெள்ளைக்காரியின் தோற்றத்திலிருந்ததால் இப்பெயர் பெற்றது) என்கின்ற கலங்கரை விளக்கு (Light House) கடற்பாலம் கிட்டங்கிகள் (3) மூன்று (இவை "ரேகு" எனப்பட்டன) பண்டகசாலைகள் அமைந்திருந்தன. மைய நகரமாக வாழைச்சேனை திகழ்ந்தது. திருக்கோயில் தம்பிலுவில், கல்லாறு, ஆரையம்பதி, நாவற்குடா, கல்லடி, அமிர்தகழி, மட்டக்களப்பு ஆகிய பிரதேசங்களிலிருந்து இங்கு வந்து குடியேறியதாக அறிய முடிகின்றது. முன்னர் இங்கு வாழ்ந்த வேடர்களில் சில குடும்பங்கள், பேய்த்தாழை கல்குடாவில் நிலைகொள்ள ஏனையோர் வாகநேரி, மாங்கேணி, வாகரை, கதிரவெளி, போன்ற பகுதிகளுக்கு குடிபெயர்ந்து விட்டதனையும் அறிய முடிகின்றது.

வடக்கே வெருகல் ஆற்றினையும், (மகாவலிக்கிளை) கிழக்கே கடலையும், தெற்கே முறக்கொட்டான் சேனை வரையிலும் மேற்கே மன்னம்பிட்டிப் பிரதேசம் வரையிலும் இருந்த கோறளைப்பற்றுப் பிரிவு, சில பல காரணிகளால் 1972 இல் வாகரைப் பகுதி தனியாகவும், 1990 இல் ஓட்டமாவடி தனியாகவும், 2002 இல் கிரான் பகுதி, கோறளை மத்தி என்பன தனியாகவும் பிரிக்கப்பட்டுவிட்டன. தற்போதைய பிரதேசம் 45.07 ச.கி. மீற்றர் பரப்பளவைக் கொண்டதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்போது வடக்கே நாசிவன்தீவும், கிழக்கே கடலையும், தெற்கே கும்புறுமூலையையும், மேற்கே கோறளை மத்தியையும் எல்லைகளாய் கொண்டுள்ளன. 22,918 பேர் சனத்தொகையினையும் 6,333 குடும்பங்களையும் உடையதாயுள்ளது. இனரீதியாகப் பார்க்குமிடத்து அதிகமாக தமிழர்களும், முஸ்லீம்கள் - 27, பௌத்தர்கள் - 55, ஏனையோர் - 118 பேராகவுள்ளனர். (இவை 2006 கணிப்பு).

**பொருளாதாரம்** : மீன்பிடியும், விவசாயமும் முக்கிய தொழில்களாயுள்ளன. கல்குடா வெம்பு, கல்மடு, கல்குடா பாசிக்குடா போய்த்தாழை நாசிவன்தீவு ஆகிய கிராமத்தவர் மீனவர்களாகவும் ஏனைய கிராமத்தவர் விவசாயிகளாகவும் உள்ளனர். மீன்பிடித்தொழில் 1601 குடும்பங்கள் உள்ளன. இப்பிரதேசத்தின் விவசாயிகள் விவசாயக்காணிகள் இல்லாததனால் வாகநேரி, ஆலங்குளம், கிரிமிச்சை, மதுரங்கேணிக்குளம், கோமாரியாமடு, ஆகிய பகுதிகளில் விவசாயம் செய்கின்றனர். கடதாசி ஆலைத் தொழிலாளர்களாகவும், 707 பேர் அரச சேவையில் ஈடுபட்டு வருகின்றனர். 152 பேர் அரச ஓய்வூதியம் பெறுகின்றனர். நிறுவனங்களில் 302 பேரும் ஏனைய நிறுவனங்களில் 94 பேரும் 184 பேர் வெளிநாடுகளிலும் தமது வருவாயைப் பெற்று வருகின்றனர்.

இவற்றைவிட மாடு வளர்ப்பு, ஆடு வளர்ப்பு, கோழி வளர்ப்பு, பாய் தென்னங்கிடுகு, தும்பு வேலை, மட்பாண்டம், விறகு வெட்டுதல், செங்கல் சுடுதல், ஆகிய தொழில்களிலும் ஈடுபட்டு வருகின்றனர். கோறளைப்பற்று பிரதேசத்தில் 13 பாடசாலைகள் உள்ளன. மொத்தமாக 5830 மாணவர்கள் பயில்கின்றனர். ஆண்கள் 2818 பெண்கள் 3012 பேரும் அடங்குவர். 236 ஆசிரியர்கள் உள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்கலைக்கழக கல்வியில், 2006 இல் 14 மாணவர்களும், 2007 இல் 19 மாணவர்களும் தெரிவாகினர்.

இப்பிரதேச மக்கள் ஒவ்வொரு குழுவின் பெயரால் அழைக்கப்படுவதனை அறிய முடிகின்றது. ஒரு கிராமத்தில் வாழும் ஒரே சமூகத்தினரை கத்தறை (மக்களின் குழு) என்று அழைக்கப்பட்டன. அவ்வாறு வழி வழியாக வந்தவர்களின் கத்தறையினை இரு கிராமங்களான வாழைச்சேனை, பேய்த்தாழை ஆகிய கிராமங்களை உதாரணமாகக் கொள்வோம்.

**வாழைச்சேனை**

- விண்ணாங்கர் கத்தறை
- சிதம்பர நாதப் பரிசாரி கத்தறை - (இவருக்கு 4 மனைவிகளும் 32 பிள்ளைகளும்
- வீறியர் கத்தறை
- பொக்கணியர் கத்தறை (உமையர்)
- மணியர் கத்தறை
- சம்மாரின் கத்தறை
- குடுப்பையர் கத்தறை
- துறைக்காறக் கத்தறை
- விடுதலையர் கத்தறை
- ரெட்டியார் கத்தறை
- அதிகாரி கத்தறை
- கங்காணி கத்தறை
- வீரகத்தி கத்தறை
- சின்னப்பபோடி பரிசாரி கத்தறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பேத்தாழை**

- ✷ மாரிப்போடி கத்தறை
- ✷ பட்டங்கட்டியார் கத்தறை
- ✷ நஞ்சரின் கத்தறை
- ✷ நொண்டியர் கத்தறை
- ✷ அப்புவர் கத்தறை அல்லது கந்தியின் கத்தறை
- ✷ ஆனையர் கத்தறை
- ✷ சக்கையன் போடி கத்தறை

**பிரபல வைத்தியர்களும் சோதிடர்களும்**

சி. கணபதிப்பிள்ளை (பாம்புக் கடிவிசம், சோதிடம்) - வாழைச்சேனை
சி.ப. முத்தையா & திருமதி. தெய்வானை முத்தையா (ஆயுர்வேதம்)
P.சோமநாதன் & திருமதி. வள்ளியம்மை சோமநாதர் (ஆயுர்வேதம்)
முத்தையா சரோசா (ஆயுர்வேதம்) எட்டாவது பரம்பரை வாழைச்சேனை
த.கணபதிப்பிள்ளை (மு.றிவு வைத்தியர்) புதுக்குடியிருப்பு
க. சிவலிங்கம் (விசவைத்தியர்) - கல்குடா
தாமோதரம் - (விசவைத்தியர்) - கல்குடா
மு. தம்பிராசா (சோதிடம், விசவைத்தியம்) - புதுக்குடியிருப்பு
பெ. புண்ணியமூர்த்தி (சோதிடம்) - புதுக்குயிருப்பு
கே.எஸ். காராளசிங்கம் (முறிவு வைத்தியம்) - வாழைச்சேனை
கணபதிப்பிள்ளை (விசவைத்தியம்) - முதலையர் நாசிவன் தீவு
சீனித்தம்பி சாத்திரியார். - வட்டவான்
இராசலிங்கம் (விசவைத்தியர்) - கறுவாக்கேணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழைச்சேனையிலும், பேய்த்தாழையிலும் கதிர்காம யாத்திரிகர்களுக்காக வருடா வருடம் "தர்மசத்திரம்" நடாத்தியவர்கள்

1983 ஆம் வருட வன்செயல் காலத்திற்கு முன்பிருந்து, சுமார் நூறு வருடகாலங்களுக்கு மேலாக யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய தமிழ் பிரதேசங்களிலிருந்து யாத்திரிகர்கள் கதிர்காமக் கந்தனைத் தரிசிப்பதற்காக கால் நடையாக யாத்திரை மேற்கொண்டு வந்தனர். கதிர்காமத்தில் கொடியேற்றம் தொடங்கியதும் (ஆடித் திருவிழா) இவ்வகையினரான யாத்திரிகர்கள், ஊர்கள் தோறும் திரிந்து பிச்சை எடுத்து, நடைபவனியாக கூட்டம், கூட்டமாக யாத்திரையினை மேற்கொண்டு வருவர். ஆண்கள், பெண்கள், முதியவர்கள், சிறுவர்கள் என வரும் இவர்களுக்கு, பணம் படைத்தவர்கள், போடிமார்கள் சத்திரம் அமைத்து தண்ணீர், சாப்பாடு ஆகியன வழங்குவர்.

இத்தகைய தர்மசீமான்களின் வரிசையில், வாழைச்சேனையைச் சேர்ந்த உம்முணியர் கதிர்காமத்தம்பி (உ.க.) என்பவரும் பேய்த்தாழையைச் சேர்ந்த சக்கையரின் பரம்பரையைச் சேர்ந்த காசுபதி கதிர்காமத்தம்பி (கா.க) என்பவரும் முதன்மை பெற்றிருந்தனர்.

காசுபதி, கதிர்காமத்தம்பியின் இறப்பிற்குப் பின்னர் அவரது துணைவியார் செல்லம்மா கதிர்காமத்தம்பியும் அவரது இறப்பிற்கு பின்னர் மகளான தேவி பஞ்சலிங்கமும் சிறிது காலம் தொடர்ந்து நடாத்தி வந்தார். நாட்டில் ஏற்பட்ட கலவரங்கள் காரணமாக இந்நிலை தடைப்பட்டு விட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சூரம்சம்ஹாரம் (நாட்டுக்கூத்து)**

வாழைச்சேனை இந்துக்கல்லூரியல் (அரசினர் கனிஷ்ட பாடசாலையாக இருந்தபோது) அண்ணாவி விநாயகம் என்பவரால் 1953 இல் இப்பாடசாலை மாணவர்களைக் கொண்டு பயிற்றுவிக்கப்பட்ட "சூரம்சம்ஹாரம்" என்னும் கூத்து அகில இலங்கை ரீதியல் நடைபெற்ற கிராமியக் கலைகளுக்கான போட்டியில் கண்டியில் 2ம் இடத்தினைப் பெற்றது.

திரு.க. கனகரெத்தினம், M. இராசதுரை, வீ. தங்கத்துரை, உ.தங்கராாச ஆகியோர் பங்கேற்ற இக் கூத்தினை அதிபர் எஸ். இளையதம்பி அவர்களும், மா. இராசையா ஆசிரியர் அவர்களும் 1953 இல் முன்னின்று நடத்தினர்.

அண்ணாவி திரு. விநாயகம்
சல்லாரி திரு. செல்லத்தம்பி
பக்கப்பாட்டு திரு. வி. கார்த்திகேசு
பொறுப்பாளர் திரு. மா. இராசையா ஆசிரியர்.

இக் கூத்து அரை மணி நேரத்திற்கு போட்டிக்காகத் தயாரிக்கப்பட்டது.

**இப்பிரதேசத்தில் வட்ட விதானைமாராக இருந்தவர்கள்**

மாசாலாமணி வட்டவிதானை.
A. சின்னத்தம்பி வட்ட விதானை
V. கயிலாபிள்ளை வட்டவிதானை
V. கந்தையா வட்டவிதானை.
K. குகனேந்திரன் வட்ட விதானை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இப் பிரதேசத்தில் நாட்டு வைத்தியர்களாவும், மருத்துவிச்சிகளாகவும், பணிபுரிந்தவர்கள்**

சி. கணபதிப்பிள்ளை,

P. சோமநாதர்,

சி. ப. முத்தையா,

திருமதி. தெய்வானைப்பிள்ளை முத்தையா,

திருமதி. கண்ணகை சோமநாதர்,

தம்பியப்பா கணபதிப்பிள்ளை,

முருகேசு தம்பிராசா,

முத்தையா சறோசா,

கே.எஸ். காராளசிங்கம்,

கல்குடா சிவலிங்கம்,

தாமோதரம்பிள்ளை (கல்குடா),

பத்தினியர் வள்ளியம்மை (மருத்துவிச்சி),

திருமதி. செல்லமுத்து சுவானி இளையதம்பி,

திருமதி. வேலாத்தை முருகுப்பிள்ளை (சுளுக்குப்பார்ப்பவர்),

திருமதி. நேசம்மா பிள்ளையான்,

கணபதி அன்னமுத்து,

கண்ணியர் சின்னப்பிள்ளை.

**இப்பிரதேசத்தில் விதானைமார்களாக கடமையாற்றியவர்கள்.**

(காலமாகிவிட்டனர்)

அமரர். திரு. கணபதிப்பிள்ளை விதானையார்.

அமரர். திரு. இராசு ஆதிலிங்கம் (கல்குடா)

அமரர். திரு. எஸ். ஆறுமுகம் விதானையார்.

அமரர். திரு. சு. இராசநாயகம் விதானையார்.

அமரர். திரு. சி. சின்னத்தம்பி விதானையார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர். திரு. A. ஆறுமுகம் விதானையார் (கல்குடா)
அமரர். திரு. கேசவன் கதிர்காமத்தம்பி விதானையார். (கல்குடா)
அமரர். திரு. க. பிரேம்குமார் விதானையார்.
அமரர். திரு. ஜி. வெற்றிவேல் விதானையார்
அமரர். திரு. க. கருணாகரன் விதானையார்.

**பள்ளர் இனப்பிரிவு வந்த வரலாறு**

வாழைச்சேனைக்கு இந்தியாவிலிருந்து வத்தையில் ஓடுகள், சீமெந்து போன்ற பொருட்களை ஏற்றிவந்த கூட்டத்தில், இந்தியா கறுப்பன் என்பவர் ஒருவர், வாழைச்சேனையில் குடும்பமாயிருந்த கரிக்குருவியரின் மகள் ஒன்றினை கறுப்பர் திருமணஞ் செய்தார். (பதுங்கிச் சென்று பெண்கட்டியவர்) இந்தியா கறுப்பர் பள்ளர் இனத்தினைச் சேர்ந்தவராம்.

இந்தக் கறுப்பரின் பரம்பரையில் வந்த பெண்பிள்ளைகளை செல்லையாவர், நன்னித்தம்பியர், பொன்னையாவர் ஆகியோர் திருமணஞ்செய்த காரணத்தால் ஊர் மக்கள் அவர்களை ஊரிலிருந்து ஒதுக்கி வைத்தனர். அவர்களது உடுப்புக்களை எல்லா வண்ணார்களும் கழுவ முடியாது என்றும், கறுவல் கட்டாடி மாத்திரமே அவர்களது துணிகளை வெளுக்க வேண்டும் என்றும் ஊர் மக்கள் கட்டளையிட்டதாகவும் கூறப்படுகின்றது.

கரிக்குரிருவியாருக்கு ஐந்து பெண்பிள்ளைகள் இருந்தாகக் கூறப்படுகினறது. (இத்தகவலைத் தந்தவர் தம்பியப்பா கணபதிப்பிள்ளை வைத்தியர்.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழச்சேனை கிராம சபையின் ஆரம்பகால அங்கத்தவர்கள் (மெம்பர்கள்)

கந்தன் ஆறுமுகம்

தோமஸ் பெர்னாண்டோ (வலைவாடி)

சி.ப. இராசையா (அக்கிராசனர்.)

மாசிலார் எனப்படும் மரியான்பிள்ளை (போட்டியின்றி பேத்தாழையில் தெரிவாகியவர்)

சி. ஆறுமுகம் (கதிர்காமர் சின்னத்தம்பி பரம்பரை)

க. இளையதம்பி (கல்குடா)

N. கனகரெத்தினம் (அக்கிராசானர்) வாழைச்சேனை

மெம்பர் சின்னத்தம்பி - பேத்தாழை

இ. நல்லரெத்தினம் - பேத்தாழை

A. கந்தையா மெம்பர் -பேத்தாழை

சி. கணபதிப்பிள்ளை - கல்குடா (புட்டுவர்)

சி. சிவலிங்கம் (வாழைச்சேனை, கொன்னச்சின்னாரின் மகன்)

இதில் A. கந்தையா, சி. கணபதிப்பிள்ளை, சி. சிவலிங்கம் ஆகியோர் தமிழரசுக் கட்சியின் சார்பாகப் போட்டியிட்டு வெற்றி பெற்றவர்கள்)

திரு. ம. இராமச்சந்திரன் - அக்கிராசனர் - ரெலோ)

(மாசிலார் எனப்படும் மரியான்பிள்ளை சந்தியாவரின் மனைவியின் சகோதரர்.)

ஆ. சண்முகம் (தவிசாளர்) கல்குடா

**கோறளைப்பற்று பிரதேச சபை**

திரு. வீ. இளையதம்பி (பிரதேச சபைத் தலைவர்) இரு தடவைகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மாகாண சபை**

திரு. சி. சந்திரகாந்தன் (முதலமைச்சர், பேய்த்தாழை)
நா. திரவியம் (ஜெயம்) மாகாணசபை உறுப்பினர் - பேத்தாழை

**பிரதேசசபை (வாழைச்சேனை)**

1. K. நவராசலிங்கம்
2. A. சிவநேசதுரை
3. ந. ஞானமுத்து
4. கா. நடராசா
5. அந்துணன் கந்தசாமி
6. உதயஜீவராசா (அக்கிராசனர்)
7. ரவிச்சந்திரன் (உதவி அக்கிராசனர்)

**பாராளுமன்ற உறுப்பினர்கள் (தெரிவு செய்யப்பட்டவர்கள்)**

திரு.எஸ். ஜெயானந்தமூர்த்தி (2004 - 2010) ஊடகவியலாளர் வீரகேசரி. (இவர் வாழைச்சேனையில் திருமணம் முடித்தவர்)

திரு. நிமலன் சௌந்தரநாயகம் (விபத்தில் மரணமானவர்) (இவர் வாழைச்சேனையில் திருமணம் முடித்தவர்)

திரு. சீனித்தம்பி யோகேஸ்வரன் (2010) தமிழரசுக் கட்சியின் வேட்பாளர்களில் அதி கூடிய விருப்பு வாக்குப் பெற்றவர்)

**வாழைச்சனை கிராம சபையின் நாசிவன்தீவு அங்கத்தவர்கள்**

திரு. வ. முருகேசர் (போட்டியில்லாமல் தெரிவு செய்யப்பட்டார்)
திரு. க. சின்னத்தம்பி
திரு. சீ. தம்பிமுத்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கிண்ணையடிக் கிராமத்தின் அங்கத்தவர்கள்**

சி. சண்முகம்

இராசலிங்கம் விஷவைத்தியர்.

**இப்பிரதேசத்தில் அடங்கும் முக்கிய மக்கள் தேவைகளை நிறைவேற்றும் மையங்கள்**

| | |
|---|---|
| உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயம் | - ASP |
| பொலிஸ் நிலையம் | P.O. |
| பொலிஸ் போட்ஸ் | P.P. |
| பிரதேச செயலகம் | D.S. |
| மிருகவைத்தியர் அலுவலகம் | V. |
| இலங்கை மின்சார சபை | C.E.B. |
| சுனாமி மீள்மர்வு பிரதேசங்கள் | R1, R2, R3. |
| கமநலச் சேவை நிலையம் | A.S.C. |
| சந்தை | M |
| வங்கிகள் | B (மக்கள் வங்கி, இலங்கை வங்கி) |
| பிரதேச சபை | PS |
| துறைமுகம் | H |
| வைத்தியசாலை | |
| நீதிவான் நீதிமன்றம் | C |
| பாடசாலைகள் | |
| மக்கள் வைத்தியசாலை (Dr. க. பாலகிருஷ்ணன்) நியூ சென்ரல் கிளினிக் | |
| மருந்து விற்பனை நிலையங்கள் | Pharmacy |
| பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் | |
| கோப்சிற்றி | |
| நூலகங்கள் | |
| பஸ் நிலையம் | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொமினிக்கேசன்
சிகையலங்கார நிலையங்கள்
கலாச்சார மண்டபம்
லயன்ஸ் கிளப் மண்டபம்
தேசிய சேமிப்பு வங்கி NSB
பலநோக்கு மண்டபங்கள்

**கல்குடா பிரதான வீதியில் தென்னந்தோட்டம் வாங்கிய முஸ்லீம்களின் பெயர்களும், விற்றவர்களின் பெயர்களும்.**

| விற்றவர் பெயர் | வாங்கியவர் பெயர் |
|---|---|
| கனகசபை ஓவசியர் | தாவுதின் மகன் அகமது |
| ஏரர் தோட்டம் (17 ஏக்கர்) | தாவுதீன் மகன் சீனிமுகமது |
| செல்லத்தம்பி டொக்டர் | ஈசாலெவ்பை |
| இராசையா பெருக்கிளாசியர் | லெவ்வைத்தம்பி (T.L.T. |
| ஏரர் தோட்டம் | சாப்பன் எனப்படும் மீராசாஹிப் (சாப்புக்காறன்) |

**நாடகக் கலைஞர் கண்ணப்பர் சபாபதியர்.**

இவர் இப்பிரதேசத்தில் பிறந்து தொழில் நிமித்தம் சீனன் வாடிக்குச் சென்று ட்றாமா (நாடகம்) கலையினை பழகியவர். நாடக்காரி ஒருவரையே திருமணமும் செய்தார். இவரது சகோதரர் வீரக்குட்டி, இவரது நாடகமன்றத்திற்கு வீரக்குட்டியே மனேச்சராக விருந்தார். இவரது மகள் தெய்வானையும் சிறந்த நாடக நடிகர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சபாபதியரின் வள்ளியம்மன் நாடகத்தில் நடித்த நடிகர்கள் பெயர் விபரம்**

க. சாமித்தம்பி

க. அந்தோனிப்பிள்ளை (அமிர்தவல்லி)

க. கதிர்காமத்தம்பி (கோணாமலையர்) அமிர்தவல்லியன் அப்பா.

வை.சி. ஆறுமுகம் (சாமித்தம்பி வாத்தி) ஆறுமுகக்கடவுள்

க. கதிர்காமத்தம்பி (வேலநம்பி)

க. வேலிப்பிள்ளை (2வது வள்ளி)

**சத்தியவான் சாவத்திரி நாடக நடிகர்கள்**

க. இளையதம்பி (சத்தியவான்)


ஆ. பழனியர் (சாவித்திரி)

க. நல்லதம்பி

(க. இளையதம்பி, க. நல்லதம்பி ஆகியோர் கோழிப்போடியாரின் மக்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




"வாழ் மதி" பத்திரிகைக் குழு.
1958



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Population Distribution - 2008

| *S. No.* | *GN Division Name* | *Population* | *Male* | *Female* | *Family* |
|---|---|---|---|---|---|
| 1 | Meeravodai Tamil - 202 | 1106 | 541 | 565 | 311 |
| 2 | Karuwakkerny - 202A | 1955 | 881 | 1074 | 578 |
| 3 | Kinniyadi - 202B | 2417 | 1176 | 1241 | 668 |
| 4 | Sunkankerni - 202C | 1424 | 691 | 733 | 421 |
| 5 | Kumburumoolai - 203B | 725 | 346 | 379 | 232 |
| 6 | Kalkudah - 204 | 2188 | 1083 | 1105 | 704 |
| 7 | Kalmadu - 204A | 3082 | 1506 | 1576 | 1052 |
| 8 | Valaichenai Tamil-205 | 1539 | 731 | 808 | 413 |
| 9 | Nasivantheevu - 205C | 1161 | 545 | 616 | 313 |
| 10 | Pethalai - 205B | 2878 | 1397 | 1481 | 831 |
| 11 | Puthukudiyiruppu - 205A | 1882 | 895 | 987 | 546 |
| 12 | Kannakipuram - 205D | 2028 | 981 | 1047 | 567 |
| | **Total** | **22385** | **10733** | **11612** | **6636** |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Population by ethinc wise - 2008

| *S. No.* | *GN Division Name* | *Tamils* | *Mus-lims* | *Sin-ghalese* | *Other* |
|---|---|---|---|---|---|
| 1 | Meeravodai Tamil - 202 | 1106 | - | - | - |
| 2 | Karuwakkerny - 202A | 1937 | - | - | 18 |
| 3 | Kinniyadi - 202B | 2417 | - | - | - |
| 4 | Sunkankerni - 202C | 1424 | - | - | - |
| 5 | Kumburumoolai - 203B | 725 | - | - | - |
| 6 | Kalkudah - 204 | 2133 | 1 | 22 | 32 |
| 7 | Kalmadu - 204A | 3039 | 11 | 16 | 16 |
| 8 | Valaichenai Tamil-205 | 1536 | 3 | - | - |
| 9 | Nasivantheevu - 205C | 1161 | - | - | - |
| 10 | Pethalai - 205B | 2878 | - | - | - |
| 11 | Puthukudiyiruppu - 205A | 1787 | 10 | - | 85 |
| 12 | Kannakipuram - 205D | 2024 | - | 4 | - |
| | **Total** | **22167** | **25** | **42** | **151** |

Source: GSO, Koralaipattu.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Type of Land

Divisional soil type is Sandy & Clay
Below table is govong the extent of each GS Division


| *S. No.* | *GN Division Name* | |
|---|---|---|
| 1 | Meeravodai Tamil - 202 | 4 Sq. Km |
| 2 | Karuwakkerny - 202A | 2.595 Sq. Km |
| 3 | Kinniyadi - 202B | 2.5 Sq. Km |
| 4 | Sunkankerni - 202C | 3.88 Sq. Km |
| 5 | Kumburumoolai - 203B | 6.069 Sq. Km |
| 6 | Kalkudah - 204 | 3.905 Sq. Km |
| 7 | Kalmadu - 204A | 2.63 Sq. Km |
| 8 | Valaichenai Tamil-205 | 2.59 Sq. Km |
| 9 | Nasivantheevu - 205C | 11.52 Sq. Km |
| 10 | Pethalai - 205B | 2.87 Sq. Km |
| 11 | Puthukudiyiruppu - 205A | 1.92 Sq. Km |
| 12 | Kannakipuram - 205D | 0.594 Sq. Km |

Source: Land Branch, D.S. Office, Koralaipattu.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## KORALAIPATTU D.S DIVISION




| | | | | | |
|---|---|---|---|---|---|
| ASP | – | Asst.Supdt.of Police | M | - | Market |
| PO | - | Police | B | - | Bank |
| P | - | Post Office | PS | - | Predeshiya Shaba |
| D | - | Divisional Secretariat | H | - | Harbour |
| V | - | Veterinary Office | + | - | Hospital |
| CEB | - | Ceylon Electricity Board | C | - | Magistrate Court |
| R1, R2, R3 | - | Tsunami Relocation Sites | S | - | School |
| ASC | - | Agrarian Service Centre | | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுதந்திர தினக் கொண்டாட்டமும், எண்ணெய்ச் சிந்தும்

இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் வருடா வருடம் இப்பிரதேசத்தில் உள்ள பெரிய பாடசாலைகளில் சுதந்திர தினக் கொண்டாட்டங்கள் நடைபெற்று வந்தன. அந்த நாள் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் ஒரு மகிழ்ச்சியான நாளாகும். மாணவர்கள் அனைவரும் தங்களுக்கென வெள்ளை நிறக் கொடிகளையோ அல்லது வர்ணக் கொடிகளையோ, கடதாசியில் தயாரித்து கம்பில் அல்லது ஈர்க்கில் குத்தி தயார்படுத்துவார்கள்.

பாடசாலையிலிருந்து ஊர்வலம் ஆரம்பித்து ஊரில் உள்ள முக்கிய பிரமுகர்களின் வீடுகளுக்குச் செல்வார்கள். குறிப்பாக அவ்வூர் கிராம அதிகாரி (Village head man) யின் வீட்டிற்கு சென்று அவரது முற்றத்தில் அமர்ந்திருந்து அவர் வழங்கும் பிஸ்கட் தேனீர் ஆகியவற்றினை சாப்பிட்டு நன்றி சொல்லி மீண்டும் ஊர்வலமாக பாடசாலையினை அடைவார்கள். இந்த நிகழ்வு நாளடைவில் மாறிவிட்டது.

### எண்ணெய்ச் சிந்து பாடுவது

பாடசாலைகள் வளர்ச்சி அடையாத ஆரம்ப காலங்களில் குறிப்பாக 1900 ஆண்டு காலப்பகுதியிலிருந்து மக்களின் வாழ்வோடு இணைந்த ஒரு நிகழ்வாக எண்ணெய்ச் சிந்து பாடுவது நடைமுறையில் இருந்து வந்துள்ளது. இவற்றினை நாட்டார் பாடல்கள் என்றும் கூறலாம். இவை சந்தர்ப்ப சூழ்நிலைக்கேற்ப பாடப்பட்டு வந்தன.

ஒரு மனிதனின் குழந்தைப் பருவத்திலிருந்து மரணம் வரையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வகைப்பாடல்கள் நடைபெற்று வந்தன. பிள்ளைப் பேறு தொடங்கும்போது மருத்துவிச்சி வாழ்த்துப் பாடல், குழந்தை வளர்ந்து வரும்போது விளையாட்டுப் பாடல்கள், தொழிலுக்குச் செல்லும்போது தொழில்ப்பாடல்கள், காதலிக்கும்போது காதற்பாடல்கள், மணரத்தின்போது ஒப்பாரிப் பாடல்கள் எனப் பலவகைப்பட்டன.

இத்தகைய வாய்மொழி இலக்கியத்தில் எண்ணெய்ச் சிந்துப் பாடல்களும் ஒரு வகையின். இவ்வகைப்பாடல்கள் ஒருவரால் பாடப்படவில்லை. பலரால் பாடப்பட்டன. இப்பாடல்களில் பல உண்மைகளை அறிய முடியும்.

எண்ணெய் தேய்த்து குளித்து முழுகும் பழக்கம் இன்றும் மக்கள் வாழ்வில் நடைமுறையில் உள்ளது. அத்தகைய எண்ணெய் மாணவர்களால் வீடு வீடாகச் சென்று பாட்டுப்பாடி பெற்று வந்து தம்மைப் படிப்பிக்கும் குருவிற்கு கொடுத்ததால் இப் பெயர் வந்தது. சிந்து என்பது பாவினமாகும். மட்டக்களப்பாரின் ஆரம்ப காலப் பழக்க வழக்கங்கள் ஆசிரியர் மாணவர் தொடர்பு, வார்த்தைப் பிரயோகம் பிள்ளைகளின் பிறப்பு, இறப்பு தாய் தந்தையரின் பங்களிப்பு கல்வித்தேவை, என்பன எண்ணெய்ச்சிந்துப் பாடல்களில் வருகின்றன. பிள்ளைப் பேறு இதில் முக்கிய இடம் பெறுகின்றன. இதனால் மனித விழுமியங்கள் பாதுகாக்கப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தாயின் பிள்ளைப் பேறு பற்றியது.. (சிந்து)**

*சிந்தை மகிழ்ந்து பெற்ற செய்தியைச் சொல்கிறோம்*
*நன்மையுள்ள மாதாவே நாடி நீர் கேளும் எல்லாம்*
*தன்மையுடன் எங்களை நீர் தயவாய் பெறவேண்டி*
*ஆராயும் வேதமுடன் ஐந்தெழுத்தையும் நினைத்து*
*நேராத கோவிலெல்லாம் நேர்ந்து தபசு பண்ணிக்*
*கும்பிடாக் கோயிலெல்லாம் கும்பிட்டுத் தெண்டனிட்டு*
*நம்பிடாக் கோயிலெல்லாம் நயர்ந்துமே தெண்டனிட்டு*
*அன்னம் வழங்கி அரிய தபசுபண்ணி*
*பொன்னுடனே வஸ்திரமும் போதவே தானளித்து*

என்ற தாயின் பாடலில் தாய் இறைவனை வேண்டி பிள்ளையைப் பெறும் விதம் கூறப்படுகின்றது.

**தாய் பிள்ளைப் பெறுதல் இப்பாடலில்**

*செற்பச் சுழற்சி கிறுகிறுப்பு முண்டாகி*
*பித்தமது கக்கி பெரியது யரடைந்து*
*சத்தியருவருப்பு தாங்க முடியாமல்*
*புத்தி மயங்கி புவிதனில் வீழ்ந்து*
*நித்திரை கலைந்து நினைவு தடுமாறி*
*வெற்றிலை பாக்கு விரும்பியருந்தாமல்*
*பற்றிலையோ வென்று பரனேயெனவழுதீர்*
*சேர்று மறந்தீர் சுகிர்தம் பல மறந்தீர்*
*வேறு வினைகளின்றி மெத்த மனம் சலித்தீர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை பாடுவோர், கேட்போர்களின் உள்ளங்களை நெகிழச் செய்யும் பாடல்கள்.

குழந்தை பிறந்ததும் மருத்துவிச்சி வீட்டிற்கு மேலாக உலக்கையினை எறிவாள்.

மாணவர்களைப் படிப்பிக்கும் ஆசிரியர்கள் மனம் மகிழ வேண்டும் என்பதற்காக வீடு வீடாகச் சென்று அரிசி, எண்ணெய், காய்கறி, காசு ஆகியவற்றைப் பெற்றுவந்து மாணவர்கள், ஆசிரியர்களுக்கு கொடுத்தனர்.

பாடல் இதோ....

*பாடாயிரம் பட்டார் பார்க்க வொண்ணா மாதாவே*
*எங்களுக்காக இப்பாடு பட்டதனால்*
*திட்டமுடன் ஐயர் மனம் தேற்றவேணுமென்று*
*ஆனபுதுவருடம் அடுத்த விடுதலைக்கு*
*மானமுள்ளதேசிகர்க்கு வருங்கூலி வாங்க வந்தோம்*
*அரிசி பணம் சேலை அடைவுடனே தான்வாங்க*
*பரிசுடனும் நீர் வாழும் பதிக்கு வந்தோம் மாதாவே*

*வாசித்து தந்த கடன் வைத்திருக்கலாகாதே*
*ஓதுவித்தகாசில் ஒரு காசு சிக்கி நின்றால்*
*பாதி வித்தை தானும் பலியாது மாதாவே*
*ஏட்டுச் செலவு தன்னை இல்லையென்று பிள்ளைகள் தான்*
*மோட்டுத்தனம் படுவார் முறைமையிது மாதவே*
*மாதப்பணமும் வயிற்றுப் படியரிசும்*
*போதக்கொடுத்தால் புகழுண்டு மாதாவே.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சனிக்கிழமைகளில் மாணவர் வீடு வீடாகச் சென்று....

*சனியெண்ணெய்க் கென்று வந்தோம் தாயே சலியாதே,*
*இனியெண்ணெய் இல்லை யென்றேது முரையாதே*
*வருந்திப் படிப்பித்த வாத்தியார் தன்கூலி*
*பொருத்த முடனளித்தால் புண்ணிய முண்டெங்களுக்கு*

செய்த வேலைக்கு கட்டாயம் கூலி வழங்க வேண்டும் என்ற சிந்துப்பாடல்

*நீ தந்த செல்வம் சிறப்பாய் மிகப் பெரிவும்*
*காதற்ற வூசி கடைவழிக்கு மாகாது*
*வண்ணான் தன்கூலி*
*மருத்துவிச்சி கூலி*
*அண்ணாவியின் கூலி*
*ஆன பண்டிதன் கூலி*
*உற்ற கலையோது விக்கும்*
*உபாத்தியாயர் தன் கூலி*
*நற்றிறமாய் வேலை செய்யும்*
*நாவிதன் கூலி*
*இத்தகையோர் கூலிகளை*
*இல்லையென்றில் மாதாவே*
*நரகத்திற்கே போவார்கள்.*

(மேற்படி இரு பாடல்கள் எனது தாய்மாமனாகிய கோணைமலை எனப்படும். கந்தையா, கதிர்காமத்தம்பியின் வாயால் சிறுவயதில் நான் பாடக் கேட்டவை. இவர் ஒரு நாடக நடிக்கரும் கூட.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சில முக்கிய குறிப்புகள்.**

ஒரு தியாவட்டவான் காணி உறுதி அழிந்து போயுள்ளது. 1942 இல் எழுதப்பட்ட உறுதி அதன்படி பலாவடிவளவு - ஓட்டமாவடி வளவின் பெயர் அயல் வளவில் குடியிருந்தவர். வேலுப்பிள்ளை (மலையாளம்)

**லேடிஹவலொக்**

கல்குடா கடலில் ஒரு நீர் மூழ்கிக் கப்பலின் குழாய் நீண்ட பல காலமாகத் தெரிந்தது. அது ஒரு வர்த்தகக் கப்பலாகும். யுத்தத்தின் போது குண்டு போடப்பட்டு உடைந்தது. அதிலிருந்த அநேகம் (உணவுப் பொருட்கள் உட்பட) பொருட்கள் கடலில் மிதந்து கரையினை அடைந்தன. ஊர் மக்கள், மீனவர்கள் அவற்றினைப் பொறுக்கி எடுத்தனர்.

அக் கப்பலின் பெயர் ஓர் ஆங்கிலத்தேசாதிபதியின் மனைவியின் பெயராகும். கொழும்பில் உள்ள ஒரு வீதிக்கு ஹவலொக் வீதி என்ற பெயரும் உள்ளது.

**ஓட்டமாவடியில் குடியிருந்த தமிழ் குடும்பங்களின் இடப்பெயர்வு**

"கரையார்கள்" எனப்படும் மீன்பிடிப்போர், ஆற்றோரங்களில் தான் வாழ்ந்தனர். 1899 - 1920 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் ஓட்டமாவடிப் பாலம் கட்டப்பட்டபோது பொறியியலாளர்கள், தொழில்நுட்ப வியலாளர்கள் ஓடாவிமார், கம்மாளர்கள், தொழிலாளர்கள் என்பவர்களின் வருகை அதிகரித்திருந்தது. அதனைத் தொடர்ந்து போக்குவரத்து வசதிகள் ஏற்பட்டதும் மக்கள் வாழ்வில் பல மாற்றங்கள் ஏற்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓட்டமாவடிப் பாலத்தின் சுற்றாடல்களில் குடியிருந்த மேற்படி பணியாளர்கள் மெல்ல மெல்ல கிராம மக்களுடன் நட்புறவு கொண்டனர். திருமணமும் செய்து கொண்டனர். அதனைத் தொடர்ந்து அவர்களின் உறவினர்களும் குடியேறத் தொடங்கினர். கலப்புத் திருமணங்கள் நடந்தன. தமிழ் சிங்கள மக்களும் ஒரு குறிப்பிட்ட அளவு முஸ்லீம்களும் திருமணம் செய்து கொண்டனர். அநேக முஸ்லீம்கள் இதனை ஆதரிக்கவில்லை.

தற்போது ஓட்டமாவடியாகவுள்ள கிராமத்திற்கு அக்காலகட்டத்தில் பாலவேலைக்கு வந்த ஆரப்பத்தை, மட்டக்களப்பு, வந்தாறுமூலை, சித்தாண்டி, செங்கலடி, முறக்கட்டான்சேனை, கிரான் போன்ற ஊர் தமிழ்மக்கள் பிழைப்புத்தேடிவந்து வாழைச்சேனை, ஓட்டமாவடி பகுதிகளில் குடியேறினார்கள். ஓட்டமாவடி கிராம மத்தியில் பரம்பரையாக வாழ்ந்த மக்கள் பல்வேறு நெருக்கடிகளால் குடிபெயர்ந்து, 1960 களில் கறுவாக்கேணியில் குடியேறினர்.

1922 இல் புகையிரதப் பாதையும், தார்ப்பாதையும் கிராமத்தின் மத்தியினூடாகவே அமைக்கப்பட்டது. அவற்றின் இரு மருங்கிலும், ஓட்டமாவடி புகையிரதக் கடவை அமைந்துள்ள சந்தியின் இரு மருங்கிலும் தமிழ் மக்கள் நெருக்கமாக குடியிருந்தனர்.

மக்கள் சனத்தொகைப் பெருக்கத்தினால் பல்வேறு தேவைகள் அதிகரிக்க சலவைத் தொழிலாளர்கள் என்பவர்களும் தொடர்ந்து 1930 களில் பாடசாலைகள் அதிகரித்ததும், அங்கு குடியிருந்தவர்கள் தமிழர்களாக இருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கீர்தம்பி ஆசிரியர் தோப்பூரிலிருந்து வந்தவர். அக்காலத்தில் ஓட்டமாவடிச் சந்தியில் கலந்தர் என்பவரின் தேனீர் கடையும், முஸ்தபா (மூசாப்பர்) என்பவரின் புடவைக்கடையும், 1938 இல் ஓட்டமாவடி "ஆலயடி சித்தி விநாயகர்" ஆலயமும் புகையிரத தொழிலாளர்களுக்கான காங்கியும் அமைந்திருந்தன.

மத்தசாமி என்னும் சிங்களவரும் (பின்னர் முஸ்லீமாக மாறினார்.) பாஞ்சான் ஹாசியாரும் சில்லறைக்கடை வைத்திருந்தனர். 1942 இல் அரசாங்கத்தினால் காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டன. தியாவட்டவானிலும், வயற்காணிகள், மைலங்கரச்சைக் காட்டுப்பகுதியிலும், காவத்தமுனை, வாகநேரிப் பகுதியிலும் பகிர்ந்தளிக்கப்பட்டன.

1948 க்குப் பின்னர் டி.எஸ். சேனநாயகாவின் அரசாங்கத்தில் கைத்தொழில் அமைச்சரானார். V. நல்லையா மாஸ்டர் (உதவி அமைச்சர்), கல்குடா பாராளுமன்ற உறுப்பினரானார். வாழைச்சேனை காகித தொழிற்சாலை இவரது காலத்தில் அமைக்கப்பட்டது. E.C.C என்னும் கொழும்புக் கம்பெனி காகித ஆலை நிருமாண வேலைகளில் ஈடுபட்டது. பல தொழிலாளர்கள் யாழ்ப்பாணம் உட்பட இங்கு வந்து குடியேறினர். காவத்தைமுனைச் சந்திவரையில் தமிழ்மக்கள் குடியிருந்தனர். அவர்களது காணிகள் (மாமரம், தென்னைமரத் தோப்புகள் உட்பட) காகித ஆலைக்காக கையேற்கப்பட்டன)

இவ்வகையில் (10) பத்து தமிழ் குடும்பங்களின் காணிகள் பறிபோயின இவர்களுக்காக மாற்றுக் காணிகள் தியாவட்டவானில் வழங்கப்பட்டது. இதுவே முஸ்லீம் பகுதிகளிலிருந்த தமிழர்களின் முதலாவது இடப் பெயர்வாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1963 இல் யாழப்பாண வர்த்தகர்கள் ஓட்டமாவடியில் கடைவைத்தனர். இக் காலப்பகுதியில் ஓட்டமாவடிப் பிள்ளையார் கோவிலுக்கு எதிர்ப்பக்கத்திலிருந்த குடும்பங்கள் கறுவாக்கேணி, கொண்டையன்கேணி ஆகிய பகுதிகளுக்கு இடம்பெயர்ந்தனர். அவர்களில் சதாசிவம் ஓடாவியார் தங்கராசா, இளையார், பொன்னையா குடும்பத்தினர், முருகேசு, இராசலிங்கம் ஆகியோர் சிலராகும். இவர்களில் பலர் தமது காணிகளை முஸ்லீம் மக்களுக்கு விற்று விட்டுச் சென்றனர். சிலர் தமது வீடுகளை காகித ஆலையில் வேலை செய்த யாழ்ப்பாணத் தமிழர்களுக்கு வாடகைக்கு விட்டனர். இது இரண்டாவது குடியகல்வாகும்.

தற்போது ஓட்டமாவடி தபால் நிலையம், பிரதேச செயலகம் ஆகியன அமைந்துள்ள இடம் "சாண்டார" இனத்தினரின் சுடலையாகும். இது "சாண்டாண்ட சவுக்காலை" என அழைக்கப்பட்டது. சுடலையை அண்டிய உள்வீதியல் தம்பிராசா கிளாக்கர், செல்லத்துரை வைத்தியர் குடும்பம், நாராயணபிள்ளை குடும்பம், சிங்களவரான சேனாவின் குடும்பம் ஆகியன வசித்து வந்தன. சாப்பாட்டுக்கடை சுப்பிரமணியத்தார் சில யாழ்ப்பாணத் தமிழர்களான செல்லத்துரை, தெய்வேந்திரம், மகேந்திரன் ஆகியோர் காணிகள் வாங்கி வீடுகள் கட்டியிருந்தனர்.

ஓட்டமாவடி பிரதான வீதியில் கிருஷ்ணன் பூசாரியார், கண்ணகை வேலுப்பிள்ளை, சண்முகம் கங்காணியார் அவரது மகள் பத்மாவதி மருமகன் தியாகி ஆகியோர் பால வேலைக்கு வந்த குடும்பத்தினர் இவர்கள் பசீஸ் முதலாளியின் தூரசேவை பஸ் நிறுத்தும் கடை அமைந்துள்ள இடத்தில் குடியிருந்தனர். இவர்கள் 1986 வரையில் அந்த இடங்களில் குடியிருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆற்றங்கரைப் பக்கமாக (15) பதினைந்து சலவைத் தொழிலாளர் குடும்பங்கள் குடியிருந்தனர். மூன்று (3) கொல்லர்களும், ஒரு தையல் காரரும் வசித்தனர். பிள்ளையார்கோவில் அருகில் முத்துலிங்கம், நாகமணி சொந்தமாகக் குடியிருந்தனர். இக்காலத்தில் தமிழ் முஸ்லீம்களின் மத்தியில் எதுவித வேற்றுமைகளும் இருக்கவில்லை. சகவாழ்வு நிலையிருந்தது. 1981 இல் தமிழ் போராளி குழுக்களின் தோற்றம் 1984 இல் புத்தளம் பள்ளிவாசல் கொலை ஆகியவற்றை அடுத்து கலவரங்கள் பரவலாக ஏற்பட்டு இரு சமூகங்களிடையும் இன விரிசல் ஏற்பட்டது. தீ வைப்பு இனத்தாக்குதல் ஆகியன ஏற்பட தமிழ் மக்களின் இடப்பெயர்வு ஏற்படலாயிற்று.

(இத்தகவலை வழங்கியவர் திரு. பாலசுப்பிரமணியம் (இலிகிதர்) ஓட்டமாவடியில் இவரது பரம்பரை குடியிருந்தது.)

**நாவலடிச் சந்தியில் தமிழ் இளைஞர்களின் குடியேற்றம்**

சுமார் ஐம்பது வருடகாலங்களுக்கு முன்னர் 1960 இல் வாழைச்சேனை பிரதேச செயலகத்தில் பிரதம இலிகிதராக கடமையாற்றிய அமரர். வேலுப்பிள்ளை ஞானமுத்து அவர்கள் வாழைச்சேனையில் படித்த இளைஞர்களைத் தெரிவு செய்து மட்டக்களப்பிலிருந்து திருகோணமலைக்குச் செல்லும் பாதையும், கொழும்புக்குச் செல்லும் பாதையும் பிரியுமிடமான நாவலடிச் சந்தியில் பாதையின் வட பக்கமாக கரவாகனின் ஏற்றம் தொடங்கி உசன் ஏற்றம் வரையில் உள்ள காடாக கிடந்த அரச காணியினை தலா அரை ஏக்கர் வீதம் அவர்களுக்கு பங்கீட்டளித்து சிறு சேனைப் பயிர்ச் செய்கையில் ஈடுபடுத்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வகையில் சுமார் (50) ஐம்பது படித்த இளைஞர்கள் குறித்த காணிகளை மரம் வெட்டி துப்பரவு செய்து குடிசைகளை அமைத்து சோளன், வாழை, மரவள்ளி, தென்னம்பிள்ளை போன்றவற்றினை நட்டு பயிர் செய்தனர். இவ் இளைஞர்களுக்கு அக்காலத்தில் எவரும் உதவி செய்வதற்கு முன்வரவில்லை. அவர்களது பெற்றோர்கள் கூட அவர்களுக்கு உதவவில்லை. இந்நிலையில் அக்காணிகளில் உள்ள பயிர்கள் பயன்கொடுக்க ஆயத்தமாகிய வேளையில் (சோளன் குலை போட்டுவிட்டது) யாரோ விஷமிகளால் அவர்களது பயிர் நிலங்களுக்குள் எருமை மாடுகளை ஏவி விடப்பட்டு பயிர்கள் துவசம் செய்யப்பட்டது. அன்றிலிருந்து இவ் இளைஞர்களும் மனமுடைந்து எதுவித பயனுமின்றி அக்காணிகளை விட்டு வெளியேறினர். அக்காலத்தில் சந்தியில் நின்றிருந்த புளிய மரத்தின் கீழ் மௌலானா என்பவர் தேனீர்கடை வைத்திருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந் நூலின் மூலத ஆதாரம்

இந் நூலினை எழுதுவதற்கு எனக்கு, வாழைச்சேனைப் பிரதேச செயலகத்தில் கலாச்சார உத்தியோகத்தராக கடமையாற்றிய திரு.கே.எஸ்.சிவகுமார் B.A. அவர்கள் தந்த புகைப்படப் பிரதியான கையெழுத்துப்பிரதி உந்துகோலாய் அமைந்தது. இப்பிரதி திரு.வீ. இளையதம்பி (ஓய்வுபெற்ற அதிபர்) அவர்களின் கைப்பட எழுதப்பட்டிருந்தது.

தற்போது அவர் அவுஸ்திரேலியாவில் வசித்து வருகின்றார். பல கஷ்டத்தின் மத்தியில் அவருடன் நான் தொடர்பு கொண்டபோது. அவ் வரலாற்றுக் கையெழுத்துப் பிரதியினை தானே எழுதியது என்றும், பேய்த்தாழையைச் சேர்ந்த வெ ர்ளை ஆறுமுகத்தார் எனப்படும் சின்னத்தம்பி ஆறுமுகம் (முன்னாள் கிராம சபை அங்கத்தவர்) என்பவர் வரலாற்றினைச் சொல்லச் சொல்ல தான் அருகிலிருந்து எழுதியதாகவும் என்னிடம் கூறினார்.

ஆறுமுகம் பட்டங்கட்டி (1767 - 1772)யின் நான்காவது பரம்பரையில் வந்தவர் சின்னத்தம்பி ஆறுமுகம் என்பவர். அவர் இக் கையெழுத்துப் பிரதியினை, வழிவழியாக செவியேறல் மூலம் கேட்டு இதனைத் தொகுத்து, எழுதுவதற்கு முயன்றதாக தன்னிடம் தெரிவித்தாதாக திரு.வீ. இளையதம்பி அவர்கள் கூறினார். இக் கையெழுத்துப் பிரதி 22 பக்கங்களையுடைது.

எமது கோறளைப்பற்று வாழைச்சேனைப் பிரதேசத்தின் வரலாறு மறையாது வழிவகுத்துச் சென்ற அன்னாரை இப்பிரதேச மக்கள் என்றும் நினைவு கூரக் கடமைப்பட்டவர்களாவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மாற்றுக் கருத்து.**

இப்பிரதேசத்தில் பேத்தாழை தொடக்கம் கல்குடா வரையில் முஸ்லீம்கள் வாழ்ந்ததற்கான ஆதாரங்கள் உள்ளன. என்று ஒரு வரலாற்று ஆசிரியர் குறிப்பிடுகின்றார். அத்துடன் வாகநேரி, மதுரங்கேணிக்குளம் ஆகிய பகுதிகளிலும் முஸ்லீம்கள் வாழ்ந்துள்ளதாகவும், ஒரு தேர்தல் விஞ்ஞாபனத்தில் (2010) குறிப்பிடப்பட்டுள்ளது. இக் கூற்றினை ஏற்றுக் கொள்ள முடியாது. வாழைச்சேனை கல்குடா பிரதான வீதியில் பேய்த்தாழை தொடக்கம் கும்புறுமூலைக்குச் செல்லும் பிரதான பதை வரை முஸ்லீம் தனவந்தர்களின் தென்னந் தோட்டங்கள் இருந்தது உண்மை. அங்கு எந்த முஸ்லீம் குடும்பங்களும் குடியாக வசித்து வரவில்லை. காவலுக்கும் இருக்கவில்லை. அவர்களது தென்னந்தோட்டங்களில் தமிழர்களே கூலியாட்களாகவும் காவல்காரர்களாகவும் இருந்துள்ளனர். என்பதே அனைவரும் அறிந்த உண்மையாக உள்ளது. ஏனைய பகுதிகளில் மீன் பிடிக்கவும் விவசாயம் செய்யவுமே தற்காலிகமாக குடியமர்ந்திருந்தனர்.

**இவ் வரலாற்று நூலினை எழுதுவதற்கு வரைபடங்கள், புள்ளி விபரங்கள், குறிப்புகள், புகைப்படங்கள் ஆகியன தந்து உதவியவர்களும், உசாத்துணை நூல்களும்**

- பிரதேச செயலகம் - வாழைசசேனை.
- திரு. க. திருநாவுக்கரசு (ஓய்வுபெற்ற அதிபர்) - வாழைச்சேனை.
- திரு. வீ. இளையதம்பி (ஓய்வு பெற்ற அதிபர்) - வாழைச்சேனை
- திரு. சி. ஞானராசா (ஓய்வுபெற்ற தபாலதிபர்) - பேய்த்தாழை.
- திரு. பெ. புண்ணியமூர்த்தி (சிவநெறிப்புரவலர்) ஓய்வுபெற்ற அதிபர் - வாழைச்சேனை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


- திரு. உ. தங்கராசா (ஓய்வுபெற்ற காகித ஆலை ஊழியர்)
- கோறளைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள பன்னிரு கிராம சேவை உத்தியோகத்தர்களும்.
- கோறளைப்பற்று பிரதேச ஆக்க இலக்கியப் படைப்பாளிகள்
- ஆய்வுக்கட்டுரை (திரு. கந்தசாமி - நிதிகரன்)
- தப்பியப்பா கணபதிப்பிள்ளை (ஓய்வூதியர் - விஷவைத்தியர்)
- க. இராசநாயகம் (சமூகசேவையாளரும், ஒப்பந்தகாரரும்)
- கா. இரத்தினம் (ஸ்ரீமுருகன் ஆலயம் - பேய்த்தாழை)
- செல்வராசா கேதீஸ்வரன் (கண்ணன் சம்பூர்) புகைப்படப் பிடிப்பாளர்.
- கதிர் தனிகாசலம் எழுதிய "தமிழர் வரலாறும் இலங்கை இடப்பெயர் ஆய்வும்"
- அருட்பணி செ.டே.ப. செல்வன் - பொறுப்புத் திருப்பணியாளர்
- திரு. வாகரைவாணனை - ஆசிரியராகக் கொண்ட "கறுப்பு நிலா" சஞ்சிகையில் திருமதி. அமுதா வரதராஸ் எழுதிய கட்டுரை.
- சபாபதி தம்பிரசா கண்ணகியம்மன் ஆலய வீதி - வாழைச்சேனை.
- க.பாலசந்திரன் (ஆசிரிய ஆலோசகர்) கல்வித் திணைக்களம்.
- கவிஞர் முத்து மாதவன்
- ஆ. அருணாசலம் (ஓய்வூதியம் - கல்குடா)
- திரு. மு. தவராசா (ஓய்வுபெற்ற அதிபரும், எழுத்தாளரும்)
- மு. பாலசுப்பிரமணியம் (இலிகிதர்) இவரது பரம்பரையினர் ஓட்டமாவடியில் வசித்து வந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வாழைச்சேனை ஸ்ரீ கயிலாயபிள்ளையார் ஆலயம்.




வாழைச்சேனை ஸ்ரீ கயிலாயபிள்ளையார் ஆலய பின் கோபுரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




1982 இல் 2வது கும்பாபிஷேகத்தின் போது இவ்வாலயம் பொது மக்களால் பொறுப்பேற்கப்பட்டு, மூலஸ்தானத்தில் பிள்ளையார் பிரதிஸ்டை செய்யப்பட்ட போது எடுக்கப்பட்ட படம்.



1990 இல் நவக்கிரக ஆலயத்திற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தினரால் அடிக்கல் நடப்பட்ட பொது எடுக்கப்பட்ட படம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




1990 இல் கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களுடன் ஆலய குருக்கள் தாமோதரம்பிள்ளை.
சண்டேஸ்வர ஆலயத்தின் முன்னால் எடுக்கப்பட்ட படம்.




1990 இல் சிவமஸ்ரீ க.தாமோரம்பிள்ளை குருக்களுக்கு அரை நூற்றாண்டு காலங்களுக்கு மேலான சேவையினைப் பாராட்டி ஆலய பரிபாலன சபைத்தலைவர் க. திருநாவுக்கரசு அவர்களால் பொன்னாடை போர்த்தி பிரியாவிடை அளித்தபோது.
பரஞ்சோதி ரீச்சரும் காணப்படுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வாழைச்சேனை ஸ்ரீ கயிலாயபிள்ளையார்
முத்து மாரியம்மன் ஆலயம்.



வாழைச்சேனை பேச்சியம்மன் ஆலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வாழைச்சேனை மக்கள் வங்கியடி செல்வவிநாயகர் ஆலயம்.




வாழைச்சேனை புனித திரேசம்மாள்
ரோமன் கத்தோலிக்க தேவாலயம்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வாழைச்சேனை பரியோவான் ஆலயம்.





அசம்பளி ஒவ் கோட் - வாழைச்சேனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பேய்த்தாழை வீரையடிப் பிள்ளையார் ஆலயத்தின் தோற்றம்.



பேய்த்தாழை மாவடி மாரியம்மன் ஆலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பேய்த்தாழை விஷ்ணு ஆலயம்.



பேய்த்தாழை ஸ்ரீ முருகன் ஆலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பேய்த்தாழை பாலீஸ்வரர் ஆலயம்.




பேய்த்தாழை நாற்சதுர சுவிஷேசசபை. (1989)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பேய்த்தாழை பொது மயானம்.



பேய்த்தாழையில் புதிதாக அமைக்கப்படும் மேல்மாடி நூலகம் 2010



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கருங்காலிச்சோலை நாகதம்பிரான் கோவில்.



கல்குடா நாமகள் வித்தியாலயமும், 2004 இல் சுனாமியில் மரணித்த இவ்வித்தியாலயத்ததைச் சேர்ந்த 66 மாணவர்களுக்குமான நினைவுத்தூபியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கல்குடா பிள்ளையார் கோயில்.



கல்குடா மெதடிஸ்த தேவாலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பாசிக்குடா ஸ்ரீ முத்து மாரியம்மன் ஆலயம்.



1931 இல் புகையிரதப்பாதை போடப்பட்டபோது, இந்தியத் தொழிலாளர்கள் வழிபட்ட முனைமுருகன் ஆலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சுனாமிக்கு முன்னர் முனை முருகன் கோவில் மண்டபம்.




சுனாமிக்குப் பின்னர் ஆலயத்தில் நடைபெற்ற பூசை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சுனாமிக்குப்பின் உள்ள தோற்றம், தற்போது அழிக்கப்பட்டுள்ளது.



பட்டியடிச்சேனை ஸ்ரீ பத்திரகாளியம்மன் ஆலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




புதுக்குடியிருப்பு கண்ணகி அம்மன் ஆலயம்.



புதுக்குடியிருப்பு பத்திரகாளியம்மன் ஆலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




விநாயகபுரம் பிள்ளையார் ஆலயம். (1990)



விநாயகபுரம் மாரியம்மன் ஆலயம். (1990)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




விநாயகபுரம் விநாயகர் வித்தியாலயம்.



கண்ணகிபுரம் பிள்ளையார் கோவில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கண்ணகிபுரம் கிறிஸ்தவ குடும்பசபை.




சுனாமியினால் (2004) அழிவடைந்து காணப்படும்
ஆலயமும் + நூலாசிரியரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கல்குடா கரையில் வளரும் இயற்கைத் தாவரங்களான நாகதாளி, எருக்கிலை முதலியனவும் + நூலாசிரியரும்.



பாசிக்குடா கடற்கரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கல்குடா கடற்கரையில் சுனாமியால் (2004) அழிவடைந்த
நோனாக்கோரி (வெளிச்சவீடு) யின் அத்திரவாரமும் - நூலாசிரியரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிழைகளும் திருத்தங்களும்

| பக் | பிழை | திருத்தம் |
|---|---|---|
| X | சி.கணபதிப்பிள்ளை (வைத்தியர்) | குமாரவேல் கணபதிப்பிள்ளை |
| X | கே.எஸ்.தாராளசிங்கம் | கே.எஸ்.காராளசிங்கம் |
| 6 | மாணிக்ககங்கை (தெற்கில்) | வடக்கில் மகாவலி கங்கை |
| 7 | மாணிக்ககங்கை | மகாவலி கங்கை |
| 11 | ஒருவனான பத்தி என்பவனை அவன் பெயராலேயே | ஒருத்தியான பத்தி என்பவளை அவள் பெயராலேயே |
| 26,35 ,46 | மீறாவோடை (திரிவுபட்ட பெயர்) | முறாவோடை(முறாக்கை மீன்கள் நிறைந்த ஓடை) |
| 34 | கல்குடாவில | கல்குடாவில் |
| 40 | ஏனோா தெரியவில்லை | ஏனோ தெரியவில்லை |
| 43 | காடாயக்கிடந்த | காடாய்க்கிடந்த |
| 52 | ம.புஸ்பராச | ம.புஸ்பராசா |
| 66,68 | த.சுந்தரலிங்கம்(அதிபர்) | த.சந்திரலிங்கம்(அதிபர்) |
| 66 | க.திர்காமநாதன் (உப அதிபர்) | க.கதிர்காமநாதன் (அதிபர்) |
| 72 | ஜனாப்.H.M.காதா | ஜனாப் H.M.காதர் |
| 122 | தம்பியப்பா கணபதிப்பிள்ளை (விஷ வைத்தியர்) | தம்பியப்பா கணபதிப்பிள்ளை (முறிவு வைத்தியர்) |

**குறிப்பு:** இந்நூலில் காணப்படும் பிழைகள் எதுவாயினும் துணிச்சலுடன் வாசகர்கள் சுட்டிக்காட்டினால் எனக்குப் பெரிய உதவியாயிருக்கும் திருத்தப்பதிப்பு வெளியிடவும் ஊன்றுகோலாகும்.

நன்றி


அன்புடன் - ஆசிரியர்

**கலாபூஷணம் தாழை செல்வநாயகம்**

பேய்த்தாழை,

வாழைச்சேனை.

தொ.பே. இல: 0773107524



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நூலாசிரியர் பற்றி:

மட்டக்களப்பு, வாழைச்சேனையைப் பிறப்பிடமாகக் கொண்ட கந்தையா செல்வநாயகம் (தாழைசெல்வநாயகம்) என்பவர் இலங்கை அரசினால் கலைத் துறையில் ஈடுபடுபவர்களுக்கு வழங்கப்படும் அதிஉயர் விருதான "கலாபூசணம்" விருதினை 2008ம் ஆண்டில் பெற்றவர்.

கிழக்கு மாகாண சபையின் கலை கலாசார விருதான "ஆளுநர்விருதினை" 2007இல் பெற்றவர். 2009இல் சிறுகதைக்காக கலாசாரத் திணைக்களத்தின் தேசிய விருதான சாஹித்திய விருதினைப் பெற்றவர். "நோர்வே மோல்டே" தமிழ் கலாசாரப் பேரவையின் நாடக ஆக்கப் போட்டியில் சிறந்த நாடகத்திற்கான பரிசினைப் பெற்றவர் (1993). 1982இல் மட்டக்களப்பு "தாரகை" சஞ்சிகையின் அகில இலங்கை சிறுகதைப் போட்டியில் 1ம் பரிசு பெற்றவர். 2002இல் கோறளைப்பற்று, பிரதேச செயலக கலாசாரப் பேரவையின் கலைஞர் கௌரவம் பெற்றவர். 2003இல் தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் கலைஞர் கௌரவம் பெற்றவர். 2009இல் கொழும்பு "ஞானம் சஞ்சிகை" சிறுகதைப் போட்டியில் பரிசு பெற்றவர். அத்துடன், சிறுகதை, கட்டுரைகள், கவிதைகள், நாடகங்கள் எழுதுவதில் ஆற்றல் பெற்ற இவர் ஒரு நாடக நடிகருமாவார்.

**வெளியிட்ட நூல்கள்:**

ஏதிலிகள் (சிறுகதை)

ஈழம் வருகிறான் பாரதி (நாடகம்)

**வெளிவர இருப்பவை:**

1. "நாகமரச் சோலை" - நாவல் (அச்சில் உள்ளது)
2. "நக்கல் சோறு" சிறுகதை - அச்சில்
3. வள்ளியம்மன் நாடகம் (கூத்து)
   (தொகுப்பு)

**வேறு சாதனைகள்:**

இவரது நான்கு (4) சிறுகதைகள் முதலாவது மாவட்டப் பரிசுகளையும், ஒரு (1) சிறுகதை (தோடம்பழக் காசி) தேசிய சாஹித்திய 1ம் பரிசினையும் பெற்றுள்ளன.

தேசபந்து, லயன்

**கலாநிதி. வை. வீரசிங்கம்** J.P.

(அகில இலங்கை சமாதான நீதிவான்)

உரிமையாள். ஆதவன் அச்சகம், மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org